# உதயன்

13 FEB 2015

விலை ரூ.20

பக்கம் 28

சுடர் 30 | கதிர் 079 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 01 வெள்ளிக்கிழமை 13-02-2015


## வடக்குத் தீர்மானம் வலுக்கின்றது ஆதரவு

சென்னை, பெப். 13
ஈழத் தமிழர்களுக்கு உலக அரங்கில் நீதி கிடைக்க வேண்டுமெனில், நடைபெற இருக்கின்ற தமிழகச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், இலங்கையின் வடக்கு மாகாண சபை பிரகடனம் செய்துள்ள தீர்மானத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றத் தமிழக முதலமைச்சர் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. கோரிக்கை விடுத்துள்ளார். பக்.2

## இந்தியப் படகுகள் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.13
இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 87 இந்தியப்படகுகளையும் விடுவிக்குமாறு அந்தந்த நீதிமன்றங்கள் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளன. பக்.2

## ரயில் சேவை ஆரம்ப விழாவில் மோடி

யாழ்ப்பாணம், பெப். 13
திருகேதீஸ்வரத்திலிருந்து – தலைமன்னார் வரையிலான ரயில் சேவை ஆரம்ப நிகழ்வில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்ளவுள்ளார். இலங்கைக்கு வரவுள்ள இந்தியப் பிரதமரான மோடி வடக்கில் மன்னார், யாழ்ப்பாணத்துக்கும் கிழக்கின் திருகோணமலைக்கும் செல்லவுள்ளார். பக்.24



# 1000 ஏக்கர்கள் விரைவில் விடுவிப்பு

### வளலாயில் 240 ஏக்கர் நிலப்பரப்பில் முதலில் மீள்குடியேற்றம்; நிராகரிக்கப்பட்ட திட்டத்தில் தொடங்குகிறது மைத்திரி அரசு

கொழும்பு, பெப். 13
யாழ்ப்பாணத்தின் வடக்கே பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகத்தைச் சூழ இலங்கைப் படைகளால் தமிழர்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணிகளில் ஆயிரம் ஏக்கரை விரைவில் விடுவிக்கப் போவதாகக் கொழும்பு அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த இந்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்தது என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

விடுவிக்கப்படவுள்ள ஆயிரம் ஏக்கரில், முதற் கட்டமாக 240 ஏக்கர் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பகுதியில் இருக்கும் வளலாய் - ஜே/284 கிராம சேவகர் பிரிவே முதலில் விடுவிக்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் மாதிரிக் கிராமம் ஒன்றைச் சகல வசதிகளுடனும் அமைத்து மீள்குடியேற்றத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அரசு அறிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மாதிரிக் கிராம அமைப்புத் திட்டம், அப்போது அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருந்தது. அதனையே முதற்கட்டமாக விடுவிக்கப்போவதாக மைத்திரிபால அரசு நேற்று அறிவித்தது. பக்கம் 24

## கிழக்கிலும் விடுவிப்பு

கொழும்பு, பெப். 13
வடக்கில் ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்படும் அதேநேரத்தில் கிழக்கு மாகாணத்திலும் சிறியளவு காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. .


பானம பகுதியில் இலங்கை விமானப் படையினர் வசமுள்ள நிலப்பரப்பில், 25 ஏக்கர் தவிர்ந்த ஏனையவற்றை விடுவிக்க கொழும்பு அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் பகுதியில் காணி இல்லாத மக்கள் குடியேற்றப்படவுள்ளனர் என்று அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

கிழக்கில் இராணுவம் அபகரித்து வைத்துள்ள சம்பூர் உட்பட ஏனைய பகுதிகளிலுள்ள காணிகளை விடுவிப்பது குறித்தும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள வளாகத்தைச் சுற்றியும் அலரி மாளிகையைச் சுற்றியும் மேற்கொள்ளப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தளர்த்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(உ-5)

## இதுதான் திட்டம்



யாழ்ப்பாணம், பெப். 13
வளலாயில் 240 ஏக்கரில் மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு, அதில் ஆயிரத்து 22 குடும்பங்கள் முதல் கட்டமாக மீள்குடியமர்வு செய்யப்படுவர் என்று அரசு அறிவித்துள்ளது. இந்த மாதிரிக் கிராமத் திட்டம் மஹிந்த அரசால் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுத் தமிழ் மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தையே தற்போது தூசு தட்டி புதிய அரசு செயற்படுத்த முனைகின்றது. பக்கம் 24

## "அரசிடமிருந்து இதை எதிர்பார்க்கவில்லை"



கொழும்பு, பெப். 13
"ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டதை வரவேற்கின்றோம். ஆனாலும், தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட மாதிரிக் கிராமத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, தனது தேர்தல் வாக்குறுதியை புதிய அரசு மீறுகின்றது" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். பக்கம் 24



வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்

மேகமூட்டமாகக் காணப்படும். இலேசான மழைவீழ்ச்சி ஏற்படலாம்.

கூ.வெ. 30°C    கு.வெ. 24°C

## இறுதிப்போரில் உரிமை மீறல் நம்புகின்றாராம் மங்கள

### ஐ.நா. விசாரணை அறிக்கையை பிற்போடவும் கோருகின்றார்



கொழும்பு, பெப். 13
இலங்கையின் இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றது என்பதை நம்புவதாகத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அறிக்கையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையில் பிற்போடுமாறு அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களைக் கோரியுள்ளார்.

வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். பக்கம் 24

## மார்ச் அமர்வில் வருமா விசாரணை அறிக்கை?

### ரொய்ட்டர்ஸின் கேள்விக்கு ஐ.நா. பதிலளிக்காது மௌனம்



கொழும்பு, பெப்.13
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கை திட்டமிட்டபடி அடுத்த மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுமா? என்பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை பதிலளிக்க மறுத்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இலங்கையில் நடைபெற்றன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பக்கம் 24

# வடக்குத் தீர்மானம் வலுக்கிறது ஆதரவு

## தமிழக சட்ட சபையிலும் நிறைவேற்றுமாறு ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோ கோரிக்கை

சென்னை, பெப். 13

ஈழத் தமிழர்களுக்கு உலக அரங்கில் நீதி கிடைக்க வேண்டுமெனில், நடைபெற இருக்கின்ற தமிழகச் சட்டமன்றக் கூட்டத் தொடரில், இலங்கையின் வடக்கு மாகாண சபை பிரகடனம் செய்துள்ள தீர்மானத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றத் தமிழக முதலமைச்சர் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 60 ஆண்டுகளாக இரத்தத்தாலும்-கண்ணீராலும் எழுதப்பட்ட ஈழத் தமிழர்களின் வரலாற்றில் நம்பிக்கை வெளிச்சமாக, வடக்கு மாகாண சபையில் ஒரு மகத்தான தீர்மானம் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

ஐ.நா விசாரணையினால் நீதி கிடைக்காது. ஏனெனில், 1950 ஆம் ஆண்டுகளில் தொடங்கி, இலங்கைத் தீவில் அடுத்தடுத்து வந்த சிங்களப் பேரினவாத அரசுகளால் லட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் மனித உரிமை அமர்வு மார்ச் மாதத்தில் நடக்கவுள்ளது. கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட தீர்மானம் நீர்த்துப் போனதாக இருந்தாலும், அதனையே நிராகரிக்கவும், போர்க்குற்றங்கள் குறித்து சிங்கள அரசே விசாரணை செய்து கொள்ளும் என்றும் புதிய அரசு அறிவித்து விட்டது. அதனையே



இந்தியாவின் நரேந்திர மோடி அரசு வழிமொழிய முடிவு எடுத்து விட்டது. இந்தியாவின் முன்னைய காங்கிரஸ் அரசு ஈழத் தமிழர்களுக்குச் செய்த துரோகத்தை இம்மி அளவும் பிசகாமல் நரேந்திர மோடி அரசு தொடர்ந்து செய்கிறது. இன்னும் ஒரு படி மேலே செல்லவும் துணிந்து விட்டது. ஆனால், இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்கு ஆப்பு வைக்கின்ற விதத்தில், வடக்கு மாகாண சபையின் தீர்மானம் அமைந்து இருப்பது புதிய வெளிச்சத்தையும், நம்பிக்கையையும் தருகின்றது.

2011 ஆம் ஆண்டு முதலமைச்சர் ஜெயலலிதா துணிச்சலாக முடிவு எடுத்து, இலங்கை அரசு மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார். சுதந்திரத் தமிழ் ஈழம் அமைப்பதற்கு ஈழத் தமிழர்கள் தாயகமான வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

அதில் உலக நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள், அந்தந்த நாடுகளில் வாக்கெடுப்பில் பங்கேற்க வகை செய்யவேண்டும், இனக் கொலைக் குற்றத்திற்கு ராஜபக்ஷவைச் சர்வதேச நீதிமன்றக் குற்றக் கூண்டில் நிறுத்தவேண்டும் எனத் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன்.

இதே வாசகங்களைக் கொண்ட தீர்மானம் தமிழக சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா கொண்டு வந்து நிறைவேற்றினார்.

எனவே, ஈழத்தமிழர்களுக்கு உலக அரங்கில் நீதி கிடைக்க வேண்டுமெனில், நடைபெற இருக்கின்ற தமிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில், இலங்கையின் வடக்கு மாகாண சபை பிரகடனம் செய்துள்ள தீர்மானத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றிட முதலமைச்சர் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று கேட்டுள்ளார். (த-5)

# ட்றோலர் மீன்பிடிக்கு இரு நாடுகளும் தடை

## இறுக்கமாகப் பின்பற்றவேண்டும் மைத்திரியிடம் கோரினார் விக்கி

யாழ்ப்பாணம், பெப். 13

இலங்கை-இந்திய அரசுகள் ட்றோலர் மீன்பிடியை தடை செய்வதுடன், அவ்வாறு அதனை முன்னெடுப்பதாக இருந்தால் ஆழ்கடல் பகுதியில் மாத்திரம் முன்னெடுக்க அனுமதிக்கலாம் என்றும், இதனை இறுக்கமாக இரு அரசுகளும் பின்பற்றவேண்டும் என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மறுதினம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது, மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் பேசவுள்ளார். இதற்கு முன்னோடியாக, வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் வடக்கு முதலமைச்சர் மற்றும், வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் தெரிவிக்கையில், தமிழக மீனவர்களின் ட்றோலர்கள் எவ்வாறு இலங்கைக் கடல் பகுதிக்கு அத்துமீறி நுழைகின்றன, எந்தப் பகுதிகளில் அவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்பது தொடர்பிலும், தமிழக அரசியலில் விசைப் படகு மீனவர்கள் எந்தளவு தூரத்துக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றனர் என்பது தொடர்பிலும் கடற்படைத் தளபதியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது. இதில், இந்திய ட்றோலர் படகுகளினால் இலங்கையின் கடற்படுக்கை எவ்வாறு நாசமாகின்றது என்பது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டது.

இதன் பின்னர் நான் எனது கருத்துக்களைத் தெரிவித்தேன். 1974 ஆம் ஆண்டு ட்றோலர் மீன்பிடி அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு முன்னதாக, இரு நாட்டு மீனவர்களும் எந்தப் பிரச்சினையுமின்றி பாரம்பரிய முறையில் மீன்பிடியில் ஈடுபட்டனர். இது நூற்றாண்டு காலமாக நடந்தது.

எனவே இந்திய - இலங்கை அரசுகள் ட்றோலர் மூலமான மீன்பிடியைத் தடை செய்ய வேண்டும். அல்லாவிடில், ட்றோலர் மூலமான மீன்பிடியை ஆழ்கடல் பிரதேசத்துக்கு மாற்றவேண்டும். ட்றோலர் மீன்பிடி முறையினால், நாங்கள் எங்கள் வளங்களை இழப்பதை அனுமதிக்க முடியாது. இரு தரப்பும் இணைந்து கண்காணிக்க வேண்டும். சட்டத்தை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் பாரம்பரிய முறையில் மீன்பிடிப்பதை அனுமதிக்கலாம் என்றும் குறிப்பிட்டேன். இதனை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன ஏற்றுக் கொண்டார். ஆளுநர் பளிகக்கார, இந்த நடைமுறைப்படுத்தலை ஏன் பரீட்சார்த்தமாக செய்து பார்க்கக் கூடாது என்று கேட்டார். இந்த விடயங்கள் தான் இடம்பெற்றது என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில், ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, மீன்பிடி அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன, மீன்பிடி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். (த-5)

# உணவு வகைகள் விலை குறைப்பு

## கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை மறுதினம் முதல்

கிளிநொச்சி, பெப் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உணவகங்கள், தேனீர்ச்சாலைகள் போன்றவற்றில் நாளை மறுதினம் முதல் சகல உணவுப் பண்டங்களும் விலைக் குறைப்புச் செய்யப்படவுள்ளன.

புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் உணவுப் பொருள்கள் விலைக் குறைப்பு செய்யப்பட்டதை அடுத்தே கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில் விற்கப்படும் சகல உணவுப்பொருள்களும் விலைக் குறைப்புச் செய்யப்படவுள்ளன.

கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் கரைச்சிப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் கிளிநொச்சி வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள், பொதுச் சந்தை தேனீரக உரிமையாளர்கள், கரைச்சிப் பிரதேசசபைச் செயலாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என அனைவரும் கலந்துகொண்டே இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியுள்ளனர்.

இந்தத் தீர்மானத்துக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட உணவகங்களில் நாளை மறுதினம் முதல் கீழ்க் காணும் விலைகளில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விலை விவரம் வருமாறு:-

தேநீர்-10 ரூபா, பால் தேநீர்- 25 ரூபா, வடை- 25 ரூபா, வாய்ப்பன்-25 ரூபா, சுசியம்-25 ரூபா, றோள்-25 ரூபா, குழல் பிட்டு-45 ரூபா, இடியப்பம்-5 ரூபா, தோசை -20 ரூபா, ரொட்டி-12 ரூபா, நெஸ் கோப்பி-40 ரூபா, பால் கப்-40 ரூபா, பால் கோப்பி-20 ரூபா, பிளேன் கோப்பி-20 ரூபா, முட்டைக் கொத்து-110 ரூபா, கோழி இறைச்சிக் கொத்து-180 ரூபா, மாட்டிறைச்சிக் கொத்து- 140 ரூபா, மரக்கறிக் கொத்து-100 ரூபா, சைவச் சாப்பாடு-100 ரூபா, மீன் சாப்பாடு-120 ரூபா, கோழி இறைச்சிச் சாப்பாடு-170 ரூபா, மாட்டிறைச்சிச் சாப்பாடு-140 ரூபா. (த-21)

# 100 நாள் திட்டத்தின் கீழ் யாழில் 3ஆயிரம் வீடுகள்

யாழ்ப்பாணம்.பெப்.13

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 3ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ப.ரவீந்திரன் தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நாடளாவிய ரீதியில் நலிவடைந்த குடும்பங்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 100நாள் வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் 3ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக அந்தந்தப் பிரதேச செயலங்களில் கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் நலிவுற்ற குடும்பங்களைப் பயனாளிகளாகத் தெரிவு செய்யும் நடவடிக்கைகளில் வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-14)

# இந்தியப் படகுகள் நேற்று விடுவிப்பு

## நல்லிணக்க அடிப்படையில்

யாழ்ப்பாணம்.பெப்.13

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 87 இந்தியப்படகுகளையும் விடுவிக்குமாறு அந்தந்த நீதிமன்றங்கள் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளன.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அரச உடைமையாக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கப்பட்ட போதும் படகுகளை விடுவிப்பது தொடர்பில் தொடர்ந்து பேச்சுக்கள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் நல்லிணக்க அடிப்படையில் படகுகளை விடுவிக்கப் புதிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, மன்னார், திருகோணமலை நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்பட்டுள்ள 87 படகுகளையும் விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் இரவு நீதிமன்றங்களுக்கு விடுகைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து நேற்றைய தினம் அந்தந்த நீதிமன்றங்களில் படகுகள் விடுவிப்பு தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, படகு உரிமையாளர்களின் கையொப்பப் பிரதிகளைப் பெற்றுப் படகுகளை விடுவிக்குமாறு நீதிமன்றங்கள் உத்தரவு வழங்கியுள்ளன.


ஊர்காவற்றுறை நீதிமன்றில் 34 படகுகளும், பருத்தித்துறை நீதிமன்றில் 14 படகுகளும், மன்னார் நீதிமன்றில் 38 படகுகளும், திருகோணமலை நீதிமன்றில் ஒரு படகும் என 87 படகுகள் விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை மீட்டுக் கொண்டு செல்ல இந்தியாவில் இருந்து 5 பேர் கொண்ட குழுவினர் நேற்றுக் கொழும்பு வந்துள்ளனர்.

நீதிமன்றங்களால் விடுவிப்பு செய்யப்பட்டுள்ள படகுகளை இந்திய மீனவர்கள் எடுத்துச் செல்வதற்குப் படகு உரிமைப் பத்திரம் மற்றும் பிற ஆவணங்கள் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் இந்தக் குழுவினர் கொழும்பு வந்துள்ளனர்.

படகுகள் விடுவிக்கப்பட்ட பின்னர் இலங்கைக் கடற்படையினரிடம் விடுவிப்பு செய்யப்பட்ட அனுமதிக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படும். அதனைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினரால் இந்தியக்கடலோரக்காவல் படையினரிடம் அவை ஒப்படைக்கப்படவுள்ளன .(த-14)

# கண்கவர் தொடக்கவிழா




நியூஸிலாந்து, மற்றும் ஆஸ்திரேலியா என இரு நாடுகளிலும் நேற்றைய தினம் மிகவும் கோலாகலமாக உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் தொடக்க விழா நடைபெற்றது. இந்த இரண்டு நாடுகளிலும் 14 அணிகள் பங்கேற்கும் 11வது உலகக்கிண்ண தொடர் நாளைய தினம் தொடங்குகின்றது. இதற்கான தொடக்க விழா, இரண்டு நாள் முன்னதாக நேற்று ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண், நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் ஆகிய இரண்டு மைதானங்களிலும் ஒரே நேரத்தில் நடை பெற்றன.




**பாரம்பரிய நடனம்:**
இரு நாடுகளிலும் திறந்த வெளி மைதானங்களில் மேடை அமைக்கப்பட்டிருந்தன. இரு நாட்டினதும் பாரம்பரிய இசைக்கலைஞர்கள் முதலில், தோன்றி இசைக்கருவி களை இசைத்து அசத்தினர். இதன் பின், வண்ண வண்ண ஆடை களுடன் இளம் பெண்கள் நடனம் ஆடினர். ஒவ்வொரு நாட்டினதும் பாரம்பரிய கலைகள் கலாசாரங்களை பிரதி பலிக்கும் வகையில் அந் தந்த நாடுகளின் கலை ஞர்கள் அடுத்தடுத்து நடனமாடி கலக்கினர். இவற்றுள் இலங்கை கண்டி நடனத்தையும், இந்தியா தமிழர் சார்ந்த குத்தாட்டம் என்று சொல்லப்படும் நடனத் தையும் தென்னாபிரிக்கா மற்றும் மே.இ. தீவுகள் ஆதிவாசிகளின் நடனத்தையும் பிரதிபலித்தனர். தொடர்ந்து பாடல்கள், மனதை மயக்கும் இசைகள் என்பன மக்களை கவரும் வகையில் அரங்கேறின.

**கொடி அணிவகுப்பு:**
உலகக்கிண்ண தொடரில் பங்கேற்கும் 14 நாடுகளது கொடிகளின் அணிவகுப்பு நடந்தது. ஒவ்வொரு கொடிக ளையும் அதற்குரிய நாடுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அந்தந்த அணியின் அணித் தலைவர்கள் தாம் சார்ந்த கொடிகளுக்கு முன்னால் அணிவகுத்து நின்றனர். இவர்களுக்கு முன்னால் சகலரதும் எதிர்பார்ப்பான கிண்ணம் வைக்கப்பட்டிருந்தது. வைத்த கண் வாங்காமல் அனைத்து அணித்தலைவர்களும் கிண்ணத்தை பார்த்தபடி விறைத்து நின்றனர்.

**செல்பி**
உலகக்கிண்ண தொடரின் லீக் ஆட்டங்களுக்காக பிரிக்கப்பட்ட இரண்டு குழுக்களினதும் தலைவர்கள் செல்பி என்று சொல்லப்படும் முறையில் ஒரு பிரமாண்ட ஒளிரும் கூண்டுக்குள் ஏறி நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.
இதைத்தவிர உலகக்கிண்ண தொடரில் விளையாடும் அனைத்து வீரர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்து ரசிகர்களை நோக்கி



கையசைத்து சென்றனர்.

**சின்னத்தினை பிரதிபலித்த பிரமாண்ட மனித பொம்மை.**
விழாவின் இறுதிக்கட்டத்தில் 2015ஆம் ஆண்டுக்கான உலக் கிண்ணத் தொடரின் சின்னத்தை பிரதிபலிக்கும் வகையில் மனிதர்களால் இயக்கப்பட்ட மிகப்பெரிய மனித வடிவ பொம்மையொன்று சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவரினதும் கவனத்தை கவ ரும் படியாக அமைந்திருந்தது. 1975ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை உலக்கிண்ணத்தினை சொந்தமாக்கிய அணிகளின் நிறங்கள் அந்த பிரமாண்ட பொம்மையில் ஒளிர விடப்பட்டு இறுதியில் இந்த வருட உலக்கிண்ண தொடருக்கான சின்னத்தினை பிரதிபலிக்கும் வகையில் அந்த பிரமாண்ண மனிதபொம்மை செயற்படுத்தப் பட்டது. இறுதியில் கோலாகல வாணவேடிக்கைகளுடன் இரு நாடுகளினதும் உலக்கிண்ண தொடக்கவிழா முடிவுக்கு வந்தது.

## துளித் துளியாய் உலகக் கிண்ணம்

* நடப்பு சம்பியனான இந்திய அணி தற்போது உரிய திறனில் இல்லாவிட்டாலும், அந்த அணியை குறைத்து மதிப்பிட முடியாது என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் சப்பல் கூறி யுள்ளார்.
* உலகக் கிண்ண தொடர் நடக்க உள்ள நியூஸிலாந்தின் கிறிஸ்ட்சேர்ச் மைதானத்தில் நேற்று முன் தினம் 5 மடிக் கணிணிகள் திருட்டுப் போயுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.
* நடப்பு உலகக் கிண்ண தொடரில் தொடக்க வீரர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தொடக்க வீரரும் தேர்வுக் குழுவின் தலைவருமான அமிர் சொகைல் கூறியுள்ளார்.
* இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மிகச் சிறப்பானதாக அமைந்துள்ளது. அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் பந்து வீச்சாளர்களும் செயற்பட்டால் இந்திய அணி கிண்ணத்தை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சிறீநாத் தெரிவித்துள்ளார்.
* உலகக் கிண்ண தொடருக்குப் பின்னர் ஒரு நாள் ஆட்டங்களுக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைமை பொறுப்பில் இருந்து மைக்கல் கிளார்க் விலகி சிமித்துக்கு இடம்கொடுக்க வேண்டும் என்று ரிக்கி பொண்டிங் வலியுறுத்தி உள்ளார்.
* உலகக் கிண்ண தொடரின் போது, உசுப் பேற்றும் சொற்களைக் கூறினாலோ அல்லது சைகைகளைச் செய்தாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) எச்சரிக்கை விடுத்துள்ளது. (5-ரி)

உதயன் கிரிக்கெட் கொண்டாட்டம்

**நாளைய ஆட்டம்**
அதிகாலை 3.30
**இலங்கை - நியூஸிலாந்து**



# கர்ஜிக்குமா சிங்கங்கள் ?

இலங்கை – நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்துடன் பதினோராவது உலகக் கிண்ணம் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை நேரப்படி நாளை அதி காலை 3.30 மணிக்கு ஆட்டம் தொடங்கவுள்ளது.
உலகக் கிண்ணத்தின் தொடக்க ஆட்டத்தில் இலங்கை அணி மோதுவது இது இரண்டா வது தடவையாகும். 1999 ஆம் ஆண்டு இங்கி லாந்தில், உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்ற போது, நடப்புச் சம்பியனாக இலங்கை களமிறங்கியது. இங்கிலாந்துடனான தொடரின் முதல் ஆட்டத்திலேயே மூக்கு டைப்பட்டது. இதனால் அந்தத் தொடரில் லீக் சுற்றுடன் வெளியேறி யிருந்தது.
இதன் பின்னர் இரண்டாவது தடவையாக – இப்போதே – உலகக் கிண்ணத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை மோதுகின்றது.
நியூஸிலாந்துடனான நாளைய ஆட்டத் தில், இலங்கை அணி வெற்றி பெறுமா என்ற சந்தேகம் எல்லோர் மனதிலும் இருக்கவே செய்கின்றது. ஏனெனில், நியூ ஸிலாந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடிய இலங்கை அணி படுமோசமான தொடர் தோல்வியைப் பதிவு செய்திருந்தது. பந்து வீச்சு – துடுப்பாட்டம் இரண்டிலுமே மோசமான பெறுபேற்றையே வெளிக்காட்டியிருந்தது.
குறிப்பாக இலங்கை அணியின் பந்து வீச்சைப் பொறுத்தவரையில் ஓர் சீரான பெறுபேறு வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. மலிங்க இல்லாதது, பந்து வீச்சில் பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தது. நியூஸிலாந்து, ஆஸ்திரே லிய ஆடுகளங்கள், வேகப் பந்து வீச்சுக்கு சாதக மான ஆடுகளங்கள். இந்த ஆடுகளங்களில் பந்து வீசுவதற்கு இலங்கை வீரர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.
மேலும் சுழற்பந்து வீச்சாளர்கள் ஹேரத், சசித்திர சேனநாயக்கா இருவருமே தொடர் முழுவதிலும் பிரகாசிக்கவில்லை. இதனால் இலங்கையின் பந்து வீச்சுப் படையணி, சரிந்தே விட்டிருந்தது. 5 ஆவது ஒரு நாள் ஆட்டத்தில், 93 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்திருந்த நியூஸிலாந்து இறுதியில் 360 ஓட்டங்களை மேலதிக இலக்கு இழப்பு இன்றி பெற்றுக் கொண்டிருந்தது. அந்தளவு தூரத்துக்கு மோசமான பந்து வீச்சையே இலங்கை வெளிக்காட்டியிருந்தது.
ஆனால் காயங்களிலிருந்து குணமாகி மலிங்க அணிக்குள் மீண்டும் வந்திருப்பது இலங்கைக்குப் பலமாக கருதப்படலாம். சிம்பாப்வேயுடனான பயிற்சி ஆட்டத்தில் இலங்கை தோற்றமையும், அந்த ஆட்டத்தில் மலிங்க ஓட்டங்களை அள்ளிக் கொடுத்தமையும், மலிங்கவின் மீள்பிரவேசம் இலங்கைக்கு கைகொடுக்குமா என்ற சந்தே கத்தை தோற்றுவித்துள்ளது.
துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் டில்ஷான், சங்கா இருவருமே சிறப்பாகச் செயற்படுகின்றனர். ஏனையோர் பெயர் சொல் லிக் குறிப்பி டும் அளவுக்கு சிறப்பான ஆட்டத்தை இன்னமும் வெளிப்படுத்த வேயில்லை. குறிப்பாக அணித் தலைவர் மத்தி யூஸ், கடந்த ஆண்டில் அதிக ஓட்டங்களைக் குவித்திருந்த போதும் இந்த ஆண்டில் அவர் சாதிக்கவில்லை. தென்னாபிரிக்காவுடனான பயிற்சி ஆட்டத்தில் அரைச் சதம் பெற்றிருந்தார். இதுவே அவர் இந்த ஆண்டில் பெற்ற அதிகூடிய ஓட்டமாகியுள்ளது.
நியூஸிலாந்தைப் பொறுத்த வரையில் அந்த அணிக்கு சொந்த மைதானம். அத்துடன் அந்த அணியின் துடுப்பாட்ட வரிசையும் சரி, பந்து வீச்சு வரிசையும் சரி பலமாகவே இருக்கின்றது. அதிரடிக்கு அணித் தலைவர் மக்கலம் இருக்கின்றார். முன்வரிசை சரிந்தால், மத்திய வரிசையில் அணியை மீளக் கட்டியெழுப்பக் கூடிய பலத்துடன் நியூஸிலாந்து இருக்கின்றது.




வில்லியம்ஸன், றோஞ்சி, எலியட், அண்டர்சன் என்று அடுக்கி வைத்திருக்கின்றனர் துடுப் பாட்ட வரிசையை. அதே போன்று பந்து வீச்சில், போல்ட், சவுத்தீ, வெற்றோரி என்று கலக்கலாக உள்ளது. ஒட்டுமொத்தத்தில் நியூஸிலாந்து நாளைய ஆட்டத்துக்கு பூரணமான அணியாகவே இருக்கின்றது.
இலங்கை அணி, நியூஸிலாந்தில் இழந்த தொடரை நாளைய ஆட்டத்தில் வெற்றி பெற்று பதிலடி கொ[illegible] (5)

# மீண்டும் இந்தியா

## ஆசியாவின் ஆதிக்கம்




நீண்ட நாள் தொடர். அதிகரித்த அணிகள். பொப்வூல்மரின் சாவு. இவ்வாறு சர்ச்சையுடன் முடிந்து போனது 2007 உலகக் கிண்ணம். நான்கு ஆண்டுகளில் நடந்தது அடுத்த உலகக் கிண்ணம். 2011 பெப்ரவரி தொடங்கியது போர். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை இணைந்து நடத்த முதலில் தீர்மானம். ஆனாலும் இலங்கை அணி மீது பாகிஸ்தானில் நடந்த தாக்குதல் ஐ.சி.சியை சிந்திக்க வைத்தது.

1996,2003 ஆம் ஆண்டுகளில் பாதுகாப்பை காரணம் காட்டி அணிகள் விளையாட மறுத்தமையை கவனத்தில் எடுத்தது ஐ.சி.சி. இதனால் வாய்ப்பை இழந்தது பாகிஸ்தான். பெற்றுக் கொண்டது பங்களாதேஷ் அணிகள் 14. இரண்டு குழுக்கள். 'சுப்பர்' ஆட்டங்கள் கைவிடப்பட்டன. மீண்டும் வந்தது காலிறுதி. ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, இங்கிலாந்து, இந்தியா, அயர்லாந்து, கென்யா, நெதர்லாந்து, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே களமிறக்கம். 7 அணிகள் ஒரு குழுவில். ஒவ்வொரு அணியுடன் ஏனைய 6 அணியுடன் மோத வேண்டும். குழுவில் முதல் நான்கு இடம்பெறும் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெறும்.

## காலிறுதி

பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இலங்கை ஒரு குழுவிலிருந்தும் இங்கிலாந்து, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா மற்றைய குழுவிலிருந்தும் வந்தன.

முதல் மோதல். பாகிஸ்தான் – மேற்கிந்தியத்தீவுகள். பத்து இலக்குகளால் பாகிஸ்தானுக்கு கிடைத்தது வெற்றி. இந்தியா – ஆஸ்திரேலியா இரண்டாவது ஆட்டம். எகிறியது ஆட்டத்தின் பரபரப்பு.

நான்கு தடவைகள் தொடர்ச்சியாக இறுதிக்குள் நுழைந்த ஆஸ்திரேலியாவுக்கு வாழ்வா சாவா ஆட்டம். இந்தியாவுக்கு சொந்த மண். ஆட்டம் தொடங்கியது. ஆடியது ஆஸி. பொன்டிங் மீண்டும் விஸ்பரூபம். 260 ஓட்டங்கள். பதிலுக்குத் தொடங்கியது இந்தியா. ஆரம்பம் முதல் சகலருமே சரிசமனான ஆட்டம். இதனால் 5 இலக்குகள் வித்தியாசத்தில் கிடைத்தது வெற்றி. 15 ஆண்டுகால ஆஸியின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

நியூஸிலாந்து – தென்னாபிரிக்கா மூன்றாவது காலிறுதியில் மோதல். நியூஸிலாந்து தடுமாற்றம். 221 ஓட்டங்கள் பெற்றது. தென்னாபிரிக்கா மீண்டும் சறுக்கல். துரதிஷ்டம் தொடர்ந்தது. 17[illegible] ஓட்டங்களுக்குள் சுருண்டது. இறுதி காலிறுதி இலங்கை – இங்கிலாந்து மோதியது.

இங்கிலாந்து ஆடியது. 229 ஓட்டங்கள் மட்டுமே பெற முடிந்தது. பதிலளித்த இலங்கை, இங்கிலாந்தை விரட்டியடித்தது. தரங்க – டில்சான் ஆளுக்கொரு சதம் அடித்து பத்து இலக்குகளால் வெற்றியை இலங்கைக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

## லீக் ஆட்டம்

தொடரை நடத்திய இந்தியா – பங்களாதேஷ் முதல் ஆட்டம். நடந்தது பங்களாதேஷில். பெப்ரவரி 19 ஆம் திகதி தொடங்கியது பத்தாவது போர். சேவாக் இந்தியாவுக்கு அதிரடி ஆட்டம். கடந்தது 300 ஓட்டங்களை. இறுதியில் 87 ஓட்டங்களால் பங்களாதேஷை வீழ்த்தியது இந்தியா. 2007 உலகக் கிண்ணத் தோல்விக்க பழி தீர்த்தது.

இலங்கை கத்துக்குட்டி கனடாவை 210 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கியது. ஆனால் அடுத்த ஆட்டத்திலேயே பாகிஸ்தானிடம் தோல்வியைக் கண்டது. கொழும்பில்நடந்தஆட்டத்தில் 11ஓட்டங்களால்வெற்றியைத் தவறவிட்டது. மறுபுறம் இந்தியா – இங்கி லாந்து மோதல். கடைசிப் பந்து வரையில் பரபரப்பான ஆட்டம் இறுதியில் சமநிலை அடைந்தது. ரசிகர்களை மயிர்கூச்செறிய வைத்த ஆட்டமும் இதுதான்.

சொந்த மண்ணில் இந்தியா வெல்லும் என்ற ரசிகர்களின் மனநிலையை உடைத்தது. சச்சின் சதத்துடன் 338 ஓட்டங்கள் 49.5 பந்துகளில் பெற்றது இந்தியா. பதிலளித்து ஆடியது இங்கிலாந்து. ஸ்ரோஸ் 150 ஓட்டங்கள் கடக்க 50 பந்துப் பரிமாற் றங்களில் 8 இலக்குகளை இழந்து 338 ஓட்டங்களையே பெற்றது.

இலங்கை, கென்யா மோதலில் மலிங்க மீண்டும் 'ஹற்றிக்' சாதனை படைத்தார். இங்கிலாந்து, அயர்லாந்து ஆட்டத்தில் அதிர்சி கொடுத்தது அயர்லாந்து. கடந்த உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு கொடுத்த அதிர்ச்சியை இங்கிலாந்துக்கு இம்முறை கொடுத்தது. இங்கிலாந்தின் அதிரடியை, அயர்லாந்தின் கெவின் ஓபிரையன் தனியாளாக சாய்த்தார். 63 பந்துகளில் 113 ஓட்டங்கள் விளாசிக் கொடுக்க 3 இலக்குகளால் வெற்றியைப் பெற்றுக் கொண் டது.

பாகிஸ்தான் நடப்புத் தொடரில் கனடாவிடம் மயிரிழையில் பிழைத்தது. 184 ஓட்டங்களுக்குள் சுருண்டது பாக்கிஸ்தான். பதிலளித்த கத்துக்குட்டியை 138 ஓட்டங்களுக்குள் மடக்கியதால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது. இலங்கை – ஆஸ்திரேலிய ஆட்டம் மழையால் மறைந்து போனது.

இங்கிலாந்து, அயர்லாந்தின் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், பங்களாதேஷ் அடுத்த அதிர்ச்சியைக் கொடுத்தது. 225 ஓட்டங்களுக்குள் சுருண்டது இங்கிலாந்து. பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் பந்துப் பரிமாற்றம் ஒன்று மீதமிருக்கையில் 2 இலக்குகளால் இங்கிலாந்தை சாய்த்தது.

இந்தியாவுக்கு சொந்த மண்ணிலேயே அதிர்ச்சி கொடுத்தது தென்னாபிரிக்கா. சச்சின் – சேவாக் இணை அதிரடியில் வெளுத்து வாங்கியது. 39.4 பந்துப் பரிமாற்றங்களில் 267 ஓர் இலக்கை இழந்திருந்தது. அடுத்த 9 பந்துப் பரிமாற்றங்களுள் 9 இலக்குகளையும் இழந்தது. பெற்றுக் கொண்டது 296 ஓட்டங்கள். பதிலுக்குத் தொடங்கியது ஆபிரிக்கா. ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டம். இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 13 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை. ஹர்பஜன் சிக்கனமாக வீசியிருந்தார். இதனால் இறுதிப் பந்துப் பரிமாற்றம் வீச அழைக்கப்படுவார் என்று கருதுகையில், டோனி அள்ளிக் கொடுத்த நெஹ்ராவை அழைத் தார். முதல் பந்திலேயே நான்கு, ஆறு என்று செல்ல இரண்டு பந்துகள் மீதமிருக்கையில் வென்றது தென்னாபிரிக்கா.

கடந்த இரண்டு உலகக் கிண்ணத் தொடரில் எந்தவொரு தோல்வியையும் சந்திக்காத ஆஸ்திரேலியா முதல் தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தானுடன் ஆடியது. ஆட்டம் கொழும்பில் நடந்தது. 176 ஓட்டங்களுக்குள் சுருண்டது ஆஸ்திரேலியா. ஆறு இலக்குகளை இழந்து பாகிஸ்தான் பதித்தது வெற்றியை. இந்தத் தோல்வி ஆஸி.யின் தொடர் வெற்றிக்கு வைத்தது முற்றுப் புள்ளி.




விடைபெறும் முரளி

### 2011 உலகக்கிண்ணம்

**அதிகூடிய ஓட்டங்கள்**

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | ஓட்டங்கள் | கூடிய ஓட்டங்கள் |
|---|---|---|---|
| ரி.டில்சான் (இலங்கை) | 9 | 500 | 144 |
| எஸ்.டெண்டுல்கல் (இந்தியா) | 9 | 482 | 120 |
| கு.சங்கக்கார (இலங்கை) | 9 | 465 | 111 |

**அதிகூடிய இலக்குகள்**

| வீரரின் பெயர் | ஆட்டங்களின் எண்ணிக்கை | இலக்குகள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| எஸ்.அப்ரிடி (பாகிஸ்தான்) | 8 | 21 | 5/16 |
| சகீர்கான் (இந்தியா) | 9 | 21 | 3/20 |
| ரி.சௌத்தி (நியூஸிலாந்து) | 8 | 18 | 3/18 |



இந்தியாவிடம் பாகிஸ்தான் மண்டியிட்ட போது....

# அரையிறுதி

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து நுழைந்தன. ஆட்டத்தை நடத்தும் ஆசிய நாடுகள் அரையிறுதி வாய்ப்பை பெற்றுக் கொண்டன. நியூஸிலாந்து – இலங்கையுமே இந்த முறை அரையிறுதியில் மோதும். 2007 உலகக் கிண்ண அரையிறுதியில் நியூஸியை இலங்கை வீழ்த்தியிருந்தது. பழிதீர்க்க வேண்டிய நியூஸிலாந்து – இலங்கையிடம் சரணடைந்தது.

முதலில் ஆடிய நியூஸிலாந்து மெதுவான ஆட்டம் 213 ஓட்டங்கள் 6 இலக்குகள். இறுதி 4 இலக்குகள் 4 ஓட்டங்களுக்குள் சரிக்கப்பட்டன. 48.5 பந்துப் பரிமாற்றத்தில் 217 ஓட்டத்துக்குள் ஆட்டம் முடிவு. இலகுவான இலக்கை விரட்டியது இலங்கை. 5 இலக்குகளை கொடுத்தது. வெற்றியைப் பெற்றுக் கொண்டது. மூன்றாவது தடவையாக இறுதிக்குள் நுழைந்தது.


பாகிஸ்தான் – இந்தியா அரையிறுதி மோதல். கடுமையான பரபரப்பு. இந்திய மண்ணில் ஆட்டம். நாணயச் சுழற்சியில்,வென்று முதலில் ஆடியது இந்தியா. சேவாக் – சச்சின் சிறப்பான ஆரம்பம். சீரான ஓட்ட வேகம். 9 இலக்குகளை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது இந்தியா. பதிலுக்குத் தொடங்கியது பாகிஸ்தான். சீரான ஆட்டம். இரட்டை இலக்க ஓட்டங்கள். ஆனாலும் வீணடிக்கப்பட்ட பந்துகள். இதனால் இறுகியது பாகிஸ்தானின் வெற்றி. இறுதியில் 231 ஓட்டங்களுக்குள் முடிந்தது பாக். ஆட்டம். மூன்றாவது முறையாக இந்தியாவும் இறுதிக்குள் நுழைந்தது.




# இறுதி ஆட்டம்

இலங்கை – இந்தியா மோதல். ஆட்டம் இந்தியாவில். நாணயச் சுழற்சி இரண்டு தடவை நடந்தது. இறுதியில் வென்றார் சங்கா. முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானம். ஆரம்பம் வாய்க்கவில்லை இலங்கைக்கு. 60 ஓட்டங்களுக்கு இழந்தது ஆரம்பதுடுப்பாட்ட வீரர்களை. சங்கா – மஹேல பொறுப்பான ஆட்டம். நிதான ஆட்டம். இறுதிக் கட்டத்தில் குலசேகர 30 பந்துகளில் 32 ஓட்டங்கள். திஸர 9 பந்துகளில் 22 ஓட்டங்கள். மஹேல 88 பந்துகளில் 103 ஓட்டங்கள். இலங்கை 6 இலக்குகளை இழந்து 274 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளிக்கத் தொடங்கியது இந்தியா. முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி கொடுத்தது இலங்கை. அதிரடி நாயகன் சேவாக், மலிங்க வேகத்தில் வெளியேறினார். அடுத்த அதிர்ச்சியையும் மலிங்கவே கொடுத்தார். சச்சின் 18 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 32 ஓட்டங்களுக்குள் முன்னிரண்டு இலக்கையும் இழந்தது. கம்பீர் – ஹோக்லி பொறுப்பான ஆட்டம். சீரான ஓட்ட வேகத்தில் சென்றது. பின்வரிசையில் டோனி அதிரடி. கம்பீர் 97 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

8 பந்துகள் மீதமிருக்கையில் 6 இலக்குகளால் வெற்றியைப் பெற்றது இந்தியா. இரண்டாவது தடவையாக கிண்ணத்தை வசப்படுத்தியது.



TILKO
JAFFNA CITY HOTEL
leading hotel in the heart of Jaffna City



Luxurious Rooms
Banquet Hall
Conference Hall
Restaurant / Bar
Swimming Pool
Gym / Spa
Free Wifi

We Care and it Shows

70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
Tel: 021 222 5969, Fax : 021 222 7291
e.mail : info@cityhoteljaffna.com Web: www.cityhoteljaffna.com

## தினம் ஒரு பரிசுப் போட்டி 2

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நாளை மறுதினம் (15.02.2015) அன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.....................................................................

பெயர் : .........................................................

தே.அ.இல. : ....................................................

முகவரி : .......................................................

.......................................................

தொலைபேசி இல.: .............................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (14.02.2015) பிற்பகல் 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.




## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.



2011 உலகக் கிண்ணத்தின் கடைசிப் பந்து

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கன்ன் போட்டோ**
165 பிரதான வீதி,பருத்தித்துறை
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டிதுறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்தி வீதி ஊர்காவற்துறை
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை
**தயாளன் ஸ்ரோஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வெலி.
**தாஸ் ஸ்ரோஸ்**
திருநெல்வேலி
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்
**திருநீலகண்டன்**
**ஸ்ரோஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி
**சுரேஸ் ஸ்ரோஸ்**
இல. 376 பிரதான வீதி யாழ்ப்பாணம்
**அன்ரனீஸ் ஸ்ரோஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்
**ஸ்ரீமுருகன் ஸ்ரோஸ்**
சித்தங்கேணி வீதி பண்டத்தரிப்பு
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்
**குலம் ஸ்ரோஸ்**
சந்தையடி மானிப்பாய்
**துர்க்கா புத்தகசலை** பஸ் நிலையம் சுன்னாகம்
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் வீதி மல்லாகம்
**பாக்கியா** கொக்குவில்
**சிறிறாம்** கைதடி சந்தி
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி
**மணியம்**
ஏ9 வீதி சாவகச்சேரி
**அருள்நாயகி**
ஏ 9 வீதி கொடிகாமம்
**கஜானன்**
அல்லாரை வீதி மீசாலை சந்தி
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டிசுட்டான்
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா
**சோமசுந்தரம்**
ஏ 9 வீதி மாங்குளம்
**மோகன்** பளை
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுபாடு வீதி மன்னார்
**நிரஞ்சனா** தலமன்னார்
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டகச்சி
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்
**பொதிகை புக்சொப்** 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு
**தாயண்பு** உடையார் கட்டு
**சஜி புக் சொப்**
விசுவமடு
**வரணா புக்சொப்**
755 கனகராச வீதி திருநகர் கிளிநொச்சி
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்
**ராஜாதேனீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அயலாருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பெண்களுக்கு மற்றவர்கள் செயல்களால் திடீர் கோபம் உண்டாகலாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீண் செலவைக் குறைப்பது நல்லது.

**இடபம்:** உடன்பணி செய்வோர், மேலதிகாரிகள் ஆகி யோரிடம் மிகுந்த நல்ல பெயர் ஏற்படும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். வேலை இல்லாமல் தவித்த வர்களுக்கு, தகுந்த சம்பளத்துடன் சிறந்த வேலை கிடைக்கும்.

**மிதுனம்:** எதிரிகளால் இருந்துவந்த தொந்தரவு நீங்கும். தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மனக் குழப்பங்களை ஏற்படுத்தினாலும் முடிவில் தெளிவு உண்டாகும்.

**கடகம்:** தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடு வதைத் தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப் பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். தேவையான உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். திடீர் கோபம் தோன்றலாம்.

**சிங்கம்:** வாடிக்கையாளர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப் பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஒரு சின்ன விடயத்துக்காகக் கூட அலைய வேண்டி இருக்கும். பணிச் சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம்.

**கன்னி:** குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு சரியாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படலாம். உங்கள் செயல்களை குடும்பத்தில் உள்ளவர்கள் குற்றம் சொல்லலாம்.

**துலாம்:** வாக்குவாதத்தில் ஈடுபடாமல் கண்டும் காணாமல் செல்வது நன்மை தரும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற பாடுபடுவீர்கள். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** கோபத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். பணத்தை விட அதிக உழைப்பின் மூலம் செய்யும் தொழில் அதிக வருவாய் கிடைக்கும்.

**தனுசு:** தீவிர முயற்சியின் பேரிலேயேதான் அரசிடம் இருந்து கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்புக் கிடைக்கும். தொழிலில் சிறப்படைய மிகுந்த முயற்சி தேவை. வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும்.

**மகரம்:** எதிர்த்து செயற்பட்டவர்கள் ஒதுங்கி விடுவார் கள். நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். புத்திக் கூர்மையுடன் செயற் படுவீர்கள். தைரியம் உண்டாகும்.

**கும்பம்:** வேண்டியவர்களுடன் மனஸ்தாபம் உண் டாகும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதி கரிக்கும். தொழில் தொடர்பாக அமைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும்.

**மீனம்:** குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் ஏற்படலாம் கவனம் தேவை. ஆயுதங்கள், நெருப்புகள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கை தேவை. பூர்வீக சொத்துக்கள் மூலம் வர வேண்டியவை தாமதப்படும்.



## செல்பிக்காக சாகவும் தயார்

செல்பியை எடுத்துக்கொள்வதற்கு, உயிரைக்கூடப் பணயம் வைக்கத் தயாராக உள்ளார்கள் என்றால் நம்புவீர்களா? அயர்லாந்தில் உள்ள கார்க் நகரத்தில் தேவாலயத்துக்கு அருகில் உள்ள ஜஷடோன் பெல்ஸ் கோபுரத்தில் ஏறிய இரண்டு பேரே, விபரீதமான செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

குறித்த கோபுரம் 120 அடி உயரத்தைக் கொண்டது. இந்தக் கோபுரத்தின் மேல் ஏறினால், 360 பாகை பரப்பை முழுமையாகப் பார்க்க முடியுமாம். கோபுரத்தின் உள்ளிருந்தே அனைத்தையும் பார்வையிடுவது வழக்கம்.

ஆனால், குறித்த கோபுரத்துக்குச் சென்ற இரண்டு பெண்கள் கோபுரத்தின் உள் பகுதியில் இருந்து வெளியே வந்து செல்பி எடுத்துள்ளனர். கோபுரம் உயரமானது என்பதனால், கடுமையான காற்று வீசக்கூடும் இது மிகவும் ஆபத்தானது என்று அவர்களை கோபுரத்தில் கண்டோர் தெரிவித்துள்ளனர்.

இதனை அவதானித்த கோபுரப் பணியாளர்கள் அவர்களைப் பாதுகாப்பாக உள்ளே அழைத்துச் சென்றுள்ளனர். ஏன் வெளியே சென்றீர்கள் என்று கேட்டதற்கு, செல்பி எடுக்கச் சென் றோம் என்று அவர்கள் இலகுவாகப் பதிலளித் தார்களாம்.




## காதலிக்க நேரமில்லை

'காதலிப்பதற்கு எனக்கு நேரமே இல்லை' என்று தமிழின் முன் னணி நடிகைகளில் ஒருவரான தமன்னா தெரிவித்துள்ளார். ஏனைய நடிகைகள் தொடர்பில் கிசுகிசுக்கள் பரப்பப்பட்டு வரும் நிலையில், இதிலிருந்து தமன்னா மட்டும் தப்பித்துக் கொள்கின்றார். இது தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர், 'காதலிக்க நேரமில்லை. மற்றவர்கள் பற்றி எனக்குத் தெரியாது. ஒரு நடிகை என்ற முறையில் எனக்கு சினிமாவுக்கு சம்பந்தம் இல்லாத வெளி ஆள்களைச் சந்திப்பதற்கு நேரமே இல்லை. திரையுலகில் என்னைச் சுற்றி எப்போதும் சினிமா சம்பந்தப்பட்ட ஆள்கள் இருக்கிறார்கள். சினிமாவைப் பற்றியே எப்போதும் சிந்திக்கவும் பேசவும் முடிகிறது. சினிமா என்னை நிறைய மாற்றி உள்ளது. இது எனக்குப் புதிய அனுபவமாக இருக்கிறது. பிரபலமாக இருப்பது கஷ்டமானது என்று தமன்னா பொரிந்து தள்ளி யிருக்கின்றார்.

**கடலில் இருக்கும் அத்தனை நீரும் ஒன்று சேர்ந்தால்கூட ஒரு கப்பலை மூழ்கடிக்க முடியாது, கப்பலுக்குள் புகுந்தால் மட்டுமே அது சாத்தியம். "வாழ்வின் எந்தப் பிரச்சினையும் உங்களைப் பாதிக்கவே முடியாது, நீங்கள் அனுமதித்தால் தவிர"**




## மறைக்கப்பட்ட மறுபக்கம்

மறைக்கப்பட்ட சந்திர னின் மறுபக்கம் குறித்த ஒளிப்பதிவை நாசா விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள் ளது.

பூமியை நோக்கி எப் போதும் ஒரே முகத்தைக் சந்திரன் காட்டி வருகி றது.

எமக்குத்தெரியும்வெளிச் சமான பகுதியில் உயர் நிலங்களுக்கும், விண் கல் வீழ் பள்ளங்களுக்கும் இடையே பல எரிமலை சார் சமநிலங்கள் உள் ளன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஆனால் அதன் இருண்ட மறு பக்கம் குறித்து மர்மங்களே நிலவி வந்தன. தற்போது அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் நிலவின் இருண்ட மறுபக்கம் குறித்து ஒளிப்பதிவை வெளியிட்டுள்ளது. இந்த ஒளிப்பதிவு பூமியில் மறைக் கப்பட்ட நிலாவின் பக்கத்தில் மிகப்பெரிய குழிகளைக் காட்டுகிறது. அது மரியா என்று அழைக்கப்படும் கரும் புள்ளிகளாகும்.



## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

ஒரு குடும்பத்தை மட்டும் உட்கார வைச்சு பஞ்சாயத்து பண்ணினா அது 'சொல்வதெல்லாம் உண்மை'
பல குடும்பங்களைக் கூப்பிட்டு உட்கார வைச்சு சண்டையை மூட்டி விட்டுட்டு பஞ்சாயத்து பண்ணினா அது 'நீயா நானா' நல்லாத்தான் பண்றாங்கயா பிஸினஸ்.......






# தமிழ் அரசியல் கைதிகளின் விவரத்தைப் பதிவு செய்யவும்

## கைதிகளின் பெற்றோர் ஒன்றியம் வேண்டுகோள்

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரின் விவரங்களையும் பதிவு செய்யு மாறு தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் தமிழ் கைதிகளினதும் விவரங்களை எதிர் வரும் மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர் ஒன்றியம் கேட்டுக் கொள்கின்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலை வீச்சினை விரைவுபடுத்தும் பொருட்டு கைதிகளின் பெற்றோர், உறவினர் மூலம் சரியான, முழுமையான தகவல்களைத் திரட்டி வருகின்றோம். அதற்கு ஏற்ப வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் அதற்குரிய விவரப் படிவம் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கிழக்கு மாகாணம், கொழும்பு மற்றும் மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் ஒன்றியத்தின் செயலாளர் (077 183 8541) உடன் தொடர்பு கொண்டு படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விவரங்களை செயலாளர் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தமது சமூகத்துக்காக குரல் உயர்த்தி நீண்ட நெடுஞ்சிறை வாழ்வை அனுபவித்துக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் வாழ்வின் விடிவினை ஏற்படுத்துவதற்கு 'ஒன்றிணைந்து குரல் கொடுப் போம் – நம் உறவுகளை மீட்போம்' எனும் கோட்பாட்டுடன் செயற்படுவதே இந்த அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர் ஒன்றியத்தின் குறிக்கோளாகும். இதுதவிர எவ்வித அரசியல் நோக்கமோ அல்லது வேறு எந்தத் தரப்பினரின் தூண்டுதலோ, நிதி மற்றும் பொருளாதார கையாள்கையோ எமது செயற்பாட்டுக்குக் காரணம் அல்ல.

மேலும் எமது மனிதாபிமான, ஜனநாயக செயற்பாட்டை அரசுக்கு எதிரானது என்று தவறாகக் கற்பிதம் செய்து கொண்டு யாரும் இடையூறு செய்யவோ, அச்சுறுத்தவோ கூடாது என்பது எமது தாழ்மையான வேண்டுகோளாகும். எமது மனிதநேய நடவடிக்கைக்கு மாவட்ட ரீதியிலான சிவில் சமூகம் மற்றும் பிரஜைகள் குழு ஆகியோரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்கிறோம் – என்றுள்ளது. (வ)

# கவனக்குறைவான பெற்றோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை

கொழும்பு, பெப்.13

பெற்றோர்களின் கவனக்குறைவு காரணமாக கடந்த சில வாரங்களில் சிறு குழந்தைகள் கிணறுகளில், ஆறுகளில் மற்றும் மேல் மாடிகளிலிருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளமையை அடுத்து அவை தொடர்பாக சட்ட நடவடிக்கைகளைமேற்கொள்வதற்குப் பொலிஸ்துறை தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியிருப்பதாவது:–

"அண்மையில் வெள்ள வத் தைப் பிரதேசத்திலுள்ள7 மாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து நான்கு வயதான குழந்தை ஒன்று கீழே விழுந்து உயிரிழந்திருந்தது.

அதேபோன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் அங்குருவாதொட்டை, கல்பிட்டிய மற்றும் வேறுமொரு பிரதேசத்திலும் கூட இடம் பெற்றி ருந்தன என்று தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயக் கிணறுகள் அமைந்துள்ள இடங்கள், ஆபத்தான மதில்கள், வீடுகளுக்கு அருகிலுள்ள கிணறுகள் போன்றவற்றைச் சூழ பாதுகாப்பு வேலிகளை அமைத்து பாது காப்பு வழங்காதிருக்கும் நபர்கள் மற்றும் சிறு குழந்தைகள் குறித்து கவனம் செலுத்தாத பெண்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று தெரிவித்தார். (வ–22)

# கிழக்கு பல்கலைக்கழக ஊழலுக்கு எதிராக பேரணி



மட்டக்களப்பு, பெப்.13

கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல்களுக்கு எதிராக சுயாதீன ஆணைக்குழுவை அமைக்குமாறு கோரி கண்டனப் பேரணி ஒன்று திங்கட்கிழமை மாலை மட்டக்களப்பில் இடம் பெற்றது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற ஊழல்களை விசாரணை செய்ய குழுக் களை அமைத்துள்ளது. அவ்வாறு எமது பல்கலைக்கழகத் துக்கு விசாரணைக் குழுவை அமைத்து ஊழல் புரிந்தோரைக் கண்டிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத் தனர். (வ)

# ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, பெப்.13

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆன்மிகத்தில் 'அறிவியல்' என்ற தலைப்பில் தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த ஆசிரியர் சுதர்சன் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ–9)

# சிவராத்திரி தினத்தை வர்த்தக விடுமுறையாக பிரகடனப்படுத்துக

## இந்து மாமன்றம் ஜனாதிபதிக்கு கோரிக்கை

கொழும்பு, பெப்.13

மகா சிவராத்திரி தினத்தை வர்த்தக விடுமுறை தினமாக பிரகடனப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத் துள்ளது.

இது தொடர்பில் மீள்குடியேற்ற மீள்நிர்மாண மற்றும் இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஊடாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் மன்றம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிவராத்திரியானது இந்துக்களின் மிக முக்கிய மத தினமாக உள்ளது. இந்த தினம் இலங்கையிலுள்ள அனைத்து இந்துக்களாலும் அனைத்து இந்து ஆலயங்களிலும் அனுட்டிக்கப்படுகின்றது.

இந்தத்தினம் பொது மற்றும் வங்கி விடுமுறை தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள நிலையில் சிவராத்திரி தினமான எதிர்வரும் 17ஆம் திகதியை வர்த்தக விடுமுறை தினமாக பிரகடனப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் சிவாலயங்களைச் சூழ்ந்துள்ள பக்தர்கள் சிவராத்திரி தின இரவில் கோயில்களுக்குச் செல்வ தற்கு வசதியாக அவர்களது சுதந்திர நடமாட்டத்திற்கு உறுதியளிப்பதுடன் அந்தப் பிரதேசங்களுக்கு பாதுகாப்பும் வழங்கப்பட வேண் டும்.

மேலும் சிவராத்திரி தினத்தில் கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் மலையகத்திலிருந்து மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கு வசதி செய்து தரும் முகமாக மேலதிக பஸ் களை இரவும் பகலும் சேவையில் ஈடுப்படுத்த பொது போக்குவரத்து சேவை வழிவகை செய்ய வேண்டும்.

அத்துடன் அன்றைய தினத்தில் அனைத்து மதுபானக் கடைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் மூடப்படுவதற்கும் வழிவகை செய்யப்பட வேண்டும். சிவராத்திரி தினத்தில் ஒலிபெ ருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு முறையான அனு மதியை வழங்க பொலிஸ் மா அதிபரை கோருகின்றோம் – என்றுள்ளது. (வ–10)

# இலங்கை வந்துள்ள சீனாவின் ஆளும் கம்யூ.குழுவினர் ஹக்கீமுடன் சந்திப்பு

## இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடினர்



கொழும்பு, பெப்.13

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் ராவோ கியூ ஹுவா தலைமையிலான குழுவினர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்து நாட்டில் தற்போதுள்ள நிலைமை குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னரான நிலைமைகள் குறித்தும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங் களுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் ராவோ கியூ ஹுவா, அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது நாட்டுடன் நட்புறவை பேணுவதற்கான நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும் என்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை கல்முனை மாநகர சபை உட்பட கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிர்வா கத்தி லுள்ள உள்ளூராட்சி மன்றங்களைப் பலப்படுத்துவதற்கும் அவற்றின் ஊடாக பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் சீனா உதவ வேண்டும் என்று கல்முனை மாநகர முதல்வர் சட்ட முதுமாணி எம்.நிஸாம் காரியப்பர் வேண்டுகோள் விடுத்தார். அமைச்சர் ரவூப் ஹக்கீமும் இதனை வலியுறுத்திப் பேசினார்.

அவர்கள் விடுத்துள்ள கோரிக்கை சீன நாட்டு பிரதிநிதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதற்காக தமது நாட்டிலுள்ள முக்கிய சில உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்ததுடன் அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் இணக்கம் தெரிவித்தனர்.

குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட் டிலுள்ள ஒரேயொரு மாநகர சபையான கல்முனை மாநகர சபைக்கு சீனாவின் முக்கிய பிராந்திய அரசின் பொருளாதார ஒத்துழைப்பை பெற்றுத் தருவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர முதல் வருமான எம்.நிஸாம் காரியப்பர், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், இலங்கை காணி மீளமைப்பு மற்றும் அபிவி ருத்திக் கூட்டுத்தாபனத் தலை வர் எம்.எச்.எம்.சல்மான் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (வ–10)




13/02/2015

# கிண்ணியா முஜாகிதா ம.வி. மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## நிரந்தரக் கட்டடம் கோரி

கிண்ணியா முனைச்சேனை முஜாகிதா மகா வித்தியாலயத்துக்கு நிரந்தரக் கட்டடம் கோரி மாணவர்கள் செவ்வாய்க்கிழமை காலை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் மாணவர்கள் கூறுகையில்;

ஐம்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் எமது பாடசாலையில் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறோம். போதுமான வகுப்பறைகள் இல்லை. அதனை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தவே போராட்டத்தில் ஈடுபடுகின்றோம்" என்று தெரிவித்தனர்.

இதேவேளை– ஆர்ப்பாட்டம் குறித்து பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கூறுகையில்;

"மாணவர்களுக்கு போதுமான அளவு வகுப்புறை மற்றும் கட்டட வசதிகள் இல்லை. கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகள் மர நிழலிலும் கொட்டில்களிலுமே நடைபெற்று வருகின்றன. இந்த நிலைமை குறித்து சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தோம். ஆயினும் எவ்வித பயனும் இல்லை.

இவற்றைக் கவனத்தில் கொண்டே போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

தொடர்ந்து உள்நாட்டு போக்குவரத்து பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் சம்பவ இடத்துக்குப் பயணம் செய்தார். அதனையடுத்து போராட்டம் குறித்து கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட்டுக்கு தெரியப்படுத்தப்பட்டது. குறித்த பாடசாலைக்கு புதிய நிரந்தரக்கட்டடம் ஒன்றை அமைத்து தருவதாக முதலமைச்சர் உறுதிமொழி வழங்கியதன் பின்னர் வீதி மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. (வ–10)

## இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.13

பாடசாலைகளில் இருந்து விலகிய மற்றும் தொழிற் பயிற்சியற்ற இளைஞர், யுவதிகளுக்குத் கைத்தறி நெசவு, மர வேலை, மண் பாண்டத் தொழில், தும்பிலான உற்பத்திப் பொருள்கள் குறித்த தொழிற் பயிற்சிகளை வழங்க வட மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி பயிற்சி நெறிகளில்கலந்து, பயிற்சி பெற ஆர்வமுள்ள 18–35 வயதுக்குஉட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் நல்லூர் பிரதேச திட்டமிடல் பிரிவில் உள்ள வட மாகாண தொழிற்றுறைக்கான அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப்பெற்றுக்கொள்ளலாம் என்று நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். விண்ணப்பிப்போர் 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். பயிற்சியின்போது நாளொன்றுக்கு ரூபா 200 வழங்கப்படும். (வ–7)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
லெட்சுமி
தம்பிப்பிள்ளை

தோற்றம் 24 09 1925 — மறைவு 12 01 2011

திதி: நவமி.

அம்மா!
நாலாண்டுகள் முடிந்தது நம்ப முடியவில்லை
இப்பவும் கூப்பிடும் குரல்
காதில் கேட்டுக் கொண்டே இருக்கிறது அம்மா.
உன் பேரனின் மணக்கோலம் கண்டாயா அம்மா?
எப்பவும் எங்களையே நினைத்து
வாழ்ந்த உன்னை, எப்பவும் நாம் நினைத்தபடி
வாழ்கின்றோம் அம்மா!
உன் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கும்.....

70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (56726)(3.5.6) குடும்பத்தினர்

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 21.12.1939

மறைவு 23.02.2014

அமரர் கிருஸ்ணபிள்ளை கணேசன்

திதி: 13.02.2015

உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வைரவர் கோயிலடி,
காளுவனி, சுழிபுரம். குடும்பத்தினர்.

(56724)(10.7.3)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கந்தையா
குணசேகரம்

மலர்வு 1943 . 08 . 15 — உதிர்வு 2015 . 01 . 13

அன்புக்கோர் அடையாளமாய் எம்மை அரவணைத்து
ஆளாக்கினீர் தந்தையாய் சகோதரனாய் தாத்தாவாய்
உறவுரிமை உடையோனாய் ஆதரித்தீர் கடவுள் பக்தியோடு
காருண்யம் மிக்க வாழ்வில் நிறைவுகண்டு இன்று
இறைபதத்தில் இளைப்பாற வேண்டுகிறோம்.
மறைவுச் செய்திகேட்டு சடங்கில் கலந்து கொண்டு பல
வழிகளிலும் ஆறுதல் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி
செலுத்தியும் நல்லடக்க ஆராதனையில் பங்கு கொண்டும்
எம்முடன் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்ட
அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

178, சிவசுந்தரம் வீதி,வட்டக்கச்சி.(ஜி 18700)(3.8) குடும்பத்தினர்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் பாலசுந்தரம்
பாக்கியவதி (பேபியக்கா)



தாயின் மடியில் 07.09.1929

இறைவன் அடியில் 14.01.2015


அன்பாலே எமை ஆட்கொண்டீர்கள்
அரவணைப்பாலே எமை ஆற்றுப்படுத்தினீர்கள்
இன்சொல்லாலே எம்மிதயம் நிறைந்தீர்கள்
இறையாசியினாலே இறைபதம் பெற்றீர்கள்.

உங்களின் ஆத்மா சாந்திபெற எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மெமோறியல் லேன்,
மானிப்பாய். குடும்பத்தினர்

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
29.11.1938

மறைவு
14.01.2015

### அமரர் கதிரவேலு தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற அரச மர.கூட்டு. ஸ்தாபன ஒப்பந்தக்காரர்)



கடந்த 14.01.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் கதிரவேலு தனபாலசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.02.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


(இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.104, சட்டநாதர் வீதி
நல்லூர், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 027 4749.
077 809 4956

---

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
17.08.1942

மறைவு
27.01.2011

### அமரர் இராமு சுப்பிரமணியம்

(சின்னத்தம்பி)

கணமது நிமிடமாகி நிமிடமது மணியாகி
மணியது நாள்களாகி நாள்களது வாரங்களாகி
வாரமது வருடங்கள் ஆகி
கடந்ததே நான்காண்டுகள் அழகான உங்கள் வதனம்
நாம் அகிலத்தில் உள்ளவரை அழியாது எம் நெஞ்சில்

596/5,கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.13
தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவு நிதியத்தின் பரிசளிப்பு விழா நாளை சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு தச்சன்தோப்பு பிரதேச சபை வளாக கந்தையா கனகம்மா நினை வாலயத்தில் தங்கராசா பிரசாந்த் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக நல்லூர் பிரதேச சபையின் ஓய்வுநிலை நிதி உதவியாளர் ச.பிரேம்குமார் மற்றும் விசேட விருந்தினராக தென் மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோ சனை அதிகாரி க.ஈஸ்வரன் ஆகி யோர் கலந்துகொள்வர். (வ)

## மணிமேகன் முன்பள்ளிக்கு நவீன கட்டடம்

மானிப்பாய், பெப்.13
வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் மணிமே கன்முன்பள்ளிக்குநவீனவடிவிலான கட்டடம் அமைக்கப் பெற்றுள்ளது.
லண்டன் கந்தசாமி தர்மலிங்கத் தாரின் எதிர்காலச் சந்ததியினரின் தூரநோக்கம் கருதி, நிலம்–நிதி–க்கட்டடம் என்பன வழங்கி புதிய மணிமேகன் முன்பள்ளி கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்.
இந்த முன்பள்ளி கட்டடத் தொகுதியை வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், வலிகாமம் தெற்கு, மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.மகேந்திரன் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். (வ–50)

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கக் கூட்டம்

தென்மராட்சி, பெப்.13
தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற வுள்ளது.
சங்கத் தலைவர் செல்லையா அமர சேகரம் தலைமையில் நடைபெற வுள்ள இந்தக் கூட்டத்தில் சங்க உபவிதி 43 க்கு அமைய ஏதாவது பிரேரணைகள் பிரேரிக்க விரும்பு வோர் அந்தப் பிரேரணையின் பிரதி களை நண்பகல் 12 மணிக்கு முன் தமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு செயலாளர் கேட்டுள்ளார்.
இந்த அறிவித்தலுடன் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட் டம், மொத்தக் கடன் எல்லை, சென்ற கூட்ட அறிக்கை, சங்கத்தின் புதிய முயற்சிகள், 2012 ஆம் ஆண்டுக் கான நிதியாண்டு கணக்காய்வு அறிக்கைப் பிரதி என்பனவும் அனுப் பப்பட்டுள்ளன. (வ–122)

## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களுக்கு புதிய விடுதி



மட்டக்களப்பு, பெப்.13
கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உட்பட்ட மட்டக்களப்பு கல்லடி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதி கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர் கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜாவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிறின்ஸ் காசிநாதரும் இணைந்து புதிய விடுதியை திறந்து வைத்தனர்.
உயர் கல்வி அமைச்சின் 150 மில்லியன் ரூபா நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அந்தக் கட்டடம்100அறைகளைக்கொண்டு அமைந்துள்ளதுடன் 400 மாண வர்கள் தங்கக்கூடிய வகையி லும் வசதிகள் செய்யப் பட்டுள்ள தாக சுவாமி விபுலானந்தா அழ கியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் எம்.பிறேம்குமார் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் கற்கைகள் நிறு வகத்தின் பிரதிப் பதிவாளர் ரி.விஜயகுமார், பேரவை உறுப் பினர்கள், கிழக்கு பல்கலைக்கழக பீடாதிபதிகள், விரிவுரையாளர் கள் உட்படப் பலர் கலந்து கொண் டனர். (வ–10)

## நல்லூரில் பிரதேச செயலக கலாசார பிரிவு நடத்திய பரிசளிப்பு நிகழ்வு



யாழ்ப்பாணம்,பெப்.13
கலாசார மரபுரிமைகள் அமைச்சு நல்லூர் பிரதேச செயலக கலா சாரப் பிரிவுகள் 2014 ஆம் ஆண்டு நடத்திய மாணவர்கள் திறந்த வெளிப் போட்டியாளர் களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் கள், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நல் லூர் பிரதேச செயலகத்தில் பிர தேச செயலர் பா.செந்தில் நந்த னன் தலைமையில் நடைபெற் றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவு ரையாளர் எல்.குமரனும், சிறப்பு விருந்தினராக பிரபல ஓவியர் ஆசைராசையாவும் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியின் பாடல், நடனம் என்பனவும் நிகழ்வில் இடம்பெற்றன.
வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்களை நல் லூர் பிரதேச செயலர் பா.செந் தில்நந்தனன், பேராசிரியர் கும ரன், உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், ஓவியர் ஆசைரா சையா, உதவி பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதிய ழகன் ஆகியோர் வழங்கிக் கௌர வித்தனர். சுமார் 80 பேர் வரை யில் பரிசில்கள், சான்றிதழைப் பெற்றுக் கொண்டனர். கலாசார உத்தியோகத்தர்எஸ்.தமிழ்மாறன் மற்றும் விருந்தினர் உரைகளும் இடம்பெற்றன. (வ–7)

## நூல்களின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.13
சப்ரகமுவபல்கலைக்கழகமொழித் துறையின் முதுநிலை விரிவுரை யாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் எழுதிய நூல் களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேரா சிரியர் சி.தில்லைநாதன் தலை மையில் நடைபெறும். நிகழ்வுக்கு புத்தகப்பூங்கா நிறுவுநர் புரவலர் அல்ஹாஜ் ஹாஷிம் உமர் முன் னிலை வகிப்பார்.
நிகழ்வுக்கு கௌரவ விருந்தின ராக கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் இரகுபதி பாலஶ்ரீதரன் தம்பதியினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் எஸ்.தியாகராசா, நாகபூஷணி அம்மன் ஆலய அறங் காவலர் ப.க.பரமலிங்கம், பி.எம். ரெக்ஸ் ரைஸ் உரிமையாளர், தொழில திபர் பம்பே மணியம் தம்பதியர் ஆகியோர் கலந்து கொள்வர்.
நூல் வெளியீட்டுரையை கொழும் புத் தமிழ்ச் சங்கத் தலைவர் இர குபதி பாலஶ்ரீதரன் நிகழ்த்து வார்.
பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ச.தில்லை நாதன் நூலை வெளியிட்டு வைக்க, புத்தகப் பூங்கா நிறுவுநர் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.
நூல் விமர்சன உரையை தேசிய கல்வி நிறுவக முன்னாள் கல்வி ஆலோசனை நிபுணர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் நிகழ்த்துவார். (வ)

# மட்டு.மாவட்டத்தில் கடும் மழை மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



மட்டக்களப்பு, பெப்.13
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தமூன்றுதினங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப் பட்டுள்ளது.
செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்று முன்தினம் காலை 5.30 மணி வரையான 21 மணிநேரத்தில் 28.6 மி.மீ. மழை வீழ்ச்சி பதிவா கியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலைய பொறுப்பதி காரி கே.சூரியகுமார் தெரி வித்தார்.
அடை மழை காரணமாக காத் தான்குடி, ஆரையம்பதி, மண் முனை வடக்கு, கொக்கட்டிச் சோலை, வவுணதீவு, வெல்லாவெளி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்ந்த இடங்கள் உட்பட பல வீதிகள் நீரில் மூழ்கி யுள்ளன.
பல இடங்களில் வடிகான்கள் நிரம்பி வழிவதையும் அவதா னிக்க முடிகின்றது. கடல் கொந் தளிப்புக்காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மீன் பிடி வள்ளங்களும் உபகரணங் களும் கரையிலிருந்து நீண்ட தூரத்துக்கு அப்பால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தையும் அவ தானிக்க முடி கின்றது.
நேற்றுக் காலை பாடசாலை செல்லும் மாணவர்களும் மழை காரணமாக பெரும் அவஸ் தைகளை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

**பெயர்மாற்றம்**
26, கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெஸ்லி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **ஜெஸ்லி டேவிட்** என பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
ஜெஸ்லி டேவிட்.

**TVகள் மலிவு விற்பனை**
SONY Wega 14" - 5000/=, 21" -10000/=, 25"- 14000/=
BOX வகைகள். குளிர் சாதனப் பெட்டிகள் -20000/=,
கசெற் ரேடியோ - 3000/=, Sony DVD - 3250/=
தொடர்பு - 077 044 0370 (குமரன் OT அப்பளம்)
சோனி ரேட் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
K.K.S வீதி, கன்னாகம்.

**தவறிவிட்டது**
02.02.2015 அன்று பிற்பகல் 3.45 மணியளவில் திருநெல்வேலிச் சந்திக்கும் ஆரியகுளச் சந்திக்கும் இடையில் வங்கி ஆவணங்கள் அடங்கிய ஒரேஞ்கலர் Bag ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 219 7776

**செல்லா சினிமா** யாழ்ப்பாணம்
40அடி அகலம் LED திரையில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
அஜீத் நடிக்கும் என்னை அறிந்தால்



காட்சி: 10.30, 2.30, 6.30, 9.30
முற்றிலும் குளிரூட்டப்பட்டது

**Majestic Cineplex Jaffna**
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

**ஊழியர் தேவை**
01.விற்பனையாளர்
02.கணக்காளர்
03.சாரதி
(வயது 25 முதல் 45 வரை)
வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்.
தொடர்பு: ஜமுனா ஸ்ரோர்ஸ்
50, மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.
077 742 2604

**ஆங்கில ஆசிரியர் தேவை**
யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு ஆங்கிலம் (Spoken English) கற்பிக்கக்கூடிய தகுதியுள்ள ஆங்கில ஆசிரியர் ஒருவர் தேவை.
2014 ஆம் ஆண்டு நலன்விரும்பி ஒருவரின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட செயற்திட்டம் ஒன்றுக்காக மேற்படி கோரிக்கை விடப்படுகின்றது.
தகுதியும் விருப்பமும் உடையோர் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி. இல. 021 226 3138
12/02/2015 - அதிபர்

## வலய மட்ட ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சை

2014ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளும் அதற்கு மேற்பட்ட புள்ளி களையும் பெற்று தற்போது தரம் 6இல் யாழ். வலயப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை9மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும் வலய மட்ட ஒலிம்பியாட் தெரிவுப் பரீட்சைக்கு உரிய பொறுப்பாசிரி யர்களுடன் சமுகமளித்துத் தோற்ற முடியும் என்று யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதய குமார் அறிவித்துள்ளார். (வ)

## உள்ளூராட்சி வாரவிழா

யாழ்ப்பாணம், பெப்.13

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரவிழா இன்று வெள்ளிக் கிழமை பி.ப.2 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

சபைத் தலைவர் வியாகேசு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக எம்.கே. சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், வே.சிவயோகன் மற்றும் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கொ.ஜக்ஸீல், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்த குமார் ஆகியோர் கலந்து கொள் வர். உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியோருக்கு பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (வ-9)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சந்திரேஸ்வரன்



யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, உடையார் லேனைப் பிறப் பிடமாகவும் பிரான்ஸ் St maurice ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சந்தி ரேஸ்வரன் 09.02.2015 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன் னையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், ஜெகதீஸ்வர னின் அன்பு மருமகனும், ஜெகதீபா வின் பாசமிகு கணவரும், விகா ஷினியின் ஆருயிர்த் தந்தையும், லோகேஸ்வரன் (பிரான்ஸ்), சுபா ஜினி (கனடா), கௌரீஸ்வரன் (பிரான்ஸ்), றாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகன்யா, நகுலேஸ்வரன், சக்திசடாட்சரம், லலிதா மற்றும் ஜெயப்பிரபா, சிவகஜன் ஆகியோரின் அன்பு மைத்து னரும், அனந்தின் அன்புச் சகலனும், சுகீஷன், நிவாஷன், சாஜினி, சஜீத்தன், சாகித்யா ஆகியோரின் அன்பு மாமனும், கோகுலன், கௌசிகா, அஷிகா, லாகவன், அபிநயன், லசிகா ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், அனிஷ், அஷ்விகா ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.02.2015 திங்கட்கிழமை பிரான்ஸ் நேரப்படி மு.ப 9.00 மணியளவில் பிரான்ஸில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.
தொ.பே: 0033647794183

(56719)(3.4.7)



### கனகரத்தினம் இராமநாதன்

(முன்னாள் உ.ப.அதிபர்- யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி)

யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், சுதுமலை, கனடா Mississauga ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராமநாதன் 08.02.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (K.S.S) - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதம் (முன்னாள் ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் ஆரு யிர்க் கணவரும், கீதா அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பாலேந்திரா (முன்னாள் G.M-பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) மற்றும் சுப்பிரமணியம் (முன்னாள் D.G.M - மக்கள் வங்கி), ஜெயரட்ணம் (முன்னாள் அதிபர் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பால்ரஞ்சன் (T.D.வங்கி) அவர் களின் அன்பு மாமனும், குணபாக்கியம், மகேஸ்வரி, சந்திரோதயம், காலஞ்சென்றவர்களான பராஜசேகரம், நரேந்திரன், சிறீதரன், நாகராஜேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி, புஸ்பராணி, கலாநிதி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பால சுப்பிரமணியம், காலஞ்சென்ற நகுலநாயகி ஆகியோரின் அன்புச் சம்மந்தியும், சண்முகலிங்கம், திசைவீரசிங்கம், காலஞ்சென்ற நடன சபாபதி ஆகியோரின் அன்புச் சகலனும், மகிஷா, ஷமிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.02.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொ.பே. + 19055 028180 குடும்பத்தினர்.

(56712) (45.3.7)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகதேவி விக்னேஸ்வரன்



மட்டுவில் தெற்கு வாகை யடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வநாயகதேவி விக் னேஸ்வரன் 11.02.2015 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லையா வாத்தியார் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான கதிரேசு -பரமேஸ் வரி தம்பதியரின் அன்பு மரு மகளும், விக்னேஸ்வரனின் (ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், நடேஸ்வரன், பகீரதி, கண்ணன், இன்பரதி, விஜயரதி (பிரதேச செயலகம், தென் மராட்சி), விஜிதரன் ஆகியோரின் பாசமிகு தாயும், Dr. செல்வ நாயகராஜா, செல்வநாயகமலர், செல்வநாயகசோதி, செல்வ நாயகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வள்ளிநாயகி, கைலைநாயகி, செல்வநாயகி, இராஜேஸ்வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கவிதா, கணேசநாதன், நிலாந்தி, தவராசா, துவாகரன் (வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமியும், நவீனா, டெசிகா, சகானா, சயீனா, பிரவீன், அபிரோஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வாகையடிவீதி, மட்டுவில்தெற்கு,
சாவகச்சேரி.
021 205 7637, 077 7259105

தகவல்:
குடும்பத்தினர்.

(51899) (4.3.7)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி கனகலட்சுமி கந்தசாமி

வேலணை, வங்களாவடியைப் பிறப்பி டமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி. கனகலட்சுமி கந்தசாமி 12.02.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், மீனாம்பாள்,காலஞ் சென்ற தியாகராஜா ஆகியோரின் சகோதரி யும், சந்திரசேகரம் (லண்டன்), ஸ்ரீதேவி ஆகி யோரின் பாசமிகு தாயாரும், பத்மா (லண்டன்) காலஞ்சென்ற நித்தியானந்தன் (ஆனந்தன்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
திருமதி நித்தியானந்தன் ஸ்ரீதேவி
077 693 8492

(50225)(3.5.7)

### திருமதி இராக்கினிஅம்மா பாக்கியநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், வலைப்பாடு றோ.க.வித்தியாலயம்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வலைப்பாட்டை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி இராக்கினி அம்மா பாக்கியநாதன் 11.02.2015 காலமானார்.

அன்னார் பாக்கியநாதனின் அன்பு மனைவியும், யஷ்மின், ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற அந்தியேகு கோம்மாசி அவர்களின் அன்பு மருமகளும், ஞானப்பிரகாசம், காணிக்கை, றோசலின், அன்ரன் ஆகியோரின் அன்புச் சகோதரி யும், தருமசீலி, லோகசீலன், லலி, ஜீவா, யங், றக்கிலி, தர்சிறெரன்ட், வதனி, பவாத்தி, றொபின்சன், யோன்சன், கின்சன், நிக்சன், டிக்சன், லக்சன், லக்சினி ஆகியோ ரின் பெரியதாயும், எக்மன், றிக்மன், காலஞ்சென்ற றஞ்சினி மற்றும் றெமன், நெல்சன், றஜனி, கின்சன்றெச், லிங்கா யக்சின், லிங்கா கிறிஸ்ரின், டனஸ் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2015) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் புனித அன்னம்மா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாள் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(56723)(1.4.7)

## மெய்வன்மைப் போட்டி

அல்வாய்பெ.13

வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா, ரூபவாஹினி தமிழ்ச் செய்தி பிரிவின் முன் னாள் பணிப்பாளர் சி.வன்னிய குலம், ஓய்வு பெற்ற கப்பல் முகாமையாளர் க.குணசிங்கம் ஆகியோரும் கலந்து கொள் வர். (ஒ)

★ ★ ★

சாவகச்சேரி இந்துக்கல் லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று வெள் ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்லூரி மைதா னத்தில் இடம்பெறும்.

பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராகக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை கலந்து கொள் வார். (வ-9)

★ ★ ★

மிருசுவில் விடத்தற்பளை கமலாசினி வித்தி யாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தி யாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடை பெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தி னராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினராக மருத்துவர் வே.ஆறுமுகமும் கலந்து கொள்வர். (வ-9)

★ ★ ★

அல்லைப்பிட்டி றோ.க.த.க. வித்தியாலய வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.என். பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீ ஸன் கலந்துகொள்வார். (வ)

★ ★ ★

யாழ்.சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு வித் தியாலய மைதானத்தில் அதிபர் என்.சி. மகேந் திரன் தலைமயில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட், சிறப்பு விருந்தினராக புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை ஆர்.எஸ்.நேசராசா அடி கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (வ-7)

★ ★ ★

வரணி,பெப்.13

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தி யாசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ் வில் பிரதம அதிதியாக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் சிறப்பு விருந்தினராக வித்தி யாசாலை பழைய மாணவனும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான (வலி காமம்) சி.கந்தசாமியும் கலந்து கொள் வர். (வ-122)

★ ★ ★

பருத்தித்துறை, பெப்.13

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி யாலய வருடாந்த இல்ல மெய்வன் மைப்போட்டி நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் வித்தி யாலய அதிபர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ். பல்கலைக்கழக பொறியியல்துறை தலைவருமான கலாநிதி சுப்பிரம ணியம் சிவகுமார் கலந்து கொள்ளவுள் ளார். சிறப்பு விருந் தினராக ஹாட்லிக் கல்லூரி பகுதித் தலைவர் ந.விஜய குமார் கலந்து சிறப்பிப்பார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில் களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி யோகேஸ்வரி சிவகுமார் வழங்கிக் கௌரவிப்பார். (வ)

# குறைந்த விலையில் கைபேசி



மைக்ரோசொப்ட் நிறுவனம் Microsoft Nokia 215 என்ற புதிய கைபேசி ஒன்றை குறைந்த விலையில் அறிமுகம் செய்யவுள்ளது.

29 டொலர் விலையான இந்தக் கைபேசியில் 2.4 அங்குல அளவு, 320 x 240 Pixel Resolution உடைய திரை, 0.3 மெகா பிக்செல்களை உடைய கமரா மற்றும் 8MB சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன.

இந்தக் கைபேசியில் பேஸ்புக் மற்றும் மெசெஞ்சர்களுக்கான அப்பிளிக்கேஷன்கள் நிறுவப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இந்தக் கைபேசி ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், ஆசியா ஆகிய நாடுகளில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

# ஸ்மார்ட் கடிகாரம் விரைவில் அறிமுகம்

ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் பல்வேறு நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு களமிறங்கியுள்ளன.

இவற்றில் Garmin என்ற நிறுவனமும் கால்தடம் பதித்துள்ளது. இந்த நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ள Garmin Vivoactive கடிகாரம் GPS தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளதுடன், விளையாட்டுத்துறை சார்ந்த அப்பிளிக்கேஷன்களையும் உள்ளடக்கியுள்ளது.

கறுப்பு மற்றும் வெள்ளை என இரு நிறங்களில் கிடைக்கக்கூடிய இந்தக் கடிகாரத்தின் விலை 249.99 டொலர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இதயத்துடிப்பு வீதத்தை அறிந்து கொள்ளும் வசதியையும் உள்ளடக்கிய கடிகாரம் 299.99 டொலர்களாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




# கீபோர்ட் மற்றும் மவுஸை ஒருங்கே கொண்ட சாதனம்



கணினிப் பாவனையில் கீபோர்ட் மற்றும் மவுஸின் பாவனை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

இந்தச் சாதனங்கள் பல்வேறு தொழில்நுட்ப பக்கங்களை உள்ளடக்கியதாக புதிது புதிதாக அறிமுகம் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது மற்றுமொரு பரிணாமத்தை எட்டியுள்ளது.

அதாவது கீபோர்ட் மற்றும் மவுஸை ஒரே சாதனமாகக் கொண்டு Key mouse என்ற பெயருடன் உருவாக்கப்பட்டுள்ளது.

QWERTY கீபோர்ட் வசதி காணப்படுவதுடன் கேஹம், இணைய உலாவல், கிராபிக்ஸ் எடிட்டிங் போன்ற வேலைகளை இலகுவாகச் செய்யக்கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.




# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

## மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.

கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று, 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிர்காலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:

தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-

செல்வன்/செல்வி ..............................

சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு

..............................

கற்கும் பாடசாலை: ..............................

தரம்: ..............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..............................

வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..............................

ஆசிரியரின் பாடத்துறை: ..............................

அதிபர் பரிந்துரை:

மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .............................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும் பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10.11.12.13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




அகவையில் உதயன்

## சொத்துக் குவிப்பு வழக்கில் பவானி சிங்கை நீக்கக் கோரிய மனு தள்ளுபடி



புதுடில்லி, பெப்.13
அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு விசாரணையில் சிறப்பு அரசுத் தரப்பு வழக்கறிஞர் பவானி சிங்கை நீக்க வேண்டும் என்று கோரும் தி.மு.க பொதுச் செயலர் க.அன்பழகனின் மனுவைக் கர்நாடக உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்துச் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.
இந்த மேல் முறையீட்டு வழக்கில் அரசுத் தரப்பின் சிறப்பு வழக்கறிஞராக பவானி சிங் முன்னிலையாகக்கூடாது என வலியுறுத்தி தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.
அந்த மனுவைத் தள்ளுபடி செய்து, நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
ஒரு வழக்கில் சிறப்பு வழக்கறிஞராக ஒருவர் நியமிக்கப்பட்டால், வழக்கின் கடைசி வரை அவரே முன்னிலையாகி வாதிடலாம் என்றும்– பவானி சிங் அரசு வழக்கறிஞராகத் தொடர்வதற்கு கர்நாடக அரசின் மறு உத்தரவு தேவையில்லை என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் குறிப்பிட்டனர்.
மேலும், மேல் முறையீட்டு மனுவில் ஜெயலலிதா, சசிகலா தரப்பு வாதங்கள் முடிவடைந்துவிட்ட நிலையில், அரசுத் தரப்பு வழக்கறிஞரை மாற்றினால் வழக்கு மேலும் தாமதமாகும் என்று குறிப்பிட்ட நீதிபதிகள், அந்த மனுவைத் தள்ளுபடி செய்வதாக உத்தரவிட்டனர்.



சிரிய மக்களின் அகதி வாழ்க்கையும் அவர்கள் துருக்கியை நோக்கி பனியிலும் – குளிரிலும் செல்லும் நிலைமையும் மிகப் பெரும் அவல நிலையாகவுள்ளது.

### பிரான்ஸ் மருத்துவமனையில் குழந்தைகள் மாறிய வழக்கு:

## 13 கோடி நட்டஈடு

பரிஸ், பெப்.13
பிரான்ஸில் தனியார் மருத்துவமனையில் பிறந்த 2 குழந்தைகள், பெற்றோரிடம் மாற்றி கொடுக்கப்பட்ட வழக்கில், பெற்றோருக்கு 13 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு பிரான்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பிரான்ஸில் உள்ள கேன்ஸ் நகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன், 2 பெண் குழந்தைகள் பிறந்துள்ளன. பின்னர் அந்தக் குழந்தைகளை, பெற்றோர்களிடம் செவிலியர்கள் தவறுதலாக மாற்றிக் கொடுத்துள்ளனர். தன்னிடம் வளர்ந்த பெண் குழந்தையின் கறுப்பு நிறம் மற்றும் தலை முடியை வைத்து சந்தேகம் அடைந்த ஷோபி தம்பதி டி.என்.ஏ. பரிசோதனையின் மூலம் குழந்தை மாறியதைக் கண்டு பிடித்துள்ளனர்.



குழந்தை மாறியது 10 ஆண்டுகளுக்குப் பிறகே இவர்களுக்கு தெரியவந்துள்ளது. அதைத் தொடர்ந்து தனது மகள் மனோன் செர்ரோனை தீவிரமுயற்சியின் பின்னர் அவர்கள் கண்டுபிடித்தனர். பின்னர் அதுகுறித்து கிரேசே நகர நீதிமன்றத்தில், மருத்துவமனையின் மீது இரு பெண் குழந்தைகளின் பெற்றோரும் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.
இந்த வழக்கு விசாரணை கடந்த 10 ஆண்டுகளாக நடந்துவந்த நிலையில், தற்போது மாறிய குழந்தைகளுக்கு 20 வயது ஆகியுள்ளது குறிப்பிடத்தக்கது.
இந்தநிலையில் நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில் மருத்துவமனையில் மாற்றி வழங்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கு மருத்துவமனை நிர்வாகம் 13 கோடி ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

# உக்ரைனில் மீண்டும் வெடித்தது மோதல்

### 45 பேர் சாவு; 80பேர் காயம்



கீவ், பெப்.13
உக்ரைன் நாட்டில் அரசபடையினர் மற்றும் கிளர்ச்சியாளர்கள் இடையே மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. அந்த மோதலில் 45 பேர் சாவடைந்துள்ளனர்.
உக்ரைனில் கடந்த 10 மாதங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டுக் கிளர்ச்சியால் 5,300 பேர் சாவடைந்துள்ளனர். அந்த மோதலை முடிவுக்கு கொண்டு வரும் நிலையில் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் கூடி ஆலோசனை நடத்தவுள்ளனர்.
இந்தநிலையில், கிழக்கு உக்ரைனில் உள்ள கிரானட்டார்ஸ்க் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் நேற்று மேற்கொண்ட ரொக்கெட் தாக்குதலில் 19 ராணுவ வீரர்கள் சாவடைந்துள்ளனர். பொதுமக்களில் 11 பேரும் உயிரிழந்துள்ளனர். கிழக்கு உக்ரைனிலுள்ள இராணுவத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் 8 பேரும், டானெட்ஸ்க் பகுதியில் நிகழ்ந்த மோட்டார் தாக்குதலில் 7 பேரும் சாவடைந்ததாக இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.
அந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த சுமார் 80 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுவதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## டில்லிக்கு மாநில அந்தஸ்து வழங்க கோருகிறார் கெஜ்ரிவால்

பிரதமரின் இல்லத்தில் பிரதமர் மோடியை அரவிந்த் கெஜ்ரிவால் நேரில் சந்தித்துப் பேசியுள்ளார். அதன்போது டில்லிக்கு மாநில அந்தஸ்து வழங்கவேண்டும் என்று பிரதமரிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அது குறித்து பரிசீலிப்பதாக பிரதமர் உறுதியளித்ததாகவும் தெரிவித்துள்ளார். அதன்போது கெஜ்ரிவாலுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடியிடம், தமது பதவியேற்பு விழாவுக்கு வரவேண்டும் என்றும் கெஜ்ரிவால் அழைப்பு விடுத்துள்ளார். யூனியன் பிரதேசமாகவுள்ள டில்லிக்கான தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி அமோக வெற்றி பெற்றதையடுத்து, புதிய அரசு அமைக்கும் வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது..



## பின்லேடனுக்கு அடைக்கலம் வழங்கி இருந்தது பாகிஸ்தான்

### ஐ.எஸ்.ஐ. முன்னாள் உளவாளி பரபரப்புத் தகவல்

இஸ்லாமாபாத், பெப்.13
அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனுக்கு பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு அடைக்கலம் அளித்திருக்கக்கூடும் என்று அந்த நாட்டின் முன்னாள் உளவாளி தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கியிருந்த பின்லேடனை அமெரிக்கக் கடற்படையின் வீரர்கள் கடந்த 2011 ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றனர். இதுகுறித்து பாகிஸ்தான் அரசு பின்லேடன் தங்கள் நாட்டில் பதுங்கியிருந்தது தெரியாது என்று தெரிவித்திருந்தது.
இந்தநிலையில் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பில் பணியாற்றிய லெப்டினென்ட் ஜெனரல் ஆசாத் துரானி, அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்த சிறப்பு பேட்டியில் சில உண்மைகளை உளறியுள்ளார். அபோதாபாத்தில் ஐ.எஸ்.ஐ. அமைப்பின் இரகசிய வீட்டில் பின்லேடன் பதுங்கியிருந்தாரா என்று ஆசாத் துரானியிடம் அல்ஜசீரா நிருபர் கேள்வி எழுப்பியபோது துரானி மழுப்பலாக பதிலளித்துள்ளார். ஆனால் அவரை அறியாமல் அந்தவேளையில் உண்மையைக் கூறிவிட்டார். பின்லேடனை பற்றி ஐ.எஸ்.ஐ. அமைப்புக்கு மட்டுமே தெரிந்திருக்க முடியும். வேறு எவரும் அவர் குறித்து அவ்வளவு எளிதாக தகவல்களைத் திரட்ட முடியாது. அதுபோல பின்லேடனின் இருப்பிடம் குறித்து அமெரிக்க உளவு நிறுவனங்களுக்கு தகவல் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. ஐ.எஸ்.ஐ. அமைப்புதான் தகவல் அளித்திருக்க வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட கணிப்பு. உண்மையில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது என்று ஆசாத் துரானி தெரிவித்துள்ளார்.
அவரது பேட்டியை மேற்கோள் காட்டி பின்லேடனுக்கு அடைக்கலம் அளித்தது பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவு அமைப்பு தான் என்று அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.





மத்திய தரைக்கடலில் மூழ்கி விபத்துக்குள்ளான அகதிகளின் படகிலிருந்து பயணிகளை மீட்கும் மீட்புக்குழு

# இரு அகதிப் படகுகள் மூழ்கி 300 பேர் சாவு

## மத்திய தரைக் கடலில் பேரிடர்

அல்ஜீயர்ஸ், பெப். 13
மத்தியதரைக் கடலில் பய ணித்துக் கொண்டிருந்த இயந்திரப் படகுகள் தட்ப வெட்ப நிலைமை மோசமடைந்து அலைகளின் சீற்றத்தால் கடலில் மூழ்கியதைத் தொடர்ந்து 300பேர்வரை உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு அறிவித்துள்ளது.
ஆபிரிக்காவின் வடபிரா ந்தியத்தில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு புகலிடம் கோருவதற்காக சென்ற அகதிகளுக்கே அந்தநிலைமை ஏற்பட்டிருப்பதாக ஐ.நா உயர் ஸ்தானிகராலயத்தின் பிராந்தியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் மிகவும் மோசமான மனிதப் பேரவலம் என அவர் குறிப்பிட்டார். புகலிடக்கோரிக்கையாளர்கள் கடந்தசனிக்கிழமை நான்குபடகுகள் மூலம் லிபியாவிலிருந்து பய ணத்தை ஆரம்பித்திருந்தனர். அதில் இரு படகுகள் மூழ்கியுள்ளன. அவர்களில் 9 பேர் உயிருடன் காப்பாற்றப்பட்டு இத்தாலியின் லம்பே–டுசா தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பணிப்பாளர் வின்சன் கொச்ரெல் தெரிவித்துள்ளார்

# ஒபாமாவை மிரட்டும் ஐ.எஸ். தீவிரவாதிகள்



வொஷிங்டன், பெப். 13
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைக் குடும்பத்துடன் கொல்லப் போவதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.
நியூஸ்வீக் பத்திரிகையின் டுவிட்டர் தளத்துக்குள் ஊடுருவிய ஐ.எஸ். தீவிரவாதிகள் அதில் துணிச்சலான முஜாஹிதீன் என்ற தலைப்பில் மிரட்டல் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.
அந்த அறிக்கையில் ,பிரெஞ் பத்திரிகை அலுவலகத்தைத் தாக்கியது போன்று ஒபாமா குடும்பத்தினர் மீதும் தாக்குதல் நடத்துவோம்.
ஐ.எஸ்.ஐ.எஸ்., அமைப்புக்கு எதிராக அமெரிக்கா ஆரம்பித்துள்ள நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்பதற்காகத் இந்த தாக்குதல் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்சேல் பெயரைக் குறிப்பிட்டு அவர்கள் அனுப்பியுள்ள எச்சரிக்கை செய்தியில், மிச்சேல் ஒபாமா உனது மகள்கள் மற்றும் கணவரைப் பார்த்துக் கொள்.
அமெரிக்கா சிரியா, ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருக்கும் எங்களின் சகோதரர்கள் கொல்லப் பட்டுள்ளனர். இதற்கு பதிலடியாக உங்கள் நாட்டின் சைபர் பாதுகாப்பைத் தகர்ப்போம் எனத் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)

# பெல்ஜிய தீவிரவாதக் குழுவின் தலைவருக்கு 12 ஆண்டுகள் சிறை

புருசெல்ஸ், பெப். 13
சிரியாவிலும் வேறு இடங்களிலும் சென்று போராட, ஜிகாதிகளை அனுப்பினர் என்று குற்றஞ்சாட்டப் பட்டிருந்த ஷரியா பார் பெல்ஜியம் என்று தம்மைக் கூறிக் கொண்ட அமைப்பு ஒரு தீவிரவாத அமைப்பே என்று பெல்ஜியத்திலுள்ள நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.
அந்த அமைப்பின் தலைவரான பௌவாத் பெல்காசெம்முக்கு தீவிரவாதக் கருத்துக்களை பரப்பியமை, சிரியா மற்றும் ஈராக்கில் சண்டையிடுவதற்கு அங்கத்தவர்களை ஏற்பாடு செய்தமை ஆகிய குற்றங்களுக்காக 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் ஐரோப்பாவில் தீவிரவாதம் தொடர்பாக நடைபெற்ற மிகப்பெரிய வழக்கு விசாரணைகளில் ஒன்றாக அந்த வழக்கு கருதப்படுகிறது.
அந்த வழக்கில் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட 46 பேரில் ஒருவரைத்தவிர அனைவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்துள்ள நீதிமன்றம், அவர்களுக்கு மூன்று முதல் பன்னிரண்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதித்துள்ளது.
அந்த வழக்குத் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களில் எட்டு பேர் மட்டுமே, ஆண்ட்வர்ப் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர். ...றவர்கள் சிரியாவில் இருப்பதா...வா அல்லது இறந்துவிட்ட...கவோ கருதப்படுகின்றனர் என்று ...தரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக பிரிட்டனின் பணயக் கைதி பரப்புரை

லண்டன், பெப்.13
பிரிட்டனைச் சேர்ந்த பணயக் கைதி ஒருவரின் புதிய வீடியோ ஒன்றை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.
பிரிட்டனைச் சேர்ந்த பணயக் கைதியை வைத்து வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், கொலை மிரட்டல் விடுப்பதற்குப் பதிலாக அந்தப் பணயக் கைதி மூலம் தங்கள் அமைப்புக்கு ஆதரவாக பரப்புரை செய்துள்ளனர்.
பிரிட்டனைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் ஜோன் கேன்ட்லி கடந்த 2012ஆம் ஆண்டில் .சிரியாவின் அலெப்போ நகரில் செய்தி சேகரித்தபோது ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார்.
அவரை வைத்து தற்போது வெளியிட்டுள்ள 12 நிமிட வீடியோவில், ஜோன் கேன்ட்லி ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு ஆதரவாக அந்தப் பகுதி செய்திகளை விவரிக்கிறார்.
தீவிரவாதிகளின் சட்டங்கள் குறித்தும் தீவிரவாதிகளின் வீரம் குறித்தும் இடைவிடாது விவரித்துள்ளார்.
மேலும், ஒரு பாடசாலையின் முன்னால் நின்று, அந்தப் பாடசாலையில் இருந்துதான் அடுத்த தலைமுறை ஜிகாதிகள் உருவாகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.



*ஜோன் கேன்ட்லி*

பின்னர் வீடியோவில் ஆளில்லா உளவு விமானம் குறித்து ஜோன் தெரிவிக்கையில், எத்தனை கண்கள் கண்காணித்தாலும், கொத்து கொத்தாகக் குண்டுகளை வீசினாலும் ஐ.எஸ். தீவிரவாதிகளை எவராலும் அழிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.
ஜோன் கேன்ட்லி கொலை செய்யப்பட்டிருக்கக்கூடும் என்று அஞ்சப்பட்ட நிலையில் அவரது வீடியோவைத் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். இறுதியில் அவர் பேசுகையில், இது எனது கடைசி பதிவு என்று தெரிவித்துள்ளதால் அவரது குடும்பத்தினர் அச்சமடைந்துள்ளனர். (ஒ–ரி)

# தாக்குதலில் இருந்து தப்பியது ஆஸ்திரேலியா

## ஐ.எஸ்.தீவிரவாதிகள் இருவர் கைது



கன்பரா, பெப்.13
ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த இரு நபர்கள் ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ள இருந்த தீவிரவாதத் தாக்குதலைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.
ஆஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் முகமது கியத் மற்றும் ஓமர் அல்–குடோபி என்ற இரண்டு பேரின் வீட்டில் சோதனை நடத்தியுள்ளனர்.
அந்தத் தேடுதல் வேட்டையின் போது பயங்கரமான ஆயுதங்கள், கத்திகள் மற்றும் தீவிரவாத கொடி மற்றும் தாக்குதல் நடத்துவது தொடர்பாக அவர்கள் பேசியது தொடர்பான வீடியோ ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.
அதனையடுத்து கைது செய்யப்பட்ட அந்த இருவரிடமும் மேற்கொண்ட விசாரணையில், ஆஸ்திரேலியாவில் அவர்கள் தீவிரவாதத் தாக்குதலை மேற்கொள்ள இருந்தமை தெரியவந்துள்ளது.

# ஆதிவாசிப் பெண்ணை கரம் பிடித்தார் சுவீடன் நாட்டு பொறியியலாளர்

இந்தியாவின் கோத்தகிரியில், சுவீடன் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் ஆதிவாசி கிராமத்தைச் சேர்ந்த பெண்ணை ஒருவரைத் திருமணம் செய்து கொண்டுள்ளார்.
சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் ஜே.நில்ஸ் விக்லுண்ட் என்பவர், கோத்தகிரியில் உள்ள ஆதிவாசிகளுக்கு உதவி செய்து வரும் கீஸ்டோன் அறக்கட்டளைக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளார். அந்த வேளையில் கோத்தகிரியை அடுத்துள்ள கரக்கோடுமட்டம் என்ற ஆதிவாசி கிராமத்தைச் சேர்ந்த என்.செல்வி என்பவரை அவர் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். அதனையடுத்து இரு வீட்டாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து இரு வீட்டாரின் சம்மதத்துடன் கோத்தகிரி சத்திமலை முருகன் கோயிலில் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.



# இந்த ஆண்டாவது கொடியேற்றம் காண்பாரா மருதடி விநாயகர்?

■ க. அரசரத்தினம்



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் கொடியேற்றத் திருவிழா சம்பந்தமாக, தர்மகர்த்தா சபையினருக்கும் திருவிழா உபயகாரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு இணைக்கப்பாடின்றி நீதிமன்றம் வரை செல்லவுள்ளதால் வருடாந்த உற்சவம் இந்த முறை இடம்பெறுமா என்ற ஏக்கமும் கவலையும், கடந்த பத்து வருடங்களாக வருடாந்த உற்சவத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இந்தவிடயம் குறித்து விசாரணையை மேற்கொண்டுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், இணக்கப்பாடு ஏற்படாததால் ஆலயம் புனர்நிர்மாணம் தவிர்ந்த ஏனைய மரபு சார்ந்த விடயங்களில் சேர்த்தல், தவிர்த்தல் மாற்றம் செய்தல் என்பனவற்றைப் பொதுச்சபை கூடும் வரை தனது அங்கீகாரம் இன்றி மேற்கொள்ள வேண்டாம் என்று தர்மகர்த்தா சபையின் தலைவர் மற்றும் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆலயம் கடந்த ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக் கலைஞர்களின் உதவியுடன் கருங்கற்களைப் பயன்படுத்தி சுமார் 25கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு, இந்த மாதம் 02ஆம் திகதி மாகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.



ஆரம்பகாலம் தொட்டு தனியாரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த மேற்படி ஆலயம் 1978ஆம் ஆண்டு வழிபடுவோர் சங்கத்தினரால் மேற்கொள்ளபட்ட நீதிமன்றநடவடிக்கையைத்தொடர்ந்து 1982 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15ஆம் திகதியிலிருந்து பொது ஆலயமாக மாற்றப்பட்டு, தர்மகர்த்தா சபையின் நிர்வாகத்தின் கீழ் இன்று வரை இயங்கி வருகிறது.

மேற்படி ஆலயம் கடந்த ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக் கலைஞர்களின் உதவியுடன் கருங்கற்களைப் பயன்படுத்தி சுமார் 25கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு, இந்த மாதம் 02ஆம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து தற்பொழுது 48 தினங்கள் மண்டலாபிஷேகமும் இடம் பெற்று வருகிறது.

இந்த நிலையில் தற்பொழுது வருடாந்த உற்சவத்துக்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வரும் தர்மகர்த்தா சபையினர், ஒரு சமூகத்தினரால் ஆரம்ப காலம் தொட்டு பல தலைமுறையினரால் நடத்தப்பட்டு வந்த கொடியேற்றத் திருவிழாவை வழமைபோல் இம்முறையும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடைமுறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இதனால் தர்மகர்த்தா சபையினருக்கும் திருவிழா உபயகாரர்களுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளது.

பொது ஆலயமாக மாற்றப்பட்ட மேற்படி ஆலயம், அரச அதிபரின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வருவதால் தர்மகர்த்தா சபையினரின் நவடிக்கை குறித்து கொடியேற்றத்திருவிழா உபயகாரர்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிணக்குக் குறித்து விசாரணையில் ஈடுபட்ட பிரதேச செயலர் இணக்கப்பாட்டுக்கு தர்மகர்த்தா சபையினர் உடன்பட மறுத்ததால் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து தர்மகர்த்தா சபையினருக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

"ஆலயத்தின் கொடிமரம், கொடிச்சீலை, கொடிக்கயிறு, தர்ப்பை அணிதல் மற்றும் தட்சணை வழங்கல் தொடர்பானது" என்ற தலைப்பில் தர்மகர்த்தா சபையின் தலைவருக்கு அனுப்பிய மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொடிமரம், மிகநீண்டகாலமாக முறைப்பாட்டாளர்களினால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. கொடிச்சீலை மற்றும் கொடிக் கயிறு என்பன குறித்த முறைப்பாட்டுக்காரரினால் மிக நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்துள்ளன.

தர்ப்பை அணிதல் மற்றும் தட்சணை வழங்கல் போன்ற வழக்காறுகளும், கொடியேற்றத் திருவிழா மற்றும் கொடியிறக்கம் போன்ற சந்தர்ப்பங்களில் முறைப்பாட்டாளரினால் மிக நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

குறிப்பிட்ட முறைப்பாட்டாளரினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வழக்காறில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும் எனின் அவரின் இணக்கத்துடனேயே மேற்கொள் ளப்படவேண்டும்.

அவரின் இணக்கமில்லாமல் செய்யப்படுகின்ற மாற்றங்கள் ஆலயச் சூழலில் தேவையற்ற மனக்கசப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

ஏற்கனவே இருதரப்பினரும் ஒத்துக்கொண்டதற்கமைவாக கொடிமரத்தைப் பலாமரத்தினாலும் கலசத்தை செப்பினாலும் அமைக்குமாறும் அதற்கான செலவை முறைப்பாட்டாளர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறும் கொடியெற்றம், கொடியிறக்கம் போன்றநாள்களில் முறைப்பாட்டாளர்களினால் மிக நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த தர்ப்பை அணிதல் மற்றும் தட்சணை வழங்கல் என்பவற்றில் மாற்றம் எதுவும் செய்ய வேண்டாம் எனவும் தொடர்ந்து அந்த நடைமுறையைப் பின்பற்றும் வண்ணமும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இது சம்பந்தமாக தர்மகர்த்தா சபையினருடன்தொடர்புகொண்டு கேட்டபோது கொடியேற்றம் முடிவுற்றவுடன் அங்கு சமுகமளித்திருக்கும் குருக்களுக்கு யாத்திராதானம் வழங்குவது வழக்கம் (தட்சணை). இந்த தட்சணையை உபயகாரர்களுக்குப் பதிலாக தர்மகர்த்தா சபையினரே வழங்கவேண்டும் என்று தெரிவித்த கருத்தை உபயகாரர் ஏற்றுக்கொள்ள மறுப்பதே இந்த நிலைக்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.



# ஜனசக்தி ஆயுள்

## விற்பனை குழுவின் 8 பேர் மில்லியன் டொலர் மாநாட்டில் பங்கேற்க தகுதி

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி, காப்புறுதித் துறையில் அதன் 20ஆவது வருட தலைமைத்துவத்தை கொண்டாடும் வகையில் அதன் விற்பனை ஊழியர்களை தொழில் வெற்றி நோக்கி அபிவிருத்தி செய்து வருவதுடன், இந்த நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதிப் பிரிவைச் சேர்ந்த 8 அங்கத்தவர்கள் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெறவுள்ள மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்கான தகுதியை பெற்றுள்ளனர்.

அவர்களுள் ஒரு அங்கத்தவர் மாத்திரம் ஏனையவர்களைக் காட்டிலும் சிறப்பாகப் பிரகாசித்தார். அவர் ஹட்டனைச் சேர்ந்த ருவன் குமார ஆவார்.

ஜனசக்தி நிறுவனத்தில் 18 ஆண்டுகள் பணிபுரியும் ருவன், வாழ்நாள் உறுப்புரிமையைப் பெற்று, தொடர்ந்து 10 ஆண்டுகளாக மில்லியன் டொலர் வட்ட மேசை மாநாட்டிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மில்லியன் டொலர் போட்டியில் 10 தடவைகள் கலந்து கொள்ளும் முதல் இலங்கையராக மாத்திரமன்றி, மில்லியன் டொலர் அமெரிக்க கழகத்திற்கான தகுதியைப் பெற்ற முதலாவது ஜனசக்தி ஊழியராகவும் அவர் விளங்குகின்றார்.

மேலும் காப்புறுதித்துறையில் புதிதாக நுழையும் சந்தர்ப்பத்தில் பல்வேறு விதமான சவால்களை சந்தித்ததாக ருவன் குறிப்பிட்டார். காப்பீட்டின் முக்கியத்துவத்தை பெருமளவானோர் அறிந்திராத சமயத்தில், காப்பீட்டின் கோட்பாடு தொடர்பில் மக்களுக்கு அறிமுகம் செய்தமையே அவர் முகங்கொடுத்த மிகப்பெரிய சவாலாகும். அவர் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் மிகச் சிலரே காப்புறுதி திட்டங்களைக் கொண்டிருந்த ஹட்டன் போன்ற பிரதேசத்திலிருந்து ருவன் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மனந்தளர்வதற்கு மாறாக அவர், காப்புறுதித்திட்டமொன்றைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை அப்பிரதேச மக்கள் மத்தியில் விழிப்பூட்டுவது தொடர்பில் கடுமையாக உழைத்தார்.

ருவனின் தந்தை ஒரு விவசாயி. அவருடைய தொழிலை ருவனும் பின்பற்ற வேண்டும் என தந்தை விரும்பினார். இருப்பினும், ருவன் விடாமுயற்சியுடன் கடுமையாக உழைத்து அப்பகுதி மக்கள் மத்தியில் காப்பீட்டின் தேவை குறித்து வலியுறுத்தினார். அவரது முயற்சிக்கு ஜனசக்தி ஆதரவளித்ததுடன், கடின உழைப்பையும் கௌரவித்திருந்தது. இதனால் ருவன் மோட்டார் சைக்கிள், கார், புதிய மனை மற்றும் அலுவலகம் போன்றவற்றை கொள்வனவு செய்யும் அளவிற்கு தம்மை உயர்த்திக் கொண்டார்.

எனது கல்வியின் நனவுக்குவ [illegible] ஆதரவை வழங்கிய ஜனசக்திக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது இலக்கை அடைவதை எளிதாக்கும் வகையிலான சிறந்த பல திட்டங்களை ஜனசக்தி கொண்டுள்ளது. இலங்கை சார்பாக பங்குபற்றுவதற்கும் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள மற்றும் ஏனைய நிபுணர்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்குமான பெறுமதி வாய்ந்த அனுபவமாக மில்லியன் டொலர் மாநாட்டில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. நான் தற்போது ஐக்கிய அமெரிக்காவுக்கு 8 தடவைகள் பயணித்துள்ளேன் என ருவன் தெரிவித்தார்.

ஜனசக்தி நிறுவனம் ஊழியர்கள் பிரகாசிப்பதற்கான ஆதரவு மற்றும் வாய்ப்பை வழங்குகிறது. வெல்லவாயவைச் சேர்ந்த மானெல் ஜ பக்ஷ மிகக்குறுகிய காலத்தில் அதாவது மில்லியன் டொலர் வருடாந்த இலக்கை 9 மாதங்களில் பூர்த்தி செய்து கடந்தாண்டு இடம்பெற்ற மில்லியன் டொலர் மாநாட்டில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜனசக்தியின் சிறந்த பயிற்சி திட்டங்களே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்தார். அவரது சக பணியாளர்கள் ஆனுசுவு இற்கு தகுதி பெறுவதைக்கண்டு தாம் உந்துசக்தியை பெற்றதாக மானெல் தெரிவித்தார்.

ருவனைப் போல மானெலும் அவரது பிரதேசத்தில் கடுமையாக உழைத்து பொலிஸார் முதல் ஆசிரியர்கள் வரை பரந்துபட்ட மக்களைத் தமது வாடிக்கையாளர்களாக உருவாக்கிக் கொண்டவராவார். எனது தொழில் வாழ்க்கையில் மிக உயர்ந்த நிலைக்கு என்னை ஜனசக்தி கொண்டு சென்றுள்ளதுடன், இந்த நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

ருவன் மற்றும் மானெல் ஆகியோரைத் தவிர்ந்து, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ்.தீபா, ஆர்.ரபீத்வஜன் மற்றும் ,வி.பிரபாகரன், ஆயுள் – தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த அமில ஹர்ஷன மற்றும் எம்.ஏ.எஸ்.டி.பிரசன்ன, மஹரகமவைச் சேர்ந்த எஸ்.பிரதீப் ஜயவர்தன ஆகிய ஜனசக்தி ஆயுள் குழுவை சேர்ந்த 6 உறுப்பினர்கள் இவ்வருடம் நடைபெறவுள்ள மில்லியன் டொலர் மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். அங்கு அவர்கள் உலகம் முழுவதிலிமிருந்து வருகை தரும் சர்வதேச விற்பனை நிபுணர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெறுவர். யாழ்ப்பாணத்திலிருந்து மூவர், கொழும்பிலிருந்து மூவர் ஹட்டனிலிருந்து ஒருவர் மற்றும் மொனராகலையிலிருந்து ஒருவர் இதற்குத் தகுதி பெற்றதிலிருந்து ஜனசக்தி நாடுமுழுவதும் உள்ள தமது விற்பனைக் குழுவினருக்கு சமனான வாய்ப்புக்களை வழங்குகிறது என்பது தெளிவாகின்றது. (க)




## கட்டாக்காலி நாய்களின் தொல்லைக்கு முடிவு கிட்டுமா?

தங்கள் பத்திரிகையின் அபிமான நேயர்களில் நானும் ஒருவன். தங்களின் "வாசகர் திருமுகம்" பகுதியில் வாசகர்களின் நல்ல கருத்துக்கள் பிரசுரிக்கப்படுதல் ஒரு சிறப்பான விடயமாகும்.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பொறிமுறையை செயற்படுத்தக் கூடிய சூழ்நிலை தற்போது காணப்படுகின்றது. மேற்படி விடயத்தை தங்கள் பத்திரிகையின் "வாசகர் திருமுகம்" பகுதியில் பிரசுரித்து அதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய வகையில் பிரசுரிக்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது பழமொழி. அதேபோல் கட்டாக்காலி நாய்கள் யாழ்ப்பாணம் எங்கும் பல்கிப் பெருகிவிட்டன. கட்டாக்காலி நாய்களால் விசர்நாய்க்கடி, உண்ணிக் காய்ச்சல் போன்ற கொடிய நோய்களின் தாக்கம் அதிகரிப்பது மட்டுமன்றி, சுற்றுப் புறச்சூழல்கள் மாசடைதல்களும், இதன் மூலமாக தொற்று நோய்களின் தாக்கங்களும் அதிகரிக்கின்றன. மேலும், கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால் சன நடமாட்டம் கூடிய சந்தைகளின் முன்புறம், பாட சாலைகளின் முன்புறம் போன்ற இடங்களில் வாகன விபத்துக்கள், குறிப்பாக மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கடந்த கால ஆட்சியில் கட்டாக்காலி நாய்களை அழிக்க மஹிந்த சிந்தனையில் இடம் வழங்கப்படாமை நாம் அறிந்ததே. அதற்கு ஜீவகாருண்யம்காரணமாகஅமைந்திருக்காது. ஏனெனில்எத்தனையோ விலைமதிக்க முடியாத மனித உயிர்கள் தயவு தாட்சணியம் இன்றி பெற்றோரின், உடன் பிறப்புக்களின் கண் முன்னாலேயே சுடப்பட்டு கொலை செய் யப்பட்டிருந்தார்கள். ஆனால் கட்டாக்காலி நாய்களை மட்டும் சுடுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தேவையற்ற, கட்டாக்காலி நாய்களை அழித்து மானிட சமூகத்துக்கு ஏற்படுகின்ற தொந்தரவுகளை நீக்க சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள் மாநகர சபைகள், ஆகியவற்றின் அதிகாரிகள் இனி மேலாவது தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் தங்கள் பத்திரிகையின் "வாசகர் திருமுகம்" பகுதியில் இந்த விடயத்தைப் பிரசுரித்து உதவுமாறு தங்களை வேண்டுகின்றேன்.

*கொக்குவில் மாறன்.*

## எந்த வகையில் நியாயம்?

கடந்த 31.01.2015 ஆம் திகதி மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த மகேஸ்வரி நிதியத்தின் நிர்வாகமே! நீங்கள் எங்களது நிலைமையை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தீர்களா? ஐயா நீங்கள் கூறினீர்கள் உங்களது 250க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 3 வார காலம் எதுவித வருமானமும் இல்லாது கஷ்ட நிலையில் உள்ளதாக. அது என்னமோ உண்மைதான்.

ஆனால் எமது லொறி உரிமையாளர் சங்கத்தில் 800க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் லொறித்தொழிலையே நம்பி வந்தனர். ஆனால் அதனை உங்களது நிதியம் பறித்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இதனை நாம் யாரிடம் போய் முறையிட்டோம்? முறையிடுவோம்? தற்போது நாம் கூலி வேலைக்கு சென்றே எமது குடும்பத்தைக் கொண்டு நடத்துகின்றோம். நீங்கள் அளவுக்கதிகமாக மணலை அகழ்ந்துவிட்டு அக்கிராம மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தீர்கள். இதனால் அவர்கள் உங்களது மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தினார்கள்.

இதனை நீங்கள் அரசியல் நோக்கம் என்றால், எங்களது தொழில் வாய்ப்பை உங்களது நிதியம் தட்டிப்பறிப்பது எந்த வகையில் நியாயமானது? ஐயா இனியாவது எமது தனியார் லொறி கூட்டுறவுச் சங்க உரிமையாளர்களை ஒரு கணம் சிந்தித்துப் பார்த்து, எமக்கு முன்னர்போன்று தொழில் வாய்ப்பைப் பெற்றுத் தாருங்கள்.

*கே.யோகேந்திரன்*
*சரசாலை*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# பொலிஸாருக்கு அழைப்பாணை

## இளைஞன் உயிரிழப்பு விசாரணை தொடர்பில்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்.நகரில் இடம்பெற்ற இளைஞனின் உயிரிழப்பு விபத்தா அல்லது கொலையா என்பது தொடர்பில் பொலிஸாரால் உரிய விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. எனவே அது தொடர்பில் விளக்கமளிக்க யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையும் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரியையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி புவனேந்திரராசா (வயது–23) என்பவர் விபத்தில் காயமடைந்ததாகத் தெரிவித்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். எனினும் அந்த 3 நாள்கள் வரை பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததோடு நீதிமன்றுக்கு அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை.

இறப்பு விசாரணையின்போது அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்து இறப்பு விசாரணை அதிகாரி யாழ்.நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

அது தொடர்பான வழக்கு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது உயிரிழந்தவரது தாயாரும் நீதிமன்றில் முன்னிலையாகித் தனது மகனின் உயிரிழப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பொலிஸாரை எச்சரித்த நீதிமன்று, போக்குவரத்துப் பொலிஸார் ஏற்கனவே உரிய முறையில் செயற்படாமைக்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும் எந்தவித ஆக்கபூர்வமானநடவடிக்கையும்எடுக்கவில்லை எனத் தெரிவித்ததுடன் இது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக குறித்த இரண்டு பேரையும் மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது. (த–4–103)

# ஓய்வூதிய அதிகரிப்பை வழங்குமாறு கவனவீர்ப்பு

## மன்னாரில் திங்களன்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 13

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைச் செலவை ஈடு செய்யும் வகையில் ஓய்வூதியக் கொடுப்னவு அதிகரிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து – உரிய கொடுப்பனவை வழங்க வலியுறுத்தி, மன்னார் மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினால் எதிர்வரும் திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசின் இடைக்கால வரவு– செலவுத் திட்டம் கடந்த 29 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து ஆயிரம் ரூபாவினால் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

'வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய வகையில் புதிய அரசின் கொடுப்பனவு அமையவில்லை' என்று சுட்டிக்காட்டியுள்ள மன்னார் நகரப் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் பீ.ஏ. அந்தோனி மார்க், இதனைக் கண்டித்தே தமது போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர்கள் மற்றும் மன்னார் மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் மாவட்ட செயலகத்தின் முன்பாக முன்னெடுக்கவுள்ளனர். இதில் சகல ஓய்வூதியர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த–5)

# திறன்மிக்க சுகாதார சேவை விரைவில் ஏற்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப் 13

நாட்டில் வினைத்திறன் மிக்க சுகாதார சேவையை உருவாக்குவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் தனது அரசு எடுக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

தாதிகள் சேவைக்கான முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்கும் நிகழ்வு மஹரகமையிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் பேரவை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு வருடாந்தம் 21 ஆயிரம் கேள்விப் பத்திரங்களைக் கையாள்வதாகக் குறிப்பிட்டதோடு, இந்த செயன்முறையானது அமைச்சை ஒரு தனியார் கம்பனியாக மாற்றி யுள்ளது.

தேசிய ஔடதக் கொள்கைச் சட்டத்தை அறிமுகப்படுத்தி எதிர்காலத்தில் அமைச்சினால் கையாளப்படும் பெரும் எண்ணிக்கையான கேள்விப் பத்திர நடவடிக்கைகளைக் குறைக்கவுள்ளேன். பொதுமக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கத் தாதிமார் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான டாக்டர் ராஜித சேனாரத்ன, கரு ஜயசூரிய, சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த–4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வெறும் பூசி மெழுகுதல்களால் இன நல்லிணக்கம் பிறக்காதே!

வடக்கு மாகாண மக்களின் ஆணையைப் பெற்றுள்ள மாகாண சபை முதல்வரினதும், உறுப்பினர்களதும் மன உணர்வுகளை, ஜனாதிபதியும் பிரதமரும் புரிந்து கொள்ள வேண்டும் --

தமிழ் மக்களின் அரசியல் ஆணையையும் ஆதரவையும் பெற்றுள்ள கட்சிகளையும் தலைவர்களையும் புரிந்து கொண்டால் மட்டுமே, தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட இயலும். இதற்கான வேறு எந்தக் குறுக்கு வழியும் கிடையாது -

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

வடக்கு மாகாணம் வாழ் தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள சபையின் உறுப்பினர்களதும் முதல்வரினதும் மனஉணர்வுகளை, ஜனாதிபதியும் பிரதமரும் புரிந்து கொள்ளவேண்டும். அதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்ட முடியும். வேறு எந்த வகையான குறுக்கு வழிகளும் கிடையவே கிடையாது --

வடக்கில் இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைப்பது வேறு. இராணுவத் தேவைகளுக்குத் தொடர்பற்ற நடவடிக்கைகளுக்காக மக்கள் சொத்துக்களை இராணுவம் கையகப்படுத்தி, தமது தேவைக்கெனப் பயன்படுத்துவது வேறு. மக்களின் காணிகள் அவர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் --

வடக்கிலிருந்து இராணுவத்தினரைப் படிப்படியாக வாபஸ் வாங்குவது என்பது வேறு. இராணுவத் தேவைகளுக்கும் அப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை மக்களிடம் மீளக் கையளிப்பதே உகந்தது - என்றும் அவர் இடித்து உரைத்திருக்கிறார்.

வடக்கு மாகாணசபையில் கடந்த பதினோராம் திகதி நிறைவேற்றப்பட்ட, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் குறித்து அரச தரப்புத் தலைமைகளிடம் கசப்பு உணர்வு உண்டாகி இருப்பது, பால்போன்று வெள்ளையாகத் தெரிகிறது.

மறுபக்கம் பார்த்தால், வடக்கு மாகாண சபையின் சரித்திர முக்கியத்துவமும் பிரசித்தமும் பெற்ற தீர்மானத்தை, அனைத்துலகம் உள்வாங்கி விடுமோ என்ற அச்சம் ஆளும் தரப்புக்களைப் பிடித்துள்ளது. அவற்றிடம் இருந்து வெளிவரும் மந்தமான கருத்துக்களில் இருந்து அது புலப்படுகிறது; தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட, சரித்திரப் பிரசித்தமானது என்று பதிவு செய்யப்பட வேண்டிய தீர்மானம், முழுக்க முழுக்க உண்மைகளையே வெளிப்படுத்திக் காட்டுகிறது.

சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்மைகள் கசக்கும் என்பதற்காக, அவற்றை வெளிப்படுத்தாமல் மௌனம் சாதிக்க இயலாது. ஏதோ வகையில் அது பகிரங்கமாகி விடும். தனிமனிதர் வாழ்க்கையில் மட்டுமன்றி, ஆட்சியியலுக்கும் இது பூரணமாகப் பொருந்தும்.

அதனை உள்ளூர உணர்ந்தாவது, நாட்டின் இப்போதைய (புதிய) அரச தரப்பு, ஓர்இனத்தை வருத்தும் வகையில் இயற்றிய தவறுகளை ஏற்றுக்கொண்டு, பரிகாரம் தேடிச் செயற்பட வேண்டும். கடந்த காலத்தில் இன்னொரு தரப்பார் (ஆட்சியாளர்) இயற்றிய இம்சைகளை மறைத்துவிட முயலக்கூடாது.

அவ்வாறு இல்லையெனில், இப்போது ஆட்சிக் கட்டிலில் ஏறியிருப்போருக்கும் முந்தைய குற்றங்களில் பங்கு உள்ளதாலேயே அச்சம் உண்டாகிறது என்ற சூத்திரம் (Formula) மேலுயரும்.

இன்னொரு வகையில் நோக்கின், நல்லிணக்கத்தை மனதார - உள்ளூர - உணர்ந்து விரும்பும் எந்தத் தரப்பும், பாதிப்புற்ற மக்களுக்குரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மனமுவந்து செயற்பட வேண்டும்.

கடந்த கால நடத்தைகளால் இடம்பெற்ற தவறுகளை மறைப்பதற்கு அரசியல் வாதிகள் முயற்சிப்பார்களாயின் தவறு. அதனால் அவர்கள் மீதான அபிப்பிராயங்களும் தலைகீழாக மாறிவிடும்--

சாதாரண தென் ஆபிரிக்க மக்கள் கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றை தெரிந்து கொள்ளத் தீர்மானித்து விட்டனர். அவை மீள இடம்பெறக்கூடாது என்பதன் பொருட்டே அந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளனர்--

பழிக்குப் பழி வாங்குவதற்காக அவர்கள் இந்த வழியைக் கைக்கொள்ளவில்லை. எதிர்காலத்தில் சேர்ந்து வாழ்வதற்கான நிலையைக் காண்பதற்காகவே முந்தியவற்றை அறிந்து கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர்- என்று எடுத்துரைத்தார் நெல்சன் மண்டேலா.

கடந்த காலத்தில் நடைபெற்று வந்ததை தெரிந்து கொள்வதன் மூலம், வன்செயல்களுக்கு முடிவு கட்டி, சட்டத்தின் ஆட்சியை மேலோங்கச் செய்ய இயலும்-- என்றும் அவர் எடுத்தியம்பினார்.

அதேவேளையில், அந்தப் பட்டறிவின் பிரகாரம், நல்லிணக்கத்தை நிலைநிறுத்த உண்மையான, நேர்மையான அடிப்படையில், இலங்கையின் புதிய அரசுக்குத் தாட்டம் உண்டா? அதுவே உகந்த உரிய வழி.

வெறும் பூசி மெழுகுதல், கண்துடைப்புக்களால் இன நல்லிணக்கம் உருவாகாது; வெளிப்படாது. இதனை தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்வதும், அது சார்ந்து செயற்படுவதும் எப்போது?

# தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள மாகாணசபையின் தீர்மானம்

## இலங்கையும் இந்தியாவும் கடும் ஆட்சேபம்

ராஜராஜன்

இலங்கையில் நிகழ்ந்த இறுதிப்போரின்போது இடம்பெற்ற இனப்படுகொலையென வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு உடனடியாகவே நிராகரித்துள்ளது. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன இனப்படுகொலை என்ற வார்த்தையை அரசு ஏற்கப்போவதில்லையெனத் தெரிவித்துள்ளார். போரின்போது மனித இழப்புக்கள் இடம்பெற்றதை ஒப்புக்கொண்ட ராஜித சேனாரத்ன புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதன் காரணமாகவே இது ஏற்பட்டதெனவும் விளக்கமளித்துள்ளார்.

ஆகவே இனப்படுகொலை இடம்பெற்றிருந்தால்கூட அதற்குப் புலிகள் இயக்கமே பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அரசும் வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தைக் கண்டித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான அறிக்கை சமர்ப்பிக்கப்படும்போது இந்தியா நழுவல்போக்கைக் கடைப்பிடிக்குமென்பது உறுதியாகிவிட்ட நிலையில் இந்திய அரசு வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாகத் தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நீதி வேண்டும் என்னும் தொனிப்பொருளில் பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் தமிழர்களுக்கான நீதிகோரிய சந்திப்பு ஒன்று கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது. இதில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அயர்லாந்து நிழல் அமைச்சர், பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர், வட அயர்லாந்துக்கான அமைச்சர், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அனைவரும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்றும், உடனடியாக இது தொடர்பாக சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டனர்.


நிலைமை இவ்வாறிருக்க இலங்கை மற்றும் இந்திய அரசுகள் இலங்கைத் தமிழ் மக்களின் மனவுணர்வுகளைச் சிறிதும் கவனத்தில் கொள்ளாது அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதைக் காணமுடிகின்றது. இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு நடவடிக்கையில் இந்தியாவின் பங்கும் நிறையவே உள்ளது. புலிகளை வஞ்சம் தீர்க்கின்றோம் என்ற எண்ணத்துடன் இலங்கைக்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கிய இந்தியா அப்பாவித் தமிழர்களின் உயிர்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. மாறாக இலங்கை அரசின் செயல்களை நியாயப்படுத்தவே முனைந்தது. கடந்த ஆண்டு ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அதில் கலந்து கொள்ளாது இலங்கையைக் காப்பாற்றும் முயற்சிகளில் இந்தியா ஈடுபட்டது. இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தமது தாய் நாடெனக் கருதும் இந்தியாவே துரோகமிழைப்பது ஒருபோதுமே ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

இதேவேளை – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு முன்னாள் ஜனாதிபதி உட்பட போர்க்குற்றம் புரிந்த அனைவரையும் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாடுகளுக்குப் பறந்து சென்றுள்ளார். அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஒத்திப்போடும் வகையிலான இராஜதந்திர நகர்வுகளை அவர் மேற்கொண்டு வருகிறார். அமெரிக்காவும் இதற்குச் சாதகமான வகையில் நடந்துகொள்ளுமென்பதால் இலங்கையின் எதிர்பார்ப்பு இலகுவாக நிறைவேறிவிடும்.

ஆனால் வெளிநாடுகள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் நகல்தான் மைத்திரிபால சிறிசேன என்பதைப் புரிந்துகொள்ளத் தவறியமை அவற்றின் இராஜதந்திரத்துக்குக் கிடைத்த தோல்வி என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். சில வேளை மஹிந்தவையும்அவரைச்சார்ந்தவர்களையும் காப்பாற்றும் பொருட்டு மைத்திரி ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக்கொண்டாரா என்ற சந்தேகமும் எழுகின்றது.

எது எப்படியோ மைத்திரிக்கு வாக்களித்து அவரை அரியணையில் அமரச் செய்த தமிழ்த் தேசியத் தலைவர்களும், தமிழர்களும் மீண்டுமொரு தடவை ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பது தான் உண்மை.

> “ எப்படியோ மைத்திரிக்கு வாக்களித்து அவரை அரியணையில் அமரச் செய்த தமிழ்த் தேசியத் தலைவர்களும், தமிழர்களும் மீண்டுமொரு தடவை ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பது தான் உண்மை.



# மைத்திரிபால

## யாரைப் போன்று உருவாகப் போகிறார்



“ஐ.தே.கட்சியின் பேராதரவுடன் ஜனாதிபதியான மைத்திரிபால, தற்போது சுதந்திரக் கட்சிக்காகவே சேவை புரிந்துள்ளார் என்பதே யதார்த்தம். மைத்திரிபாலவுக்கு பதிலாக ஐ.தே. கட்சி ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியிருக்குமானால், இன்று சுதந்திரக்கட்சி கடும் சவால்களையும் சிக்கல்களையும் சந்திக்கநேர்ந்திருக்கும்.

மவ்பிம - உப்புல்
யோசெப் பெர்னாண்டோ
தமிழில் வி.எஸ்.ரீ.

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால்உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வசிக்கப் போவதில்லையென ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தாம் கூறியதற்கு அமைய, தற்போதும் ஜனாதிபதி மைத்திரிபால தமது முன்னைய சுகாதார அமைச்சருக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே தங்கியுள்ளார். மிக விரைவில் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க தங்கியிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு அவர் இடம்மாற இருப்பதாகவும் தெரியவருகின்றது. ஐ.தே.கட்சியின் ஆட்சி அதிகாரத்தில் 17 ஆண்டுகள் காலமாக இருந்து வந்த ஆட்சி நிர்வாகத்தை மாற்றி அதனைச் சுதந்திரக்கட்சியிடம் ஒப்படைத்தவர் இந்த டி.பி. விஜேதுங்கவே. நாட்டில் ஜனநாயக மற்றும் ஊடக சுதந்திரத்தை முன்னிலை பெறவைக்க அவர் கடைக்கொண்ட செயற்பாடுகளே சந்திரிகாவை அதிகாரத்தில் அமர்த்தக் காரணமாகின என ஊடகவியலாளரொருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அரசமைக்கும் வாய்ப்பை ஐ.தே. கட்சிக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள மைத்திரிபால, ஐந்து ஆண்டுகள் காலத்தின் பின்னர் ஜனாதிபதிப் பதவியைப் பெற வழியமைத்துக்கொடுத்துவிட்டு அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக் கொள்வாரா? என்ற கேள்வியும் எழாமலில்லை.

மைத்திரிபால சிறிசேனவும் அரசியலில் தம்மை உருவாக்கியதும், கடைசியில் புறக்கணித்துப் புறமொதுக்கியதுமான சுதந்திரக்கட்சியைக் கைகழுவி விட்டுவிட்டு அன்னச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வென்றதுடன், உத்தியோகபூர்வமாக சுதந்திரக்கட்சியின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது அவருக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் எதிர்வரும் பொதுத்தேர்தலிலும் சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்குவது என்பதே. தாம் அவ்விதம் செயற்பட்டால், ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்த ஐ.தே.கட்சியினர் தம்மீது வைராக்கியம் பாராட்டுவர் என்ற அச்சம் அவர்மனதில்எழுவது இயற்கையே. சுதந்திரக்கட்சியின் நீண்டகாலச் சேவைக்கு அவருக்குக் கிட்டிய அதி உச்சக் கௌரவம் அமைச்சர் பதவி மட்டுமே. அவரைப் பிரதமராக ஆக்குமாறு கூட சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மஹிந்தவை வற்புறுத்தியதில்லை. தமக்கும் தமது மகனுக்கும் மஹிந்த அரசால் சிரமங்கள் ஏற்படுத்தப்படுவதாக மைத்திரி மனவருத்தப்பட்ட வேளைகளில், அது தமக்கான பாதிப்பு இல்லைத்தானே என்ற போக்கில், அதிகாரத்திமிரில் அவர்கள் மயங்கிப்போயிருந்தனர். மைத்திரி அரசினின்றும் விலகிப்போனாலும் அதனால் அரசுக்கு நட்டம் எதுவும் ஏற்படாது என்ற விதத்திலேயே அவர்கள் எண்ணி வந்தனர்.

உண்மையில் அன்னச்சின்னத்தில் போட்டியிட்டாலும், ஐ.தே.கட்சியின் பேராதரவுடன் ஜனாதிபதியான மைத்திரிபால, தற்போது சுதந்திரக்கட்சிக்காகவே சேவை புரிந்துள்ளார் என்பதே யதார்த்தம். மைத்திரிபாலவுக்கு பதிலாக ஐ.தே. கட்சி ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியிருக்குமானால், இன்று சுதந்திரக்கட்சி கடும் சவால்களையும் சிக்கல்களையும் சந்திக்கநேர்ந்திருக்கும்.

இன்று ஐ.தே.கட்சி ஆதரவாளர்களால் சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களுக்கு எந்தவிதச் சிரமங்களையும் ஏற்படுத்த வாய்ப்பில்லாமல் போயுள்ளது. அதற்குக் காரணம், மைத்திரிபால இன்று சுதந்திரக்கட்சியைப் பாதுகாக்கும் நிலையில் இருப்பதாகும். அந்த வகையில் மைத்திரிபாலவின் புண்ணியத்தால் சுதந்திரக் கட்சி பாட்டில் சரிந்துவிழாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையின் கீழ் சுதந்திரக்கட்சி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இயங்க நேர்ந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியும் அழிந்துபோக நேருமென சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் சில மாதங்களுக்கு முன்னர் கூறியமை தவறான தொன்றல்ல. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைக் கொண்டுவந்த ஐ.தே.கட்சி 17 ஆண்டுகளாக பாவங்களையே செய்தது. அந்தப் பாவத்துக்கு பிராயச்சித்தம் செலுத்த இயலாது. இதுவரை ஐ.தே.கட்சி பாவத்தைச் சுமந்து வருகிறது. சுதந்திரக்கட்சியோ நிறைவேற்று அதிகாரத்தை மேலும் அதிகரித்து அந்தப்பாவத்தை இருமடங்கு மும்மடங்காக்கி 20 ஆண்டுகளைக் கழித்துள்ளது. அந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தம் செலுத்த சுதந்திரக்கட்சிக்கு முப்பது நாற்பது ஆண்டுகள் தேவைப்படலாம்.

இந்த நிலையில் சுதந்திரக்கட்சி, எதிர்க்கட்சியாகச் செயற்பட நேர்ந்தால், அந்தக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்கள்வாயில்பிளாஸ்ரர் ஒட்டிக்கொண்டே செயற்பட நேரும். ஏனெனில் சுதந்திரக்கட்சி கடந்த 20 வருடங்களாக மேற்கொண்ட செயற்பாடுகளால், புதிதாக ஆட்சி அமைக்கும் ஐ.தே. கட்சி அரசுக்கு எதிராக அவர்களால் வாய்திறக்க இயலாது.

சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சியாக இயங்க நேர்ந்தால் எதிர்க்கட்சித் தலைவராக மைத்திரிபால சிறிசேனவே இருக்கநேரிடும். இப்போது அதுபற்றி உறுதியாகக்கூற இயலாவிட்டாலும் பெரும்பாலும் அதுவே சாத்தியப்படக்கூடும். அந்த நிலையில் சுதந்திரக்கட்சியின் பழியை அவரே தனித்துச் சுமக்க நேரிடும் என மவ்பிம அன்று குறிப்பிட்டிருந்தது.

ஆனால், இன்று மைத்திரிபால ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றியிருப்பதால் சுதந்திரக்கட்சி ஆபத்தில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாது மைத்திரிபாலவின் தோள்மீதேறி நின்று பொதுத் தேர்தலிலும் வெற்றியீட்ட இன்று சுதந்திரக்கட்சி எண்ணுகிறது.

“சுதந்திரக் கட்சி கடந்த 20 வருடங்களாக மேற்கொண்ட செயற்பாடுகளால், புதிதாக ஆட்சி அமைக்கும் ஐ.தே. கட்சி அரசுக்கு எதிராக அவர்களால் வாய்திறக்க இயலாது.

இந்தப் பின்னணியில் மைத்திரிபாலவால், நெல்சன் மண்டேலா செயற்பட்ட விதத்தில் செயற்பட இயலாதா? என வெளிநாட்டு ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்று மைத்திரிபாலவும் சகல கட்சிகளையும் இனங்களையும் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய கூட்டு அரசை நிறுவியுள்ளார். நெல்சன் மண்டேலா போன்றே முதலாவது பதவிக்கால முடிவுடன் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ளப் போவதாகவும் கூறியுள்ளார். அந்த வகையில் நாட்டின் முன்னாள் அரச தலைவர்களில் மைத்திரிபால வேறுபட்ட ஒருவராகத் தம்மை இனங்காட்டி வருகிறார்.

மைத்திரிபால தாம் இன்று ஈட்டிக் கொண்டுள்ள நற்பெயரைப், புகழை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால், ஜனாதிபதி என்ற தோரணையில் செயற்படாது அரச தலைவர் என்ற வகையில், சகல கட்சித் தரப்புக்களையும் ஒன்றிணைத்து சிறுபான்மை மக்களுக்கான உரிமைகளை வழங்கி, புதிய அரசமைப் பொன்றின் ஊடாக நாட்டில் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்தல் வேண்டும். நாட்டினதும், சர்வ தேசத்தினதும் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உள்ளாகும் விதத்தில் மைத்திரிபால செயற்படுவதென்பது, உலகின் பலமிக்க ஜனாதிபதியெனக்குறிப்பிடப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்ததை விடச் சிரமம்மிக்கதொரு செயற்பாடாகும்.

## ஞானச்சுடர்



## ஆன்மிகச் சிந்தனை

தூய பக்தியில் பயம் என்பது ஒரு சிறிதும் கிடையாது. நம்மிடம் பயம் இருக்குமானால் அது நாம் இன்னும் ஆன்மிக முதிர்ச்சி பெறவில்லை என்பதையே காட்டுகின்றது. ஆண்டவனிடம் நமக்கு பயமிருந்தால் நாம் அவனிடம் தூய அன்பைச் செலுத்த முடியாது. "நான்" என்ற மனநிலை அழியும் போது நம்மிடமிருந்து பயம் போய்விடுகின்றது. தூய பக்தி தானாகவே பிறக்கின்றது. நமக்குத் தீமை விளைவிக்கக் கூடியவைகளாக உலகில் எத்தனை எத்தனையோ இருக்கின்றன. அவற்றின் மீது நாம் "பக்தி" கொள்வது காரணமாகப் பல விதங்களிலும் துன்பங்களை அனுபவிக்கிறோம். அதற்கு மாறாக எந்தத் தீமையும் செய்யாமல் நமக்கு நன்மையை மட்டுமே செய்யும் ஆண்டவன் மீது நாம் பக்தி கொள்வோமானால் மிக மிக உன்னதமான நிலை நமக்குக் கிடைக்கும்.

## நாளை

மாசி-02
சனிக்கிழமை 14.02.2015
திதி: தசமி: பி.ப.03.46 வரை
நட்சத்திரம்: கோட்டை பி.ப.01.29
சுபநேரம்: 03.33-05.03 வரை
இராகுகாலம்:09.33-11.03 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




### ஆசைகள் அற்பத்தனமானவை

உன்னிடத்தில் இருக்கும் பதவி ஆசையை நீ பூர்த்தி செய்து கொள். உன்னுடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக்கொண்ட பின்னரே அவை எல்லாம் மிகமிகச் சாதாரணமானவை என்பது உனக்குப் புரியும் காலம் வரும். ஆனால் இந்த ஆசையை எல்லாம் தீர்த்துக்கொள்ளாதவரையில் செயல் புரியும் நிலையைக் கடக்காத வரையில் ஆழ்ந்த அமைதியும் சாந்தமும் நிறைந்த நிலையை நீ அடைய முடியாது.

## உடல் கட்டுப்பாடு

உடலில் உள்ள கொழுப்பு செல்களின் அளவு அதிகரிக்கும்போது உடல் பருமனாகிப் போகிறது. ஒரு சாதாரண உடலில் 30 முதல் 35 பில்லியன் கொழுப்பு செல்கள் இருக்கும். ஒரு பருமனான உடல் எடையை இழக்கும்போது இந்தச் செல்கள் அளவில் சிறுக்கத் தொடங்கும். ஆனால் செல்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் இருக்காது. இதன் காரணமாகத்தான் ஒருமுறை உடல் பருமனாகி விட்டால் எடையைக் குறைப்பது கடினமாகிப் போகிறது. அறுவைச் சிகிச்சை மூலம் உடல் பருமனைக் குறைப்பதற்காக சிறுகுடலின் ஒருபகுதி, அல்லது வயிற்றுப்பகுதி நீக்கப்படுகிறது. இதன் மூலம் ஒருவர் சாப்பிடும் உணவின் அளவு குறைக்கப்படுகிறது. சிறுகுடலை மாற்றி அமைப்பதன்மூலம் உடல் எடுத்துக்கொள்ளும் கலோரியின் அளவும் மாற்றி அமைக்கப்படுகிறது. சாதாரணமாக ஒருவரின் உடல் எடை 220 கிலோவுக்கு அதிகமானால் இதுபோன்ற அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.



## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 80 | 40 | 80 | 20 | 40 | 40 | 35 |
| கத்தரி | 50 | 50 | 60 | 60 | 40 | 40 | 40 | 30 |
| கரட் | 120 | 160 | 140 | ·140 | 120 | 180 | 120 | 160 |
| மரவள்ளி | 30 | 50 | 40 | 60 | 40 | 50 | 45 | 30 |
| பயிற்றை | 120 | 80 | 100 | 100 | 140 | 120 | 90 | 120 |
| பாகல் | 100 | 80 | 100 | 120 | 100 | 160 | 120 | 150 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 40 | 80 | 120 | 45 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 80 | 90 | 70 | 120 | 90 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 100 | 120 | 100 | 120 | 140 | 90 | 100 |
| பூசணி | 80 | 70 | 60 | 90 | 100 | 120 | 90 | 80 |
| தக்காளி | 180 | 200 | 180 | 180 | 200 | 200 | 240 | 200 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 90 | 80 | 80 | 80 | 80 |
| கீரை | 15 | 20 | 30 | 10 | 20 | 20 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 30 | 20 | 10 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 140 | 180 | 120 | 130 | 400 | 220 | 200 |
| புடோல் | 100 | 70 | 80 | 60 | 70 | 120 | 90 | 80 |
| கோவா | 100 | 80 | 80 | 100 | 80 | 140 | 80 | 90 |
| வெண்டி | 120 | 100 | 60 | 80 | 100 | 80 | 90 | 100 |
| போஞ்சி | 200 | 170 | 100 | 140 | 140 | 160 | 65 | 150 |
| லீக்ஸ் | 150 | 200 | 170 | 180 | 160 | 200 | 140 | 160 |
| தேங்காய் | 50 | 50 | 60 | 60 | 40 | 50 | 35 | 35 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 65 | 50 |
| தேசிக்காய் | 20 | 30 | 30 | 30 | 40 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 10 | 25 | 10 | 15 | 15 |
| கறிமிளகாய் | 180 | 150 | 150 | 200 | 220 | 260 | 220 | 200 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 70 |
| பனங்கிழங்கு | 05 | 03 | 05 | 02 | 06 | 05 | 03 | 03 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | 700 | 600 | 450 |
| நண்டு | 250 | 400 | 300 | 200 | 320 |
| கணவாய் | 500 | 550 | 500 | 600 | - |
| பாரை | 600 | 500 | 450 | 450 | 370 |
| சுறா | 550 | 500 | 550 | 600 | - |
| சீலா | 350 | 400 | 400 | 400 | 350 |
| விளை | 650 | 350 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 350 | 300 | 300 | - |
| கும்பிளா | 500 | 350 | 400 | 300 | 300 |
| கிழாக்கன் | 350 | 500 | 400 | - | - |
| ஓரா | 300 | 400 | 350 | 300 | - |
| திரளி | 200 | 300 | 250 | 200 | - |
| நகரை | 200 | 250 | 300 | - | 300 |
| ஆடை | 150 | 100 | 100 | 100 | 50 |
| ஒட்டி | 200 | 150 | 200 | 150 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 130 |
| பாலை | 500 | 450 | 350 | 300 | - |
| வாளை | 150 | 200 | 300 | 200 | 250 |
| கொய் | 120 | 150 | 80 | 100 | - |
| மதனம் | 150 | 250 | 240 | - | 350 |



## யார் நீண்டகாலம் வாழ்கிறார்கள்?

மெல்லிய மனிதர்கள் நீண்ட காலம் வாழ்வது மிகவும் கடினமான காரியமாகவே இருக்கிறது. காரணம் சுகவீனத்தை தாங்க முடியாமை, புகைத்தல் போன்ற காரணங்களால் வரும் ஆபத்துக்களை எதிர்த்து வாழ மெல்லியவர்களின் இதயங்களால் இயலாமல் போகிறது என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். எனவேதான் தமது உயரத்திற்கு ஏற்ற நிறையுடன் இருப்பது பாதுகாப்பானது என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உணவைக் குறைத்து மெலிவாக இருப்பதே அழகு என்று நினைக்கும் பலருக்கு இந்த ஆய்வு அதிர்ச்சியளிக்க இடமுள்ளது.

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 7 | | | | | |
| | 6 | | | 9 | 8 | | 5 | 7 |
| 4 | 5 | | | | | | 9 | 2 |
| 9 | | 4 | 8 | 7 | | 6 | | |
| 2 | | | | 4 | | | | 8 |
| | | 5 | | 3 | 6 | 9 | | 1 |
| 7 | 9 | | | | | | 1 | 5 |
| 5 | 2 | | 1 | 8 | | | 6 | |
| | | | | | 7 | | 8 | |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபலமானது.

## எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 6 | 5 | 3 | 2 | 7 | 4 | 8 |
| 7 | 3 | 8 | 4 | 1 | 9 | 5 | 2 | 6 |
| 4 | 5 | 2 | 8 | 7 | 6 | 1 | 9 | 3 |
| 2 | 8 | 9 | 7 | 6 | 1 | 4 | 3 | 5 |
| 5 | 6 | 1 | 3 | 4 | 8 | 2 | 7 | 9 |
| 3 | 7 | 4 | 9 | 2 | 5 | 8 | 6 | 1 |
| 9 | 4 | 5 | 6 | 8 | 7 | 3 | 1 | 2 |
| 6 | 2 | 7 | 1 | 5 | 3 | 9 | 8 | 4 |
| 8 | 1 | 3 | 2 | 9 | 4 | 6 | 5 | 7 |

# நட்சத்திரங்களின் பொதுப் பலன்கள்



## அனுஷம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், இள வயதிலேயே சிரமப் பட்டாலும், பிற்காலத்தில் நல்ல செல்வந்தராகவும், பெரும்பாலும் அயல் நாட்டில் வசிக்கக் கூடியவராகவும் இருப்பீர்கள். பயணம் செய்வதில் உங்களுக்கு நல்ல விருப்பமிருக்கும். நீங்கள் நன்கு படித்துத் தேர்ச்சி பெற்றவராகவும், பணம் ஈட்டுவதில் படுசாமர்த்தியசாலியாகவும் இருப் பதுடன், நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உதவியும் செய்வீர்கள்.

## கேட்டை

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், அழகான குணமும், மனதில் அன்பும் இருக்கும். பலவிதமான கலைகளைக் கற்பார்கள். போராட் டமான வாழ்வு அமைந்தாலும் பிற்காலத்தில் மிகுந்த புகழ் பெற் றவராக இருப்பார்கள். யாரையும் பொருட்படுத்தாமல் வாழக் கூடியவர்கள்.

## மூலம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், நீங்கள் பணக்காரராக வும், மகிழ்ச்சி நிறைந்தவராகவும் இருப்பீர்கள். நீங்கள் மற்றவர் களுக்கு தீங்கு விளைவித்திடமாட்டீர்கள். மிகவும் உறுதியான கருத் துக்களைக் கொண்டிருப்பீர்கள். தாராள சிந்தை கொண்டிருப்பீர்கள். பிறரால் விரும்பி நேசிக்கப்படுவீர்கள். நண்பர்களும் உறவினர்களும், உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் தருவார்கள். டாம்பீகமான சொகுசு வாழ்க்கையை நீங்கள் வாழ்வதுடன், பதற்றப்படாத அமைதி யான சுபாவத்தையும் கொண்டிருப்பீர்கள்.

## பூராடம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், நீங்கள் புத்திசாலியாகவும், கர்வமுடையவராகவும், மற்றவர்களுக்கு உதவியளித்து, நண்பர்களிடம் மிகுந்த ஒட்டுதலாகவும் இருப்பீர்கள். உங்கள் விருப்பத்துக்கு இசைவான மனைவியும் உங்களுக்கு கிடைப்பாள். நீங்கள் உறுதியான கருத்துக் களைக் கொண்டிருப்பீர்கள். குழந்தைகள் மற்றும் நண்பர்கள் மூலம் உங்களுக்கு மன மகிழ்ச்சி கிட்டும்.

## உத்தராடம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருப்பதால், கடமைப்பற்றுடன் கீழ்ப் படிந்தும், நல்ல குணம் படைத்தவராகவும், பல நண்பர்களைக் கொண்ட வராகவும் விளங்குவீர்கள். நீங்கள் நன்றியுடையவராகவும், அன்புள்ளம் நிறைந்தவராகவும் இருப்பதுடன், உங்களுக்குக் கிடைத்த உதவிக்கு நன் றிக் கடனும் செலுத்துவீர்கள். நீங்கள், மிகுந்த தந்திர புத்தியுடைய சாமர்த் தியசாலியாகவும், முயற்சியில் வெற்றி காண்பவராகவும் விளங்குவீர் கள். உங்களுக்கு பல செல்வந்தர்களைத் தெரிந்திருக்கும். உங்கள் முதலாளிகள் உங்களை மதித்து மதிப்புக் கொடுப்பார்கள். இசையிலும் நடனத்திலும் உங்களுக்கு அபார ஆசை இருக்கும்.

## திருவோணம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால், நல்ல சுபீட்சத்தோடும், படித்தவராகவும், புத்திசாலியாகவும் விளங்குவீர்கள். இசை, ஜோதிடம், கணிதம் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் இருக்கும். உங்களுக்கு அதீத மான, நல்ல சக்திவாய்ந்த உள்ளுணர்வு இருக்கும். உங்களுக்கு கவர்ச்சி மிக்க, தாராள மனம் படைத்த மனைவி/கணவன் கிடைப்பார்.

## அவிட்டம்

நீங்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவராதலால் இசையில் ஆழ்ந்த விருப்பம் கொண்டிருப்பீர்கள். தாராள சிந்தையும், செல்வவளமும், நல்ல தீர உணர்வும் கொண்டவராக நீங்கள் விளங்குவீர்கள். பிறர் உங்களை மதித்து மரியாதை, தருவார்கள். உங்கள் கணவன்/மனைவி உங்களை மிகவும் விரும்பி நேசிப்பார். நீங்கள் தைரியமானவராக இருப்பீர்கள். உங்கள் சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் மீது மிகவும் விரும்பி அன்பு காட்டுவீர்கள்.

## இணையத்தள மோகத்தில் பெண்கள்



இணையத்தள காதலால் பல இளம் பெண்கள் சீரழிந்து வருகிறார்கள். பலரது சோகக்கதையை அறிந்த பின்னரும் கூட இணையதள மோகத்தில் சிக்கிக் கொள்ளும் பெண்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இணையத் தளங்களில் உங்களைப் பற்றிய தகவல்களை முதலில் பொதுவெளியில் வெளிப்படுத்தாதீர்கள். உங்களுக்குப் பிடித்தது, பிடிக்காதது என எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி பொதுவெளியில் விவாதிக்க வேண்டாம் தேவையற்ற கருத்துக்கள், ஆபாசமான படங்கள் என வருபவர்களை உடனடியாக பிளாக் செய்து விடுங்கள்.

ஆனால், அதற்கு முன் உங்கள் பக்கம் தவறுகள் இல்லாதவாறு பார்த்துக் கொள்வது தான் நல்லது. பொதுவாக பெண்கள் தங்கள் பிரச்சினைகளை கண்டு பயப்படாமல், தைரியமாக வெளிவர முன்வர வேண்டும். தங்களது நெருங் கிய நண்பன் என்பதற்காக தங்கள் கணக்கு பாஸ்வேர்ட், இன்னபிற தகவல்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது. உங்கள் நண்பன் நாளை உங்கள் எதிரியாக மாறினால் உங்களைப் பழி தீர்க்க காத்துக் கொண்டிருக்கும் தருணத்தை நீங்களே உருவாக்கிக் கொடுக்காதீர்கள்.


## பெண்களைப் பார்க்கும் போது ஆண்கள்...



ஆண்கள் தமது மனதில் ஓடும் சில பட்டியலை வைத்து பெண்ணை எடைபோடு வார்கள். ஈர்க்க வேண் டிய விடயத்தில் அந் தப் பெண் அவரை கவர்ந்து விட்டால், அவன் அந்தப் பெண் ணைக் கவனிக்க தொடங்குவான். அப் படி இல்லையென்றால், அவளை அலட்சியப் படுத்தி விட்டுச் சென்று விடுவான். ஓர் ஆணினது மனதில் அப்படி என்ன ஓடுகிறது என உங்களுக்குத் தெரியுமா? பொதுவாக ஒவ்வொரு ஆணுக்கும் ஒவ்வொரு வகை விருப்பம் இருக்கும். அவன் அதற்கமைய உள்ள பெண்ணால் தான் ஈர்க்கப்படுவான். இது ஒவ்வொரு ஆணுக்கும் மாறுபடக்கூடிய ஒன்று தான் என்றாலும் கூட, ஆண்களின் உளவியல் அடிப்படையில் பார்க்கும் போது, சில பொதுவான விடயங்கள் கண்டிப்பாக இருக்கும். உங்களுக்கு வழிந்தோ டும் மிக நீண்ட கூந்தல் இருக்க வேண்டும் என்றெல்லாம் அவசியமில்லை. ஆனால் ஆரோக்கியமான, அழகிய மற்றும் நீண்ட கூந்தல் கண்டிப்பாக ஆண்களைக் கவரும். உங்கள் புன்னகை உங்கள் கண்களைச் சென்றடை கிறதா....? ஆம் என்றால், உங்கள் புன்னகைக்கு கூடுதல் காரணம் உள்ளது. அதற்குக் காரணம் உங்கள் புன்னகை உண்மையானது தானா என்பதை ஆண்கள் சுலபத்தில் கண்டுபிடித்து விடுவார்கள். நீங்கள் சந்தோஷமாகவும் மன நிறைவுடன் இருக்கிறீர்கள் என்றால் உங்கள் புன்னகையில் உண்மையுள்ளது என்பதை அது தெளிவாகக் காட்டிக் கொடுத்து விடும். உங்கள் குரலின் சுருதிக்கு ஆண்கள் அதிகமாக ஈர்க்கப்படுவார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன. அதற்கு முக்கிய காரணம், இளமை மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியத் தின் நம்பகத்தன்மையான அறிகுறிகள் குரலில் தெரியும். உங்கள் கண்களை, முக்கியமாக உடலின் மற்ற அங்கங்களை விட கண்களைத் தான் முதலில் ஆண்கள் கவனிப்பார்கள்.



## வர்ணம் தீட்டலாம் வாங்க...





# குயில் வைத்தியர்



கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தைக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு குஞ்சுகள் இருந்தன. குஞ்சுகள் வளர வளர அம்மாவிடம் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தன. ஒரு நாள், 'அம்மா எல்லாரும் பகலில்தான் சுறு சுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இரை தேடும் வேளையில் ஊரே உறங்கிக் கொண்டிருக்கிறது. இது ஏன்?" என்றது. 'நமக்குப் பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால் தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம்," என்றது தாய் ஆந்தை.

ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந் தார். ஒரு நாள் அந்தக் காகத்துக்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக் கொண்டு காட்டில் வைத்தியராக இருந்த குயிலிடம் சென்றனர். குயில் நன்றாக வைத்தியம் பார்த்து, காக்காவைக் குணமாக்கிவிட்டது. அவர்கள் வைத்தியத்துக்குப் பணம் கொடுக்காமல் சென்று விட்டனர். எனினும் குயில் அவர்களைக் காணும் போதெல் லாம் பணம் கேட்டது. என்னடா தொல்லையாப்போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து தின் பதுமாக இருந்திருக்கிறார். அதனால் ஆத்திரமடைந்த குயில் காக்காவை பிடித்து நன்கு திட்டியிருக்கிறது. இதனால், கோபம் கொண்ட குயில் இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத் தார் தான் காவல்காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்று விட்டது. அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கை யின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டு சென்று விடுவர். அது குயிலின் முட்டை என்பது தெரி யாமலே காக்கை இனம் வளர்த்து கொண்டு வருகிறது.

நம்முடைய இனத்தார் பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண் தெரியாமல் போய்விட்டது. இது தான் கதை, என்றது தாய் ஆந்தை.

அணியில் இருப்பது
பதினொருவர்
ஆயினும் வெற்றியை
இருபத்தொரு
மில்லியன் பேர்
கொண்டாடுவர்

எமது அணியினருக்கு வாழ்த்த ஒன்றிணைவோம்

அனைவருக்காகவும்
திறந்துள்ளது

ATL
அமானா தகாஃபுல் காப்புறுதி

Amana Takaful PLC (PQ23) | Tel: 0117 501 000 | Email: info@takaful.lk | Web: www.takaful.lk



## பூந்தோட்டம்

வண்ண வண்ண பூக்களால்
எண்ண மெல்லாம் துள்ளுதே !
சின்னச் சின்னக் குழந்தைகள்
சிரித்து மகிழ்ந்து பார்க்குதே !
மொட்டு விடும் ஒரு செடி
தொட்டு உண்ணும் தேனீக்கள்
விட்டுப் போக மனமில்லை
வீடாய் மாறட்டும் பூந்தோட்டம்.
காலை மாலை வேளையில்
தண்ணீர் ஊற்றும் போதிலே
செடி குளிப்பது அற்புதம்
மனங் குளிர்வது நிச்சயம்.
ஊட்டி மலர்க் கண்காட்சி
கூட்டிப் போகும் போதிலே
உள்ள மெல்லாம் பறக்குதே
நம்முள் புத்துணர்வு பிறக்குதே !
செடி வளர்த்திட விரும்பினோம்
மரம் வளர்த்திட விரும்பினோம்
சுற்றுச் சூழல் சிறந்திட
புது எண்ணத்தோட திரும்பினோம்.

## மன்னார் மீனவருக்கு பாஸ் நடைமுறை; கேள்விக்குள்ளாகிறது 100 நாள் திட்டம்

### விநோனோதராதலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

மன்னார், பெப்.13

மீனவர்களுக்கு பாஸ் வழங்கும் நடைமுறை மன்னாரில் மீண்டும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. இது அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது – இவ்வாறு தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விநோனோதராதலிங்கம்.

நேற்று வியாழக்கிழமை பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் பிரிவு இரண்டாம் நிலை செயலாளா தொம் சொப்பா மன்னார் மாவட்டத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்களை மன்னாரில் சந்தித்து கலந்து ரையாடினார். அப்போது கருத்துத் தெரி விக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அவர்,

"தொம் சொப்பா ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் தமிழ் பேசும் மக்களின் நிலமைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார். நாம் அது தொடர்பாகவும், தமிழ் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாக வும் அவருக்குத் தெளிவுபடுத்தினோம்"– என்று அவர் கூறினார்.

"ஜனாதிபதி தேர்தலுக்குப்பின் தமிழ் பேசும் மக்களின் நிலையில் மாற்றங்கள் நிகழ வில்லை. மக்களுடைய மீள்குடியேற்றம் முற்றுபெறவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து எந்த ஒரு நடவடிக் கையையும் அரசு இது வரையில் மேற் கொள்ளவில்லை. காணாமற் போனவர் களின் நிலமைகள் தொடர் பில் தீர்வுகள் இல்லை. 100 நாள் வேலைத்திட்டத்தின் நம்பிக்கை தன்மைகள் எவ் வாறு அமையப்போகின்றது என்றும் கேள்விக்குறியாகவே உள்ளது, என்பதை அவரிடம் சுட்டிக்காட்டினேன்"– என்றும் அவர் தெரிவித்தார்.

"மீனவர்கள் கடலுக்கு செல்வ தற்கு பாஸ் நடைமுறைகள் மன்னாரில் மீண்டும் நடை முறைபடுத்தப்பட்டுள்ளது. முள்ளிக்குளம் கிராமத்தின் மீள்குடியேற்றம் கேள்விக் குறியாக உள்ளது. வடக்கில் தமிழ் மக்களின் சொந்த நிலங்களில் மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக் கப்படவில்லை இராணுவ பிரசன்னம் குறைக்கப்பட வில்லை எனவே இது தொடர் பாக அதிகாரியின் கவனத் துக்கு கொண்டு சென்றுள் ளோம்"– என்றும் அவர் கூறி னார். (ற)

## மு.கா. - ஜே.வி.பி. இடையே இரகசியமான ஒப்பந்தம்

### ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, பெப். 13

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பி யுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பல இரகசிய பேச்சுகளில் ஈடுபட்டது என முஸ் லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆரம் பிக்கப்பட்டு 27ஆவது வருட நிறைவை முன் னிட்டு கட்சித் தலைமையகமான தாருஸ்ஸ லாமில் நேற்று முன்தினம் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது கட்சி 1989ஆம் ஆண்டு காலப்பகுதி யில் மக்கள் விடுதலை முன்னணியுடன் பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டோம். அந்தக் காலப்பகுதியில் அவர்களின் அடாவடித் தனம் அதிகமாகக் காணப்பட்டது. இருந் தாலும் அவர்கள் முஸ்லிம் காங்கிஸிற்கு எதிராக எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபட வில்லை. இதற்கு காரணமாக அமைந்தது இரு கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுத் தான். இந்தப் பேச்சு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருக்மன் சேனநாயக்கவின் ஏற் பாட்டில்தான் நடைபெற்றது."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியல் பயணத்தில் உயிர், உடைமை எனப் பல இழப்புக்களை சந்தித்துள்ளது. கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது ஐம்பது உறுப்பினர் கள் அளவில்தான் இருந்தார்கள். கட்சியின் அரசியல் என்ன சவால்களை எதிர்கொண் டாலும் பின்வாங்குவதில்லை"– என்றும் அவர் கூறியுள்ளார். (ற–10)

## இலங்கைக்கு வருமாறு ஒபாமாவுக்கு அழைப்பு

### மங்கள தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை இலங்கைக்குவருமாறு, வெளிவிவகார அமைச் சர் மங்கள சமரவீர அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண் டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நேற்றைய தினம் வொஷிங்டனில் உள்ள சர்வதேச அமைதிக்கான அறக்கட்ட ளையில், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இலங்கை, என்ற தலைப்பில், உரையாற் றினார்.

"அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்க வுள்ளேன். அவர் இலங்கைக்கு வருவதை நாங்கள் பார்க்க விரும்புகின்றோம். சுதந்திர இலங்கைக்கு இதுவரையில் எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியும் வரவில்லை. இதே வேளை ஐ.நா பொதுச் செயலாளர் பான்கீ மூனைச் சந்திக்கும் போதும் அவரையும் இலங்கைக்கு வருமாறு அழைக்கவுள்ளோம்"– என்று அவர் அங்கு தெரிவித்தார். (ற–5)

**BUS விற்பனை**

NC 95XX Baby rosa, Torch Light Manu 1995, Regi 2005, custom A/C Ajastable seat, T.V, DVD, Price:- 4.3 Million

தொடர்பு:- சிங்களம் or ஆங்கிலம்

077 2862006

**பணியாளர்கள் தேவை**

01.வரவேற்பாளர்

02.உதவியாளர்கள்

03.பக்கவடிவமைப்பாளர் (Photo Shop)

உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

மூர்த்தி கலர் லாப்

62/20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 077 224 7428

(கி/19720)(4.3.7)

**பணிப்பெண் தேவை**

இரண்டு குழந்தைகளைப் பராமரித்தபடி வீட்டிலிருந்து பணிபுரியக்கூடிய பணிப் பெண் உடனடியாகத் தேவை.

தொடர்பு :- 077 617 8521

(54201)(5.3)

## தமிழ் மக்களின் சிந்தனைக்கு....!

தமிழரின் தாயகம் மற்றும் தனித்துவத்தைக் காப்பதற்காக பற்றுறுதியோடும் திடசங்கற்பத்தோடும் தம்மையே அர்ப்பணிக்க முன்வந்தோரும், ஆதரவாளர்களும், தமிழர்களின் ஐக்கியஅரசியல் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படாத புறக்கணிப்பு வேண்டுமென்றே நீடிக்கப்படுவதால்......

அவர்கள் அனைவரையும் அரசியல் ரீதியாக ஒரு புதிய ஜனநாயகக் கட்டமைப்புக்குள் ஒன்றிணைத்து, அதன் மூலம் தமிழர் தம் ஐக்கியத்தையும் ஜனநாயக அரசியல் எழுச்சியையும் வலுப்படுத்தும் ஓர் அவசர, அவசிய தேவை எழுந்திருப்பதாகக் கருதுகிறோம்.

இத்தகைய கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

தங்களின் கருத்துக்களையும் அதில் இணைவது தொடர்பான தங்களின் நிலையையும் பின்வரும் முகவரிக்கு அனுப்பி உதவுக.

**சாதாரண அஞ்சல்** : **20, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்** : n.vithyatharan@gmail.com

**தொலைபேசி** : 0716248248 / 0772984514 / 021-221 9440

ஏற்பாட்டுக் குழுவின் சார்பில்,

**ந.வித்தியாதரன்**

(மூத்த ஊடகவியலாளர்)



உ

ஓம் சக்தி

**அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**

## மஹா சதசண்டிகா ஹோமம்

**22.02.2015 ஞாயிறு முதல் 04.03.2015 வரை**

அடியார் பெருமக்களே!

இதுவரை யாராலும் செய்யத் துணியாத சிறப்பு மிக்க சண்டி ஹோமத்தை வேவிலந்தை ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தானத்தினர் அம்பிகை யின் துணையோடு இந்தியாவின் பிரபல சிவாச்சாரியார் கள் மற்றும் லண்டன் ஈழத்து சிவாச்சாரியார்கள் ஒன்று சேர்ந்து இந்த கைங்கரியத்தை நிறைவேற்ற இருக்கின் றார்கள்.

எனவே ஆலயத்தில் பதிவை மேற்கொண்டவர்கள் தங்களுடைய உபய நாள்களை உடன் வந்து உறுதிப் படுத்திக்கொள்ளவும்.

காலையில் சதசண்டி ஹோமமும் மாலையில் இலட்ச அர்ச்சனையும் நடைபெற்று 04.03.2015 புதன் கிழமை அன்று முழுவதும் கிரியைகள் நடைபெற்று அம்பிகை எழுந்தருளி, மாலை 5.00 மணிக்கு இன்பர் சிட்டி கடற்கரையில் மாசிமக தீர்த்தம் நடை பெறும்.

அம்பிகை அடியார்கள் சகசண்டிகா ஹோமத்தி லும் தீர்த்தத்திலும் கலந்து அம்பிகையின் திருவருளை பெறுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**பரிபாலன சபை.**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111



உ

**திருகோணமலை தம்பலகாமம் ஸ்ரீ ஆதிகோணநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்சவிம்ஸத் (25) குண்டபக்ஷ பிரதிஷ்டா**

# மஹா கும்பாபிஷேகம்

**ஜய வருடம் பங்குனி 11ஆம் நாள் (25.03.2015) புதன்கிழமை**

**காலை 9.30 முதல் 11 மணிவரை**

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சபரிமலைக் குருமுதல்வர்

**ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்**

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

**தம்பலகாமம்.** **தேவஸ்தான தர்மகர்த்தா சபை, கும்பாபிஷேக விஷேட திருப்பணிக்குழுவினர்.**

# 31ஆம் நாள் நினைவுகள்

அமரர் சின்னராசா
மகேஸ்வரி



தோற்றம்
05.07.1938

மறைவு
14.01.2015

மாதமொன்று ஆனபோதும்
மாறவில்லை உம் நினைவுகள்
எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வம் நீர்
இன்று தெய்வமானீரோ உங்கள் ஆத்மா சாந்தி
யடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 4, இலந்தைக்குள வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

ஓம்

# நினைவஞ்சலி

அமரர்
**திருமதி பர்வதவர்த்தினி சண்முகநாதன் (பேபி)**
Late Mrs. Parvathavarthini Shanmuganathan (baby)
அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு:
09.02.1933
(தைப்பூசத் திருநாள்)


உதிர்வு:
15.01.2015
(தைப்பொங்கல் திருநாள்)

அன்னார் காலஞ்சென்ற கலாநிதி கார்த்திகேசு சண்முகநாதனின் Phd (சர்வ கலாசாலை விரிவுரையாளர்-யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை கார்த்திகேசு-செல்லம்மா தம்பதியரின் (கைலாயப்பிள்ளை) அன்பு மருமகளும், காலஞ்சென்ற சீனிவாசகம் விணாசித்தம்பி (கோப்பாய் வாத்தியார்)-சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், திருமதி சாரதாமணி விநாயகமூர்த்தியின் (லண்டன்) அன்புமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சோதிமலர் செல்லப்பா, ஜெகதீசன், சிவனேசராணி, குணத்துரை, சிவமணிதேவி ரத்தினம், குகதாசன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற Dr. நிர்மலா தேவி ரட்ணேஸ்வரன், ஸ்ரீதேவி (மலேசியா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் மறைந்த 31 நாளில் (14.02.2015) அவர்கள் எம்மோடு வாழ்ந்த சட்டம்பியார் (சுதுமலை வடக்கு) வீட்டில் முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். — குடும்பத்தினர்.

# 36 ஆவது பிறந்த தினமும் 8 ஆம் ஆண்டு நினைவு தினமும்



நவரெட்ணம்
மனோராஜ் (ராஜ்)

பிறப்பு
1979
02
13

இறப்பு
2007
01
05

திங்கள் ஒன்று எம்மை விட்டுப் பிரிந்தது அன்று
இன்று எண்ணிப்பார்க்கும் பொழுது 8 ஆண்டுகள் ஓடிவிட்டதே
தினம் உம்மை எண்ணி எண்ணி திரிகின்ற நாம்
மீண்டும் உம்மைக்காண வாய்ப்புருள்வீரா
உறவுகளுடனும் நண்பர்களுடனும் இணைந்திருந்த நீர்
இறையடியில் கிடப்பதால் எம்மை மறந்தீரோ?
உம் நினைவில் நாம் இங்கு தவிக்கின்றோமே
எமக்கினை உறுதுணைவ வருவீரா?
உதவி எனக் கேட்குமுன் முன்நிற்பீரே
இன்று உதவியை கேட்கவும் நீர் இல்லையே
காலங்கள் விரைந்தோடிச் சென்றாலும்
உம் நினைவில் தவிக்கின்றோம் எந்நாளுமே.........

(56734)(3.8) — குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



எமது யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின்
அழகியல் துறை முதுநிலை விரிவுரையாளர்
திருமதி புவனேஸ்வரி வேல்நிதி அவர்களின்
பாசமிகு மாமியார்
**ஸ்ரீமதி கமலாதேவி வேலாயுதர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, கோப்பாய் நாவலர்
இந்து தமிழ்க்கலவன் வித்தியாலயம்)
அவர்கள் 12.02.2015 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடை வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(56721) (4.3.7)

ஆசிரிய கல்வியியலாளர் கழகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாய்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றும்
வே . வேல்நிதி அவர்களின் அன்புத் தாயார்
திருமதி . **கமலாதேவி வேலாயுதர்**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.
உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
வடமாகாணம்.

(56724)(3.5.7)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
27.12.1981

மறைவு
11.02.2015

**கிருஷ்ணன் றீகன்**

அன்பின் வடிவமாய் அமைதியின் உருவமாய்
பண்பின் இருப்பிடமாய் கருணையின் உறைவிடமாய்
இல்லத்தின் குலவிளக்காய் ஆலமரமாய் நிழல் தந்து
எதிர்பாராமல் எமை தவிக்க விட்டுப் பிரிந்தீரே
எம் பள்ளியில் உடற்கல்வி ஆசானாய் வலம்
வந்த நினைவுகளை என்றும் நாம் மறவோம்
உங்கள் சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

# நடமாடிய வீட்டில் படமாகிப் போன புவனேந்திரராசா ஜீவசாந்தன் அவர்களின் 43 ஆம் நாள் நினைவஞ்சலி

கண்டி வீதி, புளியங்குளத்தைப் பிறப்பிடமாகவும் இல.27, அராலிவீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

**புவனேந்திரராசா ஜீவசாந்தன்**



மண்ணுலகில்
04.11.1992

விண்ணுலகில்
02.01.2015

நிறைவான வாழ்வினிலே நிலைத்து
நிற்கும் வேளையிலே
நெஞ்சமதைக் கனவாக்கி
நீண்டவழி சென்றீரோ
அன்பான ஜீவனே, எங்கள்
ஆசைச் செல்வமே!
ஆறுமா எம் துயரம்
அகில மதில் வாழும் வரை
உன் தந்தையை இழந்து நான் தவித்து
நின்ற வேளையிலே
அண்ணனுடன் சேர்ந்து தூணாகி
என்னைத் தாங்கி நின்றாயே!
மறக்குமோ எம் மனம் உன் நினைவை
சொர்க்க வாயில் திறந்த வேளையிலே
தூக்கிச் சென்றானே
காலனவன் எங்களைக் கண்
கலங்க விட்டானே
மாதமென்ன யுகங்கள் பல கழிந்தாலும் மறக்குமா உன் நினைவு
எரிகிறது எம் இதயத்தில் வேதனைத்தீ!
இனி ஒரு பிறப்பு உண்டென்றால்- என்றும் நீ!
எம்மிடம் உதித்திட வேண்டும் விரைவில் நீ!

எமது குலக்கொழுந்து அணைந்த செய்தி கேட்டு ஓடி வந்து துயரில் பங்கு கொண்ட அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமாகத் தமது அனுதாபத்தைத் தெரிவித்த வெளிநாட்டு உறவுகளுக்கும் கண்ணீர் அஞ்சலி, கண்ணீர் அஞ்சலிபதாகைகள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்த உறவுகளுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள் பல.

27, அராலி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 580 3613

அன்பான நீங்காத நினைவுகளுடன்
புவனேந்திரராசா சிவயோகம் (அம்மா)
புவனேந்திரராசா பிரசாந்
(அண்ணா ஜேர்மனி)

(56731)(4.3.6)

# உலகளவில் சிறந்த கல்விமுறை இலங்கையில் ஏற்படுத்தப்படும்

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், பெப். 13

கல்வித்துறையில் மாற்றம் ஏற்படுத்தும் மறுசீரமைப்பு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. சர்வதேச ரீதியில் சிறந்த கல்வியை இலங்கையில் நடை முறைப்படுத்துவதே அரசின் எதிர்காலத் திட்டம். – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இலக்கை வெற்றிகொள்ள முடியும் என்ற முழுமையான நம்பிக்கை எமக்குள்ளது. சவால்கள் பலவற்றை வெற்றிகொண்டுள்ள நிலையில் எதிர்கால சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் ஆத்ம பலம் தமக்குள்ளது"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவை றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தக் கல்லூரியின் 50 வருட நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்திருந்தால் 50 வருட நிறைவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்காது. நான் மண்ணோடு மண்ணாகியிருப்பேன். அதுவே உண்மை நிலை.

எனது வாழ்வில் நான் எதிர்கொண்ட பல்வேறு சவால்களை வெல்வதற்கு எனது ஆத்ம நம்பிக்கை உறுதுணையாக இருந்துள்ளது. நாம் சில வேளை இலகுவானது பற்றியே சிந்திக்கின்றோம். கஷ்டம் என்றால் அதனை கைவிட்டு விடுகின்றோம். அச்சுறுத்தல் அசௌகரியங்களைப் பொறுப்பேற்க விரும்புவதில்லை. சவால்கள் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் யோசிப்போம்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"மாணவர்கள் தமது இலக்கு அல்லது சாதகமான வெற்றியை அடைய இத்தகைய எதிர்ப்புகள், அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தயாராக இருப்பது முக்கியம். நான் இதுபோன்ற பலவற்றைக் கடந்தே இன்று நாட்டின் ஜனாதிபதியாகியுள்ளேன். நான் அப்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாவேன் என்று கன வில் கூட நினைத்துப் பார்த்ததில்லை.

புதிய அரசு என்ற வகையில் நாட்டில் பல மாற்றங்களுக்கு நாம் வித்திட்டுள்ளோம். இந்த சவால்களை எம்மால் வெற்றி கொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கை"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் உட்பட அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்களுடன் கல்விச் சமூகத்தைச் சார்ந்த பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

(ற–4)

# நாணயத்தாள் கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, பெப், 13

இலங்கையிலிருந்து டுபாய் ஊடாக கட்டாருக்கு வெளிநாட்டு நாணயத்தாள்களை கொண்டுசெல்லமுயன்ற நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேக நபரிடமிருந்து 4 கோடியே 83 இலட்சத்து 9 ஆயிரத்து692ரூபாவை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் கொழும்பு – மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்

# ரூபா பத்தாயிரத்துக்கு சிறுவனை விற்க முயன்ற ஒருவர் சிக்கினார்

## கம்பளை நகரில் சம்பவம்

கொழும்பு, பெப்.13

கம்பளை நகரில் நான்கு வயது சிறுவனொருவனை பத்தாயிரம் ரூபா ரொக்கப் பணத்துக்கு விற்பனை செய்ய முயற்சி செய்த நபரை கம்பளை பொலிஸார் நேற்று வியாழக்கிழமை மடக்கிப் பிடித்துள்ளனர்.

கம்பளை நகரில் சிறுவனொருவனை நபரொருவர் பணத்துக்காக விற்பனை செய்ய முயற்சிப்பதாக கம்பளை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதையடுத்து கம்பளை பொலிஸார் சிறுவனை வாங்குவதற்கு செல்வது போல் சென்று சந்தேகநபரை மடக்கி பிடித்தனர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சந்தேக நபர் தனது அண்ணனின் ஆண் பிள்ளைகளை விற்பனை செய்ய முயற்சி செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அத்துடன் இதற்கு முன்பு இச்சிறுவனின் இரண்டு வயது சகோதரனை ஐயாயிரம் ரூபாவுக்கு குருணாகல் பகுதி தம்பதியொருவருக்கு விற்பனை செய்துள்ளமையும் விசாரணைகளை தொடர்ந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சிறுவனை வாங்கிய நபரை கைது செய்யவும் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சிறுவர்கள் இருவரும் கம்பளை நகரத்தை அண்டிய பெருந்தோட்டப் பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் இவர்களின் தாய் சிறிது காலத்திற்கு முன்பு இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இச்சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த கம்பளை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக் கப் பட்டது.

(ற)

# அரசியல் பழிவாங்கலுக்குள்ளான ஐ.தே.கவினருக்கு நீதி கிடைக்கும்

## அடுத்தவாரம் அமைச்சரவையில் பத்திரம்

கொழும்பு, பெப். 13

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கும் வகையில் அடுத்த வாரம் அமைச்சரவையில் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"கடந்த 20 வருடங்களாக எதிர்க் கட்சியாக செயற்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள் பல அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகினர். எமக்கு இது தொடர்பில் [illegible] ஆயிரத்துக்கு அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அரச பயங்கரவாதம், வன்முறைகளுக்கு உள்ளான அங்கத்தவர்களுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளது.

அவர்கள் கட்சிக்கு செய்த தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றை நாங்கள் பாராட்டுகின்றோம். அவர்களது பிரச்சினைகளுக்கு நாங்கள் மதிப்பு கொடுக்க வேண்டியுள்ளது. ஆகவே, நாங்கள் எமது கட்சிக்காக் உழைத்தவர்களை ஒருபோதும் மறக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவர்களது குறைகள் விரைவில் தீர்க்கப்படுவதில் எந்தவித சந்தேகமுமில்லை. அத்துடன், இவ்வளவு காலம் பொறுத்த இவர்கள் இன்னும் சிறிது காலம் பொறுத்திருக்கவேண்டும். நாங்கள் அடுத்தவாரமளவில் அமைச்சர வையில் இது தொடர்பில் பத்திர மொன்றை சமர்ப்பிக்கவுள்ளோம்" – எனத் தெரிவித்தார்.

(ற–சி)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 20 | 03 |
| 12 | 02 |
| 1935 | 2002 |

அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்.

*அப்பா.. அப்பா.. என்று மனம் நிறைய*
*அழைத்தோமே!*
*எந்நேரமும் சிரித்தமுகமாய் சிந்தனையோடு*
*இருப்பீர்களே!*
*பதின்மூன்று ஆண்டுகள் சென்றதுவோ!*
*உங்கள் அன்புமுகத்தை காணாது.....*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சங்கத்தானை. சாவகச்சேரி. — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### கதிரவேலு முருகேசு

(ஓய்வுபெற்ற திறைசேரி உத்தியோகத்தர்)

காரைநகரைச் சேர்ந்தவரும் மலேசியாவைப் பிறப்பிடமாகவும், 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு முருகேசு நேற்று (12.02.2015) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் யோகலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை-நாவலர் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா வேலுப்பிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், பாலமுரளி (லண்டன்), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 7737**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்கள்

### கந்தன் நடராசா



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தன் நடராசா 11.02.2015 புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், அன்னம்மா, மகாலிங்கம், தங்கவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், யசோதரன் (லண்டன்), சுசிதரன், சுவிந்தன் (உதவி அஞ்சல் அதிபர் - யாழ்ப்பாணம்), சுலக்சனா, நிதர்சன், யனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிளா, சுஜாதா ஆகியோரின் அன்பு மாமனும், அனுஸ்கா, அனிஸ், கவிதன், அபிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.02.2015) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எழுதுமட்டுவாழ், இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாகர்கோவில் வீதி**
**எழுதுமட்டுவாழ் தெற்கு.**
**077 666 9088**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### நாகலிங்கம் தியாகராசா



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தியாகராசா நேற்று (12.02.2015) வியாழக் கிழமை காலமானர்.

அன்னார் நாகலிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், நவரத்தினம்-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், சிவனேசத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராசையா, தம்பிராசா, நல்லமுத்து, தங்கராசா மற்றும் வைத்திலிங்கம் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சற்குணராசா (இலண்டன்), கோசலை (பிரான்ஸ்), விமலா, சண்முகநாதன் (பிரான்ஸ்), அம்பிகை (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் கணேசலிங்கம், செல்வராசா, மாலினி, இரட்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், சதுர்சனா, சுவந்தன், சயூணன், வேந்தன், அயந்தன், சோபிகா, பவித்திரா, அவனீஸ், அனோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2015) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தெல்லிப்பழை வீதி, மாவடி,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி பரமேஸ்வரி கணேசு



பலாலியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கணேசு நேற்று (12.02.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், பிரேமானந்தி (ஆசிரியர், கிளிநொச்சி மகா வித்தியாலயம்) பிரேமதாசன் (சுவிஸ்), மோகன் பிரபு (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், மகாராஜா (ஜானுரவல்ஸ்), சந்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமி யும், ஜெயகொய்சன், ரெரன்சியாயானு, ரெரன்சன், கெசீவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2015) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் திருநகரில் உள்ள அவரது வதிவிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திருநகர் கிளிநொச்சி 077 8480112** — **குடும்பத்தினர்.**

### திருமதி மனோரஞ்சிதம் அருள்ஞானசுந்தரம்

தெல்லிப்பளை 'பாவலர் துரையப்பா வீதியைப் பிறப்பிடமாகவும் 133, செம்மணி வீதியை வசிப்பிடமாகவும் கொழும்பு தெமட்டகொடவினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதம் அருள்ஞானசுந்தரம் நேற்று முன்தினம் (11.02.2015) புதன் கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசமலர் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், வேலுப்பிள்ளை அருள் ஞான சுந்தரத்தின் (JP, முன்னாள் உரிமையாளர், அருள் ரேடர்ஸ், சுன்னாகம்) அன்பு மனைவியும், பிரியதர்சினியின் (மாணவி, 2017 உயிரியல் பிரிவு, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்புத் தாயும், காலஞ்சென்ற அரிகரன் மற்றும் திவாகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), ரவீகரன் (ஆசிரியர், செண். பற்றிக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுஜாதா (சுவிஸ்), வனஜா (சுவிஸ்), உமாவதி (ஆசி ரியர், நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை), காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம், ஞானமணி மற்றும் மகிழ்மலரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.02.2015) வியாழக் கிழமை கொழும்பில் நடைபெற்று.பூதவுடல் பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வே. அருள்ஞானசுந்தரம் (கணவர்) 077 9789207**

# சீனாவின் 'போர்ட்சிற்றி' திட்டம் கைவிடப்படுமா? தொடருமா?

## குழப்பநிலையில் புதிய அரசு; பதில்களும் மழுப்பல் போக்கில்

கொழும்பு, பெப்.13
சீன அரசின் நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் கொழும்பு துறைமுக நகர்த்திட்டம் (போர்ட் சிற்றி) தொடர்பில் புதிய அரசிடம் தெளி வானதொரு நிலைப்பாட்டைக் காண முடியவில்லை. இது விடயத்தில் புதிய அரசு இரட்டை நிலைப் பாட்டைக் கடைப்பிடிக்கின்றது.

குறிப்பாக மேற்படி திட்டம் கைவி டப் படுமா? அல்லது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமா? என்பது தொடர் பில் அரசுக்குள் இருந்து வெவ்வேறு கருத்துகள் வெளிவருகின்றன.

கொழும்பு துறைமுக நகர்த் திட்டம் கைவிடப்படாது என்றும், அதை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங் கியுள்ளது எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தார்.அத்துடன், இத் திட்டத்தால் சுற்றாடலுக்குப் பாதிப் பில்லை என்ற தொனியிலும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதன்பின்னர்,இது விடயம் பற்றி நாடாளுமன்றில், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 'போர்ட் சிற்றி' திட்டம் பற்றி இன் னும் இறுதி முடிவு எடுக்கப்பட வில்லை என்றும், இரு வாரங்க ளில் அறிக்கை கிடைத்த பின்னரே முடிவு எடுக்கப்படும் என்றும் கூறி யிருந்தார்.

இது பற்றி ஆராய்வதற்கு பிரதமர் தலைமையில் ஐவரடங்கிய குழு வொன்று அமைக்கப்பட்டிருந்தது. இந்தக்குழுவின் அறிக்கை வெளி யாவதற்கு முன்னரே அமைச்சர் ராஜித மேற்படி கருத்தை வெளி யிட்டிருந்தார். இந்நிலையில், இத் திட்டத்தை தொடர்வதற்கு சீனாவும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றது. இதற்காக தனது சிறப்புத் தூதுவரை யும் பீஜிங், கொழும்புக்கு அனுப்பி இருந்தது.

அதேவேளை, நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும், ஊடகவியலாளர் மாநாட்டில் போர்ட் சிற்றி விவகாரம் தொடர் பில் பதில் அமைச் சரவைப் பேச்சா ளரும் சபை முதல்வருமான அமைச் சர் லக்ஷ்மன் கிரியல்லவிடம், ஊடக வியலாளர்கள் கேள்விக் கணை களைத் தொடுத்தனர்.

எனினும், அவரிடம் இருந்து நேரடி பதில் கிடைக்கவில்லை. இத்திட்டத் தால் சுற்றாடலுக்கு பாரிய பாதிப்பு இருக்கின்றது என்றும், ஏனைய காரணிகள் குறித்து ஆராய வேண் டும் எனவும் மட்டும் அவர் கருத்து வெளியிட்டார். சுற்றாடலுக்குப் பாதிப் பில்லை என ராஜித தெரிவித் திருந்தாலும், பாதிப்பிருக்கிறது என லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிக்கின் றார்.

மறுபுறத்தில், திட்டத்துக்கான பணி களும் இடை நிறுத்தப்படாமல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனவே, போர்ட் சிற்றி திட்டம் நிறுத் தப்படும் என தேர்தல் காலத்தில் கருத்து வெளியிட்ட எதி ரணி, ஆட்சிக்கு வந்தப்பின்னர், அது பற்றி மீளாய்வு செய்யும் பணி யையே முன்னெடுக்கின்றது.(ற–சி)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஹேமா குமுதினி

கொழும்பு, பெப், 12
மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிய ரசராக ஹேமா குமுதினி விக்கிரம சிங்க நேற்றுமுன்தினம் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலையில் சத் தியப்பிரமாணம் செய்துகொண் டார். ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ரணில் விக்கிரமசிங்க நீதி அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலா ளர் பி.பீ.அபயக்கோன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(ற–10)

# இன்று கூடுகிறது தேசிய நிறைவேற்று அதிகார சபை

யாழ்ப்பாணம், பெப். 13
கடந்த இரண்டு வாரங்களாக இடம் பெறாத தேசிய நிறைவேற்று அதி கார சபைக் குழுக் கூட்டம் இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

மைத்திரிபால தலைமையிலான புதிய அரசு பதவியேற்ற பின்னர், தேசிய நிறைவேற்று அதிகார சபை அமைக்கப்பட்டது. அதில் நாடாளு மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத் தும், பிரதிநிதித்துவப்படுதாத கட்சித் தலைவர்களும் உள்ளடக்கப்பட் டுள்ளனர்.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமைகளில், ஜனாதிபதி மைத்திரி பால, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில், தேசிய நிறை வேற்று அதிகார சபையின் கூட்டம் இடம்பெற்று வருகின்றது. கடந்த 3 ஆம் திகதி, 10 ஆம் திகதிகளில் இடம்பெற வேண்டிய கூட்டங்கள் நடைபெறவில்லை.

இந்த நிலையில் இன்று காலை தேசிய நிறைவேற்று அதிகார சபைக் குழுக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

(ற–5)

### மார்ச்

மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணைகளை மேற் கொண்டது. அதன் வாய்மொழி மூல அறிக்கை கடந்த செப்ரெம்பர் மாத அமர்விலும், எழுத்து மூல மான அறிக்கை எதிர்வரும் மார்ச் மாத அமர்விலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று குறித்த தீர்மானத் தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கு அமைய கடந்த செப்ரெம் பர் மாத அமர்வில் வாய்மொழி மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டி ருந்தது. அடுத்த மாதம் 25 ஆம் திகதி எழுத்துமூல அறிக்கை சமர்ப் பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்தநிலையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய அரசு பதவியேற்றுள்ளது. புதிய அரசு குறித்த விசாரணை அறிக்கையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. பிரே ரணை முன்வைத்த அமெரிக்கா விடமும் இந்தக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாத அமர் விலேயே வெளியிடப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் அலுவலகப் பேச் சாளர் ருபேர்ட் கொல்வில்லிடம், ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வினவியது.

ஆயினும் அவர் அது தொடர்பில் எதுவும் தெரிவிக்காது மௌனம் காத்தார். (ற–5)

### 1000 ஏக்கர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பகுதி களில் மிகப் பெருமளவு காணி களை இராணுவம் அபகரித்துள் ளது. போர் முடிந்து 6 ஆண்டுகள் முடிவடைந்த பின்னரும் அங்கு மீள் குடியமர்வு தடை செய்யப்பட்டிருந் தது. இந்தப் பகுதியைத் தனது கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இரா ணுவம் அங்கிருந்த வீடுகள் மற்றும் கட்டுமானங்களை இடித்தழித்தது. அத்துடன் நிரந்தர எல்லை வேலி ஒன்றையும் அமைத்தது.

அமைக்கப்பட்ட எல்லை வேலிக் குள் 6 ஆயிரத்து 384 ஏக்கர் நிலப் பரப்பு சிறைப்படுத்தப்பட்டது. இது உயர் பாதுகாப்பு வலயம் அல்லது முகாம் பகுதி எனப் பிரகடனப்படுத் தப்பட்டது. அதற்கு அடங்கிய தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணி கள் அனைத்தையும் சுவீகரிக்கப் போவதாக மஹிந்த ராஜபக்ஷ அரசு அறிவித்திருந்தது. அதற்கு வேண் டிய சட்ட நடவடிக்கைகளையும் எடுத்திருந்தது. காணிகளைச் சுவீ கரிப்பதற்கான அறிவித்தலும் ஒட் டப்பட்டது.

அதனை எதிர்த்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உயர் நீதிமன் றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தனர். இந்த நிலை யில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மைத்திரிபால சிறிசேன தலைமை யிலான புதிய அரசு பதவியேற்றது. உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் தமிழ் மக்களிடமே மீளக் கையளிக் கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி யுடனான முதலாவது சந்திப்பி லேயே வலியுறுத்தியிருந்தது.

#### அமைச்சரவை அங்கீகாரம்

மஹிந்த ராஜபக்ஷ அரசால் அப கரிக்கப்பட இருந்த 6 ஆயிரம் ஏக் கர் காணியில் 3 ஆயிரம் ஏக்கரை விடுவிப்பதற்கு எதிர்ப்பு ஏதுமில்லை என்ற முடிவு, மைத்திரி பொறுப் பேற்ற பின்னர் நடந்த முதலாவது தேசிய பாதுகாப்புச் சபைக் கூட் டத்தில் எட்டப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற் கான அமைச்சரவைப் பத்திரத்தை நகர்த்தினார். நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டு காணிகளை விடுவிப்பதற்கு அமைச்சரவை அனு மதியளித்தது.

முதல் கட்டமாக 240 ஏக்கர் காணி மக்கள் பயன்பாட்டுக்கு கையளிக் கப்படவுள்ளது. விடுவிக்கப்படவு ள்ள வளலாயில் மாதிரிக் கிராமம் அமைக்கப்படும் என்று அரசு அறி வித்துள்ளது. அதில் ஆயிரத்து 22 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வுள்ளன. ஒவ்வொரு குடும்பங் களுக்கும் தலா 20 பேர்ச் காணி வழங்கப்படும்.

எஞ்சிய 760 ஏக்கர் படிப்படியாக விடுவிக்கப்பட்டு பொது மக்கள் படிப்படியாக குடியமர்த்தப்படுவார் கள் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இது நூறு நாள் வேலைத் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என் றும் தெரிவித்தார். (உ–5)

### இதுதான்

அந்த 240 ஏக்கர் காணியும், வள லாயைச் சேர்ந்த 224 குடும்பங் களுக்குச் சொந்தமானது. அதிலேயே மாதிரிக் கிராமத் திட்டம் முன்னெ டுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தத் திட்டம் ஆரம் பிக்கப்பட்டது. வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங் களில் தங்கியிருந்த குடும்பங்களை இந்த மாதிரிக் கிராம திட்டத்தில் குடி யேற்றி மீள்குடியமர்வை பூர்த்தி யாக்குவதே அப்போதைய அரசின் திட்டமாக இருந்தது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட சில நாள்களிலேயே மீள்குடியேற்ற அமைச்சு, குறித்த காணிகள் தனி யாருக்கு உரியவை. அதனை அரசு சுவீகரிக்காமல் மாதிரிக் கிராமம் அமைக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட முடியாது என்று தெரி வித்தது. அதனால் திட்டம் இடை நிறுத்தப்பட்டது. மீண்டும் கடந்த வருடம் மே மாதத்தின் இறுதிப் பகுதி யில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. மீள்குடியேற்ற அமைச்சால் வழங்கப்பட்ட நிதியைப் பெற்று அது செயற்படுத்தப்பட்டது. 240 ஏக்கர் பிரதேசத்திலுமுள்ள காணிகளின் எல்லைகள் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. அந்தப் பிரதேசம் முழுவதும் துப்புரவு செய் யப்பட்டது.

அப்போதைய பாதுகாப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி ஆகியவற் றின் செயலாளராக இருந்த கோத்த பாய ராஜபக்ஷவின் வழிகாட்ட லின் கீழ் மாதிரிக் கிராமத்துக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டது. முதல் கட்டமாக 300 குடியிருப்புக்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது.

பின்னர் நலன்புரி நிலையங்களி லுள்ள மக்களில் மேற்படி பிரதேசத் தில் குடியமர்வதற்கு விருப்பமான மக்களின் விவரம் திரட்டப்பட்டது. 4 ஆயிரம் குடும்பங்கள் வரையில் நலன்புரி நிலையங்களில் வாழ்கின் றன.ஆனாலும் 96 குடும்பங்கள் மாத்திரமே குடியமர்வதற்கு சம் மதித்தன. அதனையடுத்து திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இவ்வாறு கைவிடப்பட்ட திட்டத்தை புதிய அரசு மீண்டும் முன்னெடுக்க வுள்ளது.

(ற–5)

### இறுதிப்போரில்

"முன்னைய அரசைப் போல, எத் தகைய மீறல்களும் நடக்கவில்லை என்று மறுக்கும் நிலையில் நாங் கள் இல்லை. அத்தகைய மீறல்கள் இடம்பெற்றிருப்பதாக நாங்கள் நம்புகின்றோம். இலங்கையில் மனித உரிமைகளை மீறியவர் களை பொறிமுறை ஒன்றின் ஊடாக நீதியின் முன் நிறுத்தப்படுத்துவதை, உறுதிப்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்."– என்று மங்கள சமரவீர கூறியுள்ளார்.

"அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன், எமது உள்நாட்டுப் பொறிமுறை நடவடிக்கைக்காக அதனை எமது பார்வைக்கு அனுப்ப முடியும் என்று நம்புகிறோம். எமது பொறிமுறை உருவாக்கப்படும் வரை, ஐ.நா விசாரணை அறிக்கையை வெளி யிடாமல் தடுத்து வைத்திருக்கக் கூடும் என்று நம்புகிறோம். "– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஓகஸ்ட் மாதம் வரை அறிக்கை தாமதிக்கப்படலாம். குற்றச்சாட்டு கள் குறித்து விசாரிக்கவும், குற்ற வாளிகளை நீதியின் முன் நிறுத் தவும் உள்நாட்டுப் பொறிமுறை இரண்டு மாதங்களுக்குள் இலங்கை அரசு உருவாக்கும்"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(5)

### ரயில்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, வடக்கு மாகாணத்தில், மன்னார் மற்றும் யாழ்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் அவர் பங்கெடுக்க வுள்ளார். இந்திய அரசின் நிதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், தலை மன்னார் – மதவாச்சி ரயில் பாதைப் புனரமைப்பின், தலைமன்னார் – திருகேதீஸ்வரம் வரையிலான ரயில் சேவையை அவர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதன்பின்னர், யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்திப்புக்களில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் – வடக்கு மாகாண சபையினரையும் அவர் சந்திப்பார். இந்தச் சந்திப்புக் களை முடித்துக் கொண்டு கிழக்கு மாகாணத்தின் திருகோணமலைக்கு அவர் செல்வார். திருகோணமலை யில், திருகோணேஸ்வரம் கோயி லுக்குச் சென்று அங்கு வழிபாடுகள் மேற்கொள்வார். (ற–

### அரசிடம்

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட மீள்குடியேற்றத் திட்டத்தை புதிய அரசிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. நீதிமன்றத்துக்கு வழங்கிய ஆவ ணத்தின் பிரகாரம் 6 ஆயிரத்து 150 குடும்பங்களையும் முதல் கட்டத் தில் குடியமர்த்த வேண்டும்"– என் றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"புதிய அரசால் முன்வைக்கப்பட் டுள்ள திட்டம் ஏற்கனவே தமிழ் மக் களாலும், எங்களாலும் நிராகரிக் கப்பட்ட விடயம். ஒரே இடத்தில் மக்கள் எல்லோரையும் குடியமர்த்து வது என்பதை ஏற்றுக்கொள்ள முடி யாது. ஜனாதிபதித் தேர்தலின் போது, மக்களை அவர்களது சொந்த இடங் களில் குடியமர்த்துவோம் [illegible]றே தெரிவித்திருந்தனர். இப்போது, அந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தாது வேறு இடங்களில் குடியமர்த்த முயற் சிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத – தேர்தல் வாக்குறுதியை மீறிய செயலாகும். "– என்று அவர் குறிப் பிட்டார்.

"ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட் டதை வரவேற்கின்றோம். அந்த ஆயிரம் ஏக்கரிலும், அந்த நிலத் துக்குச் சொந்தமானவர்களைக் குடியமர்த்தினால் சரியானது. 2012 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்துக்கு, அரசு ஆவணம் ஒன்றை சமர்பித் திருந்தது. அதில் 6 ஆயிரத்து 150 குடும்பங்களைச் சேர்ந்த, 23 ஆயி ரம் பேரை உடனடியாக மீள்குடிய மர்த்த முடியும் என்றும் அதற்குரிய அவர்களது நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் தெரி விக்கப்பட்டிருந்தது. இதனையே செய்ய வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந் தோம். இதனை முதல் கட்டமாகச் செய்யுங்கள். இதன் பின்னர் எஞ் சிய நிலங்களை, பாதுகாப்புத் தேவை களைப் பொறுத்து விடுவிக்கலாம். "– என்றும் அவர் வலியுறுத்தினார்.

"குறுகிய இடத்தில் சகல மக்களை யும் குடியமர்த்த எடுக்கும் நடவ டிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு எதிர்க்கின்றது"– என்று அவர் குறிப்பிட்டார்.

(ற–5)

# படையினர் வசமுள்ள அரச காணியை விடுவிக்க உறுதி

**கிண்ணியா பஸ் நிலையம் அமைப்பதற்கு போக்குவரத்து பிரதி அமைச்சர் நடவடிக்கை**



திருகோணமலை, பெப்.13
இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் இருந்த அரச காணியை உடனடியாக விடுவிக்க இராணுவக் கட்டளைத் தளபதி உறுதியளித் ததை அடுத்து அங்கு கிண்ணியா பஸ் நிலையம் அமைப்பதற்கு உள் நாட்டுப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் எம். எஸ். தௌபீக் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தெடர்பில் அவர் திருகோணமலை மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் மஞ்சுலவைச் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது திரு கோணமலை – மட்டக்களப்பு வீதியில்கடந்த சில வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணியை விடுவிக்குமாறுஅமைச்சர்கோரிக்கை விடுத்துள்ளார். இதனை ஏற்றுக் கொண்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் மஞ்சுல குறித்த காணியை உடன் விடுவிப்பதாக தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தலை மையிலான குழுவினர் பிரதியமைச்சர் தௌபீக்குடன் குறித்த காணியை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த அரச காணியில் கிண்ணியா பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு முதலமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார். (வ–10)

## வலைகளுடன் நால்வர் கைது

வாழைச்சேனை, பெப்.13
வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் வாழைச் சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திப்பட்டுமுன தெரிவிக்கையில், 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆழ்கடல் வலைகளுடன் நேற்று முன்தினம் இருவரைக் கைது செய்துள் ளோம்.

வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே 2700 அடி நீளமுடைய வலைகளை விற்பனை செய்துள்ளார்.

அந்த வலைகள் திருட்டு வலைகள் என்ற சந்தேகத்தில் வலையை விற்ற ஒருவரையும் வாங்கிய மூவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய துள்ளோம். இந்த வலை வியாபாரத்துடன் இன்னும் பலர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம் என்று தெரிவித்தார்.

இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ–10)

## தென்மராட்சியில் மாற்றாற்றல் உடையோருக்கு மலகூடங்கள்

தென்மராட்சி, பெப்.13
தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கு வீடு மற்றும் மலகூடம் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண சபையின் நிதி உதவியுடன் இந்தத் திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது. தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மாற்றுத் திறனாளிக்கான வீடமைப்புத் திட்டமும் தலா ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாசெலவில் மலகூடங்களும் அமைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்கானவிண்ணப்பப்படிவங்களும் கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (வ–9)



## பிணைத்து விடப்படும் மாடுகள் வீதியால் பயணிப்போர் சிரமம்

வவுனியா, பெப்.13
இரு மாடுகளை ஒரு கயிற்றில் பிணைத்து விடுவதால் வவுனியாவில் வீதியால் செல்லும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர்.

வவுனியா மன்னார் வீதி, பூந்தோட்ட வீதி, ஏ–9 வீதிகளில் இரண்டு மாடுகளை ஒன்றாக கட்டிவிடுவதால் அவை அங்கும் இங்குமாறு வீதிகளுக்கு குறுக்காகச் செல்வதால் வாகனங்களைச் செலுத்துவோர் மற்றும் பயணிகள் பலரும் சிரமத்துக்கு உள்ளாகி விபத்துக்களைச் சந்திக்கின்றனர்.

இவ்வாறு கட்டாக்காலிகள் ஒரு கயிற்றில் பிணைக்கப்பட்டு விடுவதைத் தவிர்க்குமாறும் அவற்றின் உரிமையாளர் உரிய் வகையில் வீடுகளில் பராமரிப்பதன் மூலம் தேவையற்ற விபத்துக்கள், வாகனங்கள் வீதிகளில் கால தாமதத்துடன்பயணித்தல், வீதிகளில்நெருக்கடிகள், கட்டாக்காலிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க முடியும்.

சம்பந்தப்பட் உரிமையாளர்களும் இதனைக் கட்டுப்படுத்தும் நகரசபையினரும் • இதனைக் கட்டுபடுத்த முன்வருமாறு பயணிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ–402)

## மாற்றுவலுவுடையோருக்கு கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

தென்மராட்சி, பெப்.13
தென்மராட்சி பிரதேசத்தில் வன்செயல் மற்றும் பிறப்பிலிருந்து மாற்றுவலுவுள்ளோருக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இரு கண்களும் பார்வை இழந்தவர்கள், இரு காதுகளின் செவிப்புலன் இழந்தவர்கள், வாய்பேச முடியாதவர்கள், முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நிலையில் எழுந்து நடமாட முடியாதவர்கள், தொடர்ச்சியான மன நிலை பாதிக்கப்பட்டவர்கள், வன்செயல்களின்போது கால்களை இழந்தவர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பப்படிவங்களை தகுதிவாய்ந்த அரச மருத்துவ அதிகாரியின் பரிந்துரையுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டுக்குரியவரவுசெலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## பணியிழந்த ரயில் கடவை பணியாளர்கள் முதலமைச்சருடன் ஞாயிறன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.13
வடபகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பணியிழந்த ரயில் கடவைப் பாதுகாவலர்களை வட மாகாண முதலமைச்சர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். ரயில் நிலை யத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

உள்நாட்டுப் போர் காரணமாக பணியிழந்த அவர்கள் மீண்டும் ரயில் • சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் பணிக்கு அமர்த்தப்படவில்லை. அத்துடன் அவர்களுக்கான ஓய்வூதியமும் வழங்கப்படுவதில்லை.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து தமது பணி தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகை யில், “வட மாகாண முதலமைச்சர் எங்கள் பணி தொடர்பில் உரிய நடவடிக்கைஎடுப்பதாகத்தெரிவித்துள்ளார். 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொடிகாமம் முதல் காங்கேசன்துறை வரை 410 இற்கும் அதிகமானவர்கள் ரயில் கடவைப் பாதுகாவலர்களாக பணியாற்றியிருந்தோம். நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக நாம் பணியிழந்து தற்போது ஓய்வூதியமும் இன்றியுள்ளோம். இந்த நிலையில்முதலமைச்சருடையபேச்சு சாதகமாக உள்ளதை அவதானித்தோம். எனவே குறித்த காலப்பகுதியில் பணி யாற்றிய வட மாகாணத்தில் உள்ள ரயில் கடவைப் பாதுகாவலர்கள் அனைவரும் ஒன்று கூட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

> உள்நாட்டுப் போர் காரணமாக பணியிழந்த அவர்கள் மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் பணிக்கு அமர்த்தப்படவில்லை. அத்துடன் அவர்களுக்கான ஓய்வூதியமும் வழங்கப்படுவதில்லை.

எனவே குறித்த காலப்பகுதியில் பணியாற்றியவர்கள் ஆவணங்கள் இருப்பின் ஆவணங்களுடனும் அவை இல்லாவிட் டாலும் நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமை காலை9 மணிக்கு யாழ்.ரயில்நிலையத்துக்கு வருகை தரவேண்டும்'' என்று முதலமைச்சர் கூறியதாகத் தெரிவித்தனர். (வ–10)

## திருமறைக் கலாமன்றத்தின் மாசித்திங்கள் ‘பொற்தூறல்’

யாழ்ப்பாணம், பெப்.13
பொன் விழா ஆண்டை முன்னிட்டு கடந்த மாதம் முதல் திருமறைக் கலாமன்றம் ஆரம்பித்துள்ள ‘பொற்தூறல்’ என்னும் மாதாந்த நிகழ்ச்சித் தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இல–286,பிரதான வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவரும், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து சிறபிக்க வுள்ளார்.

திருமதி சிவதர்ஷிகா ஜெயானந்தன் வழங்கும் இசைக் கச்சேரியும், கொக்குவில் கலாபவன மாணவிகள் வழங்கும் நடனங்களும் நிகழ்வில் இடம் பெறும்.

இந்தநிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (வ–23)

## உரிமை கோரப்படாத நிலையில் இரு மாடுகள் சம்மேளனத்தில்

அச்சுவேலி, பெப்.13
அச்சுவேலி தெற்கில் கட்டாக்காலி மாடுகளால் பயிர்களுக்கு சேதம் ஏற்படுகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கட்டாக்காலியாக நடமாடிய போது பிடிக்கப்பட்ட மாடுகளில் 2 மாடுகள் உரிமை கோரப் படாமல் விவசாய சம்மேளன நிர்வாகிகளின் பாதுகாப்பில் உள்ளன.

அச்சுவேலி தெற்கில் இரவு வேளையில் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் விளை பயிர்களை சேதம் செய்து விவசாயிகளுக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த வகையில் நடமாடிய மாடுகளில் ஏழுமாடுகள் ஒருநாள் இரவு இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டன. அதில் ஐந்து மாடுகள் உரிமையாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டன.

2 மாடுகள் உரிமை கோரப் படாமல் அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளன நிர்வாகிகளின் பாதுகாப்பில் உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாடுகளின் உரிமையாளர்கள் விவசாய சம்மேளன நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (வ–11)

# இம்முறை இல்லை சூடு வைப்பு

## தென்மராட்சி வயல்களில் வெள்ளம் தேங்கியதால்



தென்மராட்சி,பெப் 13
தென்மராட்சி தெற்கு தனங்கிளப்பு, மறவன்புலோ, நுணாவில் கிழக்கு, மேற்கு, சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் சூடு வைப்பு இடம்பெறவில்லை.

குறுகிய கால இனமான ஆட்டக்காரி எனப்படும் நெல் உற்பத்தி செய்யப்பட்ட பெரும்பாலான வயல்களில் மழை வெள்ளம் தேங்கிக் காணப்பட்டதால் அறுவடை செய்து நெல்லை வயல்களில் காய வைக்க முடியாத நிலை உள்ளது. இதனால் வீதி அருகில் காணப்படும் நெற்பயிர்கள் இயந்திரம் மூலம் அறுவடை செய்யப்பட்டு வீடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இயந்திரம் செல்ல முடியாத வயல்களில் நெல் அறுவடை செய்யப்பட்டு வீதிக்குக் கொண்டு வரப்பட்ட வாகனங்களில்ஏற்றிக்கொண்டுசெல்லப்பட்டது.

ஏனைய நெல் இனங்கள் விதைக்கப்பட்ட வயல்களில் பயிர்கள் முற்றாத நிலையில் காணப்படுவதால் இன்றும் அறுவடை ஆரம்பமாகவில்லை. இந்த வயல்களிலும் ஓரளவு மழை வெள்ளம் காணப்படுகிறது.

இதேவேளை, இடையிடையே மழை பெய்து வருவதால் நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் நெல் பயிரிடப்பட்ட ஆயிரத்து 681 ஹெக்டேயர் வயல்களில் சுமார் 700 ஹெக்டேயர் வயல்களில் சிறுதானியப் பயிர்கள் பயிரிட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கைதடி கமநல சேவை நிலையத்தினர் தெரிவித்தனர்.

போதிய பாதுகாப்பின்மையால் கால்நடைகளால் பாதிப்பு ஏற்படலாமென்பதால் சில பகுதிகளில் சிறுதானியப் பயிர்கள் பயிரிட விவசாயிகள் முன்வரவில்லையெனவும், அடுத்த வருடங்களில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நெல்வயல்களில்தேங்கியுள்ளமழை வெள்ளம் படிப்படியாகக் குறைந்து வருவதாகவும், குளங்களை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த வயல்கள் தவிர்ந்த ஏனைய வயல்களில் மழை வெள்ளம் குறைந்துள்ளதாகவும், காலபோக நெற்செய்கை முடிவுறும் வேளையில் அனைத்து வயல்களிலும் காணப்படும் ஈரலிப்புத் தன்மைக்கேற்ப சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் ஒட்டுவெளி,கரம்பகம்,எழுதுமட்டுவாழ்,வரணி, கல்வயல், சரசாலை, மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த நெல் அறுடை செய்யப்பட்ட வயல்களில் சிறுதானியப் பயிர்களுக்கான விதைப்புகள் நெற்செய்கையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கமநல சேவைகள் நிலையத்தினர் கூறினர்.(த-9)

# வெதுப்பக உற்பத்திகளுக்கு விலைக் குறைப்பு இல்லை

## பாண் மட்டுமே குறைந்தது



கொடிகாமம், பெப்.13
வெதுப்பகங்களில் பாணுக்கு மட்டுமே விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படவில்லை என்றும் நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சில அத்தியாவசியப் பொருள்களுக்கான விலை குறைப்பு செய்யப்பட்டன. அதில் கோதுமைமாவின் விலையும் கிலோவுக்கு 12 ரூபாவால் குறைக்கப்பட்டது.

இதனையடுத்து பாணின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு ஒரு இறாத்தல் பாண் 55 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

ஆனால் வெதுப்பகங்களின் இதர உற்பத்திகளான பணிஸ் வகைகள், கேக் வகைகள், வறுத்த பிஸ்கட்டுகள் ஆகியவற்றுக்கான விலைகள் இதுவரை குறைக்கப்படவில்லை.

இது குறித்து வாடிக்கையாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி அரசஓய்வூதியர் வை.கதிர்காமு கருத்துத் தெரிவிக்கையில், புதிய அரசு பதவிக்கு வரும்போது முதலாளிகளின் சட்டைப் பொக்கற்றுகளில் பணம் நிரம்புவதைத் தடுத்துச் சாதாரண ஏழை மக்களின் பொக்கற்றுகளை நிரம்பச் செய்வோம் என்று கூறியது. ஆனால் இன்றும் முதலாளிகளின் பொக்கற்றுகள் தான் நிரம்புகின்றன. இதற்கு வெதுப்பக உரிமையாளர் சங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்–என்றார். (த-105)

# பொலிஸ் நிலையம் அகன்றும் அகலாத காப்பரண்கள், வேலிகள்

## வெள்ளம் தேங்கி டெங்கு பரவும் அபாயம்



வவுனியா, பெப் 13
வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையம் அகற்றப்பட்டபோதும் அதன் காப்பரண் அகற்றப்படாமையினால் பூந்தோட்டம் லயன்ஸ் கழக மைதானத்தில் வெள்ளநீர் தேங்கி டெங்கு நுளம்பின்பெருக்கம்அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் கழக மைதானத்தில் 5 ஆண்டுக்கு மேலாக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. இதனால் மைதானத்தின் ஒரு பகுதியில் இளைஞர்கள் விளையாட முடியாத நிலை இருந்து வந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையம் கடந்த வாரம் அகற்றப்பட்டது. எனினும் அங்கு அமைக்கப்பட்டிருந்த காப்பரண், முட்கம்பி வேலிகள் எதுவும் இதுவரை அகற்றப்படவில்லை.

இதனால் அண்மையில் பெய்த மழையினால் மைதானத்தில் வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது. இந்த மைதானத்துக்கு அருகில் முன்பள்ளி ஒன்றும் உள்ளது.

அப்பகுதியில் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் ஏற்பட்டுள்ளதால் முன்பள்ளி மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே மழைநீர் தேங்காத வகையில் மைதானத்தில் உள்ள காப்பரண்களை அகற்றிக் கால்வாய்களை அமைத்து உதவுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# தாக்குதல்களில் இருவர் காயம்

அளவெட்டி,பெப் 13
மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதால் மருமகன் அடிகாயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி இரவு 7 மணியளவில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாமனும் மருமகனும் அன்று பகல் முரண்பட்டுக் கொண்டனர். பின்னர் இரவு மருமகன் மாமனாரிடம் சென்று, ஏன் என்னை கண்டிக்கிறீர்கள் எனக் கேட்டபோது மாமன் மருமகனின் தலையிலும், முகத்திலும், உடம்பிலும்பலதடவைகள்கையால் குத்தியும் அடித்தும் காயப்படுத்தியதால் மூக்கால் இரத்தம் வழிந்த நிலையில் அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நமேஸ்குமார்– ஜேம்சன் (வயது –15) என்பவரே காயமடைந்து சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, 9 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் மகளுக்கும் மருமகனுக்கும் ஏற்பட்ட குடும்பச் சண்டையின்போது சமரசம் பேசிய மாமியாரை மருமகன் தாக்கினார். மாமியார்கைமுறிந்தநிலையில்தெல்லிப்பழை ஆதார வைத்திய சா[illegible]யில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-[illegible])

# விதி மீறிய 30 பேருக்கு 1,88,000 ரூபா அபராதம்

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த மூன்று நாள் அமர்வுகளில் மோட்டார் போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 30 பேருக்கு ஒரு லட்சத்து 88 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த ஐந்தாம் திகதி 11 பேருக்கு 50 ஆயிரம் ரூபாவும், 6ஆம் திகதி 12 பேருக்கு 85 ஆயிரம் ரூபா[illegible], கடந்த 10ஆம் திகதி 7பேருக்[illegible]3 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டன.

கடந்த 10ஆம் திகதி போக்குவரத்து விதிமுறைகளை மீறிய ஏழு பேருக்குஎதிராகசாவகச்சேரிபொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையில் வாகனங்களைச் செலுத்தி வந்த 7பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கு 10 ஆயிரத்து 500ரூபா மற்றும் 7 ஆயிரத்து 500ரூபா வீதமும், மூவருக்கு 8 ஆயிரத்து 500ரூபா, 5ஆயிரத்து 500 ரூபா, 3 ஆயிரத்து 500 ரூபா எனவும் அபராதம் விதிக்கப்பட்டது. (த-9)

# 100 நாள் வேலைத் திட்டத்தில் அஞ்சலகங்களை தரமுயர்த்துக

## மாந்தை மேற்கு மக்கள் கோரிக்கை

100 நாள் வேலைத் திட்டத்தில் மன்னார் மாவட்ட உப அஞ்சல் அலுவலகங்களை தரமுயர்த்துமாறு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்பிரிவைச்சேர்ந்தமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போர்க்காலத்தில் மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் உப அஞ்சல் அலுவலகமே இயங்கி வந்துள்ளது. எனினும் போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு 5 வருடங்கள் கடந்தும் ஏ–32 பிரதான வீதியில் மன்னார் முதல் பூநகரி வரையான பகுதிகளில் இயங்கி வரும் உப அஞ்சல் அலுவலகங்கள் தரமுயத்தப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஒரு பிரதான அஞ்சல் அலுவலகமும், 7 அஞ்சல் அலுவலகங்களும், 34 உப அஞ்சல் அலுவலகங்களும் காணப்படுகின்றன. இதில் ஏ–32 வீதியில் அமைந்துள்ள அனைத்துத் தபால் நிலையங்களும் உப அஞ்சல் அலுவலகங்களாகவேகாணப்படுகின்றன.

குறித்த உப அஞ்சல் அலுவலங்கள் தரமுயர்த்தப்படாமையால் அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக 5 ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரையான பணத்தை மட்டுமே உப அஞ்சல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளதாகவும்,10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வெளிநாடுகளில் இருந்து இப்பகுதியிலுள்ளமக்களுக்குப்பணம் அனுப்பி வைக்கப்பட்டாலோ அல்லது பொதிகள் அனுப்பப்பட்டாலோ அதனைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் மன்னாருக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தில் இதனை உள்வாங்கி இங்குள்ள உப அஞ்சல் அலுவ்லகங்கலளத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(த)

# வடக்குக் கல்வியை மேம்படுத்தத் திட்டம்

## இம்முறை அதிக நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 13

வடமாகாணத்திலுள்ள ஆரம்பக் கல்வி மற்றும் இரண்டாம் நிலைக் கல்விப் பாடசாலைகளின் சிறுதிருத்தத்துக்கு என வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் இந்த வருடத்துக்கு 68 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

2 ஆம் நிலைக் கல்விப் பாடசாலைகளின் கட்டடச் சிறு திருத்தத்துக்கு என 49 மில்லியன் ரூபாவும், ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் கட்டட சிறு திருத்தத்துக்கு என 19 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்குக் கடந்த வருடம் 46 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருடத்துக்கு 22 மில்லியன் ரூபா அதிகரித்து 68 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் மின்சாரம், நீர்க் கட்டணம் என்பனவற்றுக்கு 19.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கென கடந்த வருடம் 11 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் பல பாடசாலைகளில் திறக்கப்பட்ட நிலையில் இந்த நிதி போதாமையால் இந்தத் தொகை குறைந்தது 4 மடங்காகவேனும் அதிகரிக்கப்படவேண்டும்.

புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கொடுப்பனவுக்குக் கடந்த வருடம் 26 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வருடம் அது 30 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் மத்திய அரசின் பாதீட்டில் புலமைப்பரிசில் தொகை அதிகரித்து வழங்கப்படவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளதால் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் நிதி தேவைப்படுகிறது. அதாவது 500 ரூபாவிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் அந்த ஒதுக்கீடு 3 மடங்காக அதிகரிக்கப்படவேண்டும்.

மாகாணக் கல்வித் திணைக்கள நிர்வாகச் செலவினங்களுக்கு 418 மில்லியன் ரூபாவும், விசேட தேவையுடைய மாணவர்களின் மீண்டெழும் செலவுக்கு 8.5 மில்லியன் ரூபாவும், முறைசாராக் கல்விப் பிரிவுக்கு 11 மில்லியன் ரூபாவும் கல்வித் திட்டமிடல் அபிவிருத்திக்கு 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகளின் தரமான உள்ளீட்டு நடவடிக்கைகளுக்கு 194 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்குக் கடந்த வருடம் 169 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் கல்விச் செயற்பாடுகளுக்கான தர உள்ளீடுகள் ஓரளவுக்கு வழங்கப்பட முடியும். பாடசாலை மாணவர்களுக்கிடையே தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் வடக்கு மாகாணம் 9 ஆவது இடத்திலிருந்து படிப்படியாக முன்னேறி கடந்த வருடம் 5 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-4)



தேசிய மதங்களின் பேரவையின் ஏற்பாட்டில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மீளக் குடியேறிய – பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்காக 6 லட்சம் ரூபா பிரதேச செயலாளர் எஸ். ஸ்ரீமோகனனிடம் யாழ். மாவட்ட இணைப்பாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகத்தினால் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், உதவி பிரதேச செயலாளர் பா.பிரபாகரன், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் உறுப்பினர் சு.பரமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-86)

# உருளைக் கிழங்கின் விலை பெரு வீழ்ச்சி

அச்சுவேலி, பெப்.13

யாழ். மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், அதன் விற்பனை விலை கிலோ ஒன்று 60 ரூபாவுக்கு கீழ் இறங்கி இருப்பதால் உற்பத்திச் செலவைக் கூட ஈடு செய்ய முடியாமல் இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் நடுகை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு கடந்த வாரம் தொடக்கம் அறுவடை செய்யப்படுகின்றது. இந்த கிழங்கு தம்புள்ளை மத்திய சந்தையிலும், கொழும்பிலும் கிலோ ஒன்று 58 ரூபாவுக்குக் குறைந்த விலையிலேயே விற்கப்படுகின்றது. இந்த நிலையில் உற்பத்திச் செலவைத் தானும் பெற்றுக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கடந்த புதன்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு கவலை தெரிவிக்கப்பட்டது.

விவசாய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ். மாவட்ட சமாசத்தின் பொருளாளர் இ.ராதா கருத்துரை வழங்குகையில்;

உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளை அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கைவிட்டுவிட்டனர். புதிய ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டத்தில் கொள்வனவு விலை கிலோ ஒன்றுக்கு 80 ரூபா என அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த அறிவிப்பின் பிரகாரம் எதுவும் நடைபெறவில்லை. நாங்கள் அறிக்கை தயாரித்ததும் சமர்ப்பித்ததும் தான் மிச்சம். செயல்முறையில் ஒன்றும் இல்லை. இந்த நிலையில் விவசாயிகள் எதிர்காலத்தில் உருளைக்கிழங்குச் செய்கையில் நாட்டம் கொள்ள மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

தற்பொழுது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு கிலோ 60 ரூபாவுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதிலும் குறைந்த விலையில் 55 – 58 ரூபாவுக்கே யாழ். மாவட்டக் கிழங்கு விலை போகின்றது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை கிழங்கின் விளைச்சல் கணிசமான அளவு இருந்தபோதிலும் உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கின் விளைச்சல் மிகக் குறைவு எனக் கூறப்பட்டது. கணிசமான அளவு உள்நாட்டு விதை கிழங்கும் நடுகை செய்யப்பட்டது.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த விதை உருளைக்கிழங்கு 50 கிலோ கொண்ட பொதி 11 ஆயிரத்துக்கு மேற்பட்ட விலையில் விவசாயிகள் கொள்வனவு செய்து நடுகை செய்திருந்தனர்.

(த-11)

## குறையவில்லை சிமெந்து விலை

அச்சுவேலி, பெப்.13

யாழ்.குடாநாட்டில் சிமெந்தின் விலையை குறைப்பதற்கு வர்த்தகர்கள் மறுத்து வருவதால் கட்டுமானப் பணிகள் தாமதமடைந்துள்ளன.

இதனால் கட்டுமானப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேலை இழந்த நிலையில் இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

வரவு-செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை குறைப்புச் செய்யும்போது சிமெந்தின் விலையும் குறைக்கப்பட்டது. சிமெந்துப் பை ஒன்றின் விலை 90 ரூபாவால் குறைக்கப்பட்டது.

குடாநாட்டில் வர்த்தகர்கள் சிமெந்தின் விலையைக் குறைப்புச் செய்யாமல் கூடிய விலையில் விற்பனை செய்வதால் உள்ளூரில் கட்டுமானப் பணிகள் பாதிப்படைந்துள்ளன. கட்டுமான பணிகளில் ஈடுபட்டு வந்த பணியாளர்களும் வேலை இழந்த நிலையில் உள்ளனர்.

சிமெந்து வர்த்தகத்தில் ஈடுபடுவோர், குறைக்கப்பட்ட விலையில் சிமெந்து வந்து சேரவில்லை. அதிக விலையில் கொள்வனவு செய்ததை விலை குறைக்க முடியாது எனக் கூறுவதால் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவோர் விலை குறைப்பை எதிர்பார்த்து வேலைகளை இடைநிறுத்தி வைத்துள்ளனர்.

(த-11)

# முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் முல்லைத்தீவில் கவனவீர்ப்பு



முல்லைத்தீவு, பெப். 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியைகள் தமக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரி கடந்த 10ஆம் திகதி காலை கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.

சுலோகங்களை ஏந்தியவாறு மிக அமைதியான முறையில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கட்டடத் திறப்புவிழாவுக்கு வருகைதந்த உள்நாட்டலுவல்கள் மற்றும் கடற்தொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவை நேரில் சந்தித்துத் தமது பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், இது குறித்து உரிய அதிகாரிகளுடன் பேசி விரைவில் நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறேன் – என்றார்.

(த)

# நன்னீர்த் திட்டத்துக்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் கட்சி

யாழ்ப்பாணம், பெப். 13

கடல் நீரை நன்னீராக்கும் செயற்திட்டத்தை மருதங்கேணிப் பகுதியில் முன்னெடுப்பதை எதிர்க்குமாறு அந்தப் பகுதி மக்கள், ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களால் தூண்டிவிடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் கடந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த அமர்வில், சுன்னாகம் கழிவு ஒயில் பிரச்சினை தொடர்பில் விசேட விவாதம் இடம்பெற்றது.

இதன்போது, சுன்னாகம் பிரதேசத்தில் கழிவு ஒயில் கலப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாகக் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும், அதற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் செயற்திட்டம் மருதங்கேணிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்ததையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சசுகிர்தன், இதன்போது மருதங்கேணிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மேற்படி செயற்திட்டம் தொடர்பில் அங்குள்ள மக்களைச் சிலர் பயப்படுத்தியுள்ளனர். அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்தவர்களால், அங்குள்ள மக்கள் அழைக்கப்பட்டு, மேற்படி கடல் நீரை நன்னீராக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் அதனூடாக வெளியேற்றப்படும் உப்புக் கழிவு மருதங்கேணிப் பிரதேசத்திலேயே கொட்டப்படும். அவ்வாறு கொட்டப்பட்டால் மீன்பிடிக்கு அது பாதிப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்த மக்கள் இந்தத் திட்டத்தை எதிர்க்குமாறும் தூண்டப்பட்டுள்ளனர். எனவே, மேற்படி திட்டம் தொடர்பில் பொதுமக்களுக்கு உரிய வகையில் விழிப்புணர்வு மேற்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

(த-5)

# 3000 புசல் விதை நெல் குடாவில் கொள்வனவு

## விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாண்ம்,பெப்.13

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் 3 ஆயிரம் புசல் விதை நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

தற்போது குடாநாட்டில் பெரும் போக நெற்செய்கையின் அறுவடைப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. இந்தச் சமயத்தில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து குறைந்தது 3 ஆயிரம் புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்யச் சங்கம் முடிவெடுத்துள்ளதாகச் சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தரார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளிடம் இருந்து முதலில் நெல்லின் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தித் தரமான நெல் என உறுதிப்படுத்திய பின்னரே அது பெற்றுக் கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் இந்த விதை நெல் இந்த ஆண்டின் பெரும்போக நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்படும்.

இந்த நெல்லை உரிய முறையில் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2014ஆம் ஆண்டு போகத்துக்கென ஆயிரத்து 942 புசல் விதைநெல்லைச் சங்கம் விவசாயிகளுக்கு விநியோகித்திருந்தது.

கடந்த ஆண்டில் போதிய விதை நெல் இல்லாமையினால் விவசாயிகளுக்கு அதனைத் தாராளமாக விநியோகிக்க முடியாதநிலை ஏற்பட்டது. இதனால் இந்த ஆண்டு நெற்செய்கைக்கெனக் கூடுதலான விதைநெல்லை கொள்வனவு செய்யவும் சங்கம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது–என்றார்.

(த-17)

# மாணவர்கள் அனுமதியில் அநீதியாயின் முறையிடுக

## கல்வி அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 13
பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல் தொடர்பில் பல்வேறுவேண்டுகோள்களைக்கல்வி அமைச்சுக்குக் கொண்டு வருவது தொடர்கிறது. அத்தகைய வேண்டுகோள்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம்என்று கல்வி அமைச்சர் அல்லது வேறு அலுவலர்களினால் அதிபர்களுக்குக் கடிதம் வழங்கப்படமாட்டாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அவ்வாறான கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கல்விஅமைச்சுக்குவருவது வீண் என்று கல்விச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கும் முறையில் யாதேனும் அநீதி இழைக்கப்பட்டிருக்கும் சமயத்தில் அத்தகைய முறைப் பாட்டைச் செய்வதற்காக எதிர் வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள் ளது. அந்த முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் விசேட கரும பீடங்கள் பல எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி வரை வேலைநாள்களில் திறந் திருக்கும். அந்த வேண்டுகோள்கள் மற்றும் முறைப்பாடுகள் யாவற்றையும் ஆய்வு செய்து உரிய தீர்வு வழங்கப்படும். அவ் வாறான தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும். அதற்கு அப்பாலான வேறு தீர்மானத் தைக் கல்வி அமைச்சரோ அல்லது கல்விச் செயலாளரோ எடுக்க மாட்டார்கள்.

சில பாடசாலைகளில் முதலாம் தரத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் பணம் அறிவிடப்பட்டிருந்தால் அது சம்பந்தமாக வழங்கப்பட் டிருக்கும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேன்முறையீட்டைச் செய்யலாம். ஆனால் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது -என்றுள்ளது. (த-4)

## கிண்ணத்தை தனதாக்கியது டயமன்ஸ்



யாழ்ப்பாணம், பெப் 12.
கரவெட்டி பிரதேச இளைஞர் கழங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டத் தொடரில் டயமன்ஸ் இளைஞர்கழக அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தை கைப்பற்றியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மனோகரா இளைஞர் கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் இளைஞர் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா இளைஞர் கழக அணியினர் 5 பந்துப் பரிமாற்ங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றனர். அதிக பட்சமாக சகிந்திய 22 ஓட்டங்களையும், தர்சிஜா 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டயமன்ஸ் இளைஞர் கழக அணி சார்பில் தர்சினா 2 இலக்குகளையும் நிரூபினி ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

44 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி யென எட்டக்கூடிய இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டைமன்ஸ் இளைஞர்கழக அணியினர் 5பந்துப் பரிமாற்றங்கள்நிறைவில் 3 இலக்கினை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றனர் இதில் விதுர்சா 19 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் மனோகரா இளைஞர் கழக அணி சார்பில் தனுசிகா, விதுர்சா மற்றும் சாதனா ஆகியோர் தலா ஓர் இலக்கினை வீழ்த்தினர். (த-23-ரி)

# ஆசிரிய மாணவன் விபத்தில் உயிரிழப்பு

தென்மராட்சி, பெப். 13
கைதடி- கோப்பாய் வீதியில் கோப்பாய் பாலத்திற்கு அண்மையில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

மட்டுவிலைச் சேர்ந்த மயில்வாகனம் நீகன் (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த ஆசிரிய மாணவன் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களில் ஒருவர் காயமடைந்தார்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் காணப்பட்ட இருவரும் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.காயமடைந்தவருடன் பயணித்த சுன்னாகத்தைச் சேர்ந்த 33 வயது இளைஞருக்கு கை, கால் முறிவு ஏற்பட்டபோதிலும் அங்கிருந்து நடந்து சென்று ஓட்டோவில் தப்பியோடியபோது சாவகச்சேரி பொலிஸார் துரத்திச் சென்று உரும்பிராயில் வைத்துப் பிடித்து சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அனுமதித்துள்ளனர். இவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (த-9)

## உள்ளூர் மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப் 13.
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன.

இன்றுமாலை3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மின் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அன்பாலயம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23,ரி)

# நிரந்தர நியமனம் கோரும் ரயில் கடவைக் காப்பாளர்

தென்மராட்சி, பெப். 13
ரயில் சேவை கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் பொலிஸாரால் ரயில்வே கடவைகளுக்கு நியமிக்கப்பட்ட கடவைக் காப்பாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியுள்ளனர்.

முன்னர் ரயில் சேவை இடம்பெற்ற காலத்தில் தற்காலிகக் கடவைக் காப்பாளர்களாகக் கடமையாற்றிப் போதிய வயதுடையவர்கள் ரயில் சேவை இல்லாததால் இடை நிறுத்தப்பட்ட தமது நியமனத்தை மீண்டும் வழங்குமாறு யாழ். அரச அதிபரைக் கோரி வருகின்றனர்.

இந்த நிலையில் பொலிஸார் மூலம் நியமனம் பெற்று பதில் கடவைக் காப்பாளர்களாகக் கடமையாற்றுவோரும் தமக்கு வழங்கப்படும் 7 ஆயிரத்து 500 ரூபா தமது குடும்ப சீவியத்தை நடத்தப் போதுமானதாக இல்லாத தால் நிரந்தர நியமனம் வழங்குமாறு ரயில்வே திணைக்களத்தைக் கோரி யுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## சதுரங்க போட்டி

யாழ்ப்பாணம் பெப்ரவரி 13.
இலங்கை சதுரங்கச் சமமேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் ஆரம்ப நிலையினருக்கான சதுரங்கப் போட்டி நாளை காலை 8 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம் என்று சதுரங்க சம்மேளனம் அறிவித்துள்ளது. (த-ரி)

# கடுகதிகள் சாவகச்சேரியில் தரிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

தென்மராட்சி,பெப்.13
நகரங்களுக்கிடையிலான கடுகதி (இன்ரசிற்றி )ரயில்களைச் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் தரித்துச் செல்லக் கோரி அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான நகரமாகக் காணப்படும் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் கடுகதி ரயில்கள் தரித்துச் செல்வதில்லை. இதனால் ரயிலில் பயணிக்கும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கொடிகாமம், நாவற்குழி போன்ற ரயில் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட பகுதி மக்கள், வர்த்தகர்கள் ஆகியோருடன் மட்டுவில், சரசாலை, நுணாவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கும் சாவக்சேரி ரயில் நிலையம் பிரதானமாக உள்ள போதிலும் ஏனைய ரயில் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் இன்ரசிற்றி ரயில்களைத் தரித்துச் செல்லக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

3 மாதங்களுக்கு முன்னர் சாவகச்சேரி நகர சபையினால் இன்ரசிற்றி ரயில்கள் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் தரித்துச் செல்ல வேண்டு மென தீர்மானிக்கப்பட்டு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.(த-9)

# வ[illegible]கை சூடியது வல்வை

யாழ்ப்பாணம், பெப். 13
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை ஆரம்பமானது.

முதல் நாள் ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பிறைட் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆட்டம் தொடங்கிய சில நிமிடங்களில் வல்வை விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்கான முதலாவது கோலை அடித்து விறுவிறுப்பை அளித்தனர். தொடர்ந்து ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் தமது அணிக்கான முதல் கோலை அடித்து வல்லையைப் பழி தீர்த்தனர் பிறைட் ஸ்ரார் அணியினர். இதனால் ஆட்டம் மேலும் சூடு பிடித்தத் தொடங்கியது. ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணியினரும் தலா ஒரு கோலையே பெற்றிருந்தனர்.

எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக ஆட்டத்தின் இரண்டாம்பாதி ஆரம்பமானது. ஆனால் இரு அணியினராலும் எதிர் அணியின் பாதுகாப்பு அரண்களைத் தகர்க்க முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-ரி,23)





TONER HOUSE
195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna.
T.P.NO: 0213003399, email:tonerhouse@nitlk

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

IELTS A1 B1 B2
MBA(London) Qualified Trainer Call: 0213208342
Visit: http://edu.kugroup.info/ielts
0777302882 IELTS Centre@KU
K.U Education, No 626 1/1, K.K.S Rd, Jaffna

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMASஐ வழங்குகிறோம். யாரும் படிக்கலாம். மொழிபெயர்ப்புகள்... யாழ், வன்னி, வவுனியா, & மன்னாரைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWISS... செல்கிறார்கள்.
DELF A1 International Diploma : வகுப்பு ஆரம்பம் Feb 14.
பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3500 ஏனையோருக்கு 9000
உடன் அழைத்து பதிவுசெய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.


தவறிவிட்டது
இராசவீதி, அச்சுவேலி, தொண்டைமானாறு ஊடாக செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்று வந்தபோது கதிரேசபிள்ளை தர்ஸனன் என்பவரின் மோட்டார் சைக்கிளுக்கான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரமும், வேறு ஆவணங்களும் அடங்கிய பை கடந்த 03. 02.2015 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
077 248 7096 . 077 801 3130 (58730)(3,7,8)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.